நன்றி - நூலகத்திட்டம்


සරිනිහර්
SARINIHAR

# சரிநிகர்


சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.


அடுத்த இதழ்
ஓகஸ்ட் 6 இல்

இதழ் 200 | ஜுலை 06 - ஓகஸ்ட் 06, 2000 | விலை ரூபா 10. 00










## புதிய சிங்கள இனவாத எழுச்சி!





## மீண்டும் தணிக்கை!



## எந்தப் பயனும் அற்ற தீர்வு!

நன்றி - நூலகத்திட்டம்



## மட்டக்களப்பு:

# "பயங்கரவாதிகள்" தகர்க்கும் பாலங்கள்!

செஞ்சீனத்திலும், வியட்நாமிலும், கியூபாவிலும் படையினர் ஆலைகள் நிர்மாணிப்பதும் பாலங்கள் கட்டுவதும் பற்றி அறிந்திருக்கிறோம். ஆனால் நம்நாட்டிலோ பாலங்கள் தகர்க்கும் படையினரைத் தான் காண்கிறோம்.

மட்டக்களப்பு-வாழைச்சேனை நெடுஞ்சாலையில் இருந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வயற்பிரதேசங்களை நோக்கிச் செல்லும் உள்வீதிகளின் மதகுகளை படையினர்உடைத்து போக்குவரத்தைத் தடை செய்திருக்கிறார்கள்.

காரணம் வேறொன்றுமில்லை. புலிகள் வாகனங்களைக் கடத்தி அப்பாதைகளால் தங்களுடைய பகுதிக்குக் கொண்டு சென்று விடுகிறார்களாம்.

அதனைத் தடுப்பதற்கு உள்ள ஒரேவழி மதகுகளைத் தகர்ப்பது தான் என்ற ஒரே முடிவுக்கு படையினர் வந்திருக்கிறார்கள்.

விளைவு உப்போடை வீதி மதகு, கொம்மாதுறை தீவு வீதி மதகு என்பன குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன. அது தவிரவும் சித்தாண்டி சந்தண மடு வீதியால மக்கள் போக்குவரத்துக்குப் படையினர் தடைவிதித்துள்ளனர்.

மட்டக்களப்பு நகரில் இருந்து வடக்காக 20 கி.மீற்றரில் வந்தாறுமூலை உள்ளது. அங்கிருந்து மேற்கே உள்ள பகுதி வாவிக்கு அப்பால் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. அப்பகுதியிலேயே ஏராளமான வயல் நிலங்கள் உள்ளன.

இப்பகுதியில் பெருவாரிக்கண்டம், குளத்துவெட்டை, மயிலவட்டுவான், சமுளக்குடா, பலாமடு ஆகிய வயல் கண்டங்களில் வந்தாறுமூலை, மாவடிவேம்பு, சித்தாண்டி, கொம்மாதுறை போன்ற கிராம மக்கள் வயல செய்து வருகின்றனர். இவர்கள் சுமார் 15 கி.மீற்றர் துாரம் சுற்றி கறுத்தப்பாலம் சோதனைச் சாவடி ஊடாக செல்ல வேண்டி உள்ளது.

அத்தோடு இச்சோதனைச் சாவடி ஊடாக உழவு இயந்திரங்களைக் கொண்டு செல்லவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. படையினரால் தகர்க்கப்பட்ட மதகுகளுக்கு கீழாக நீர்ப்பாசனத் திணைக்கள கால்வாய்கள் செல்வதால் பாதை தடைப்பட்டு நீர்ப்பாய்ச்சலும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது சிறுபோக நெல்விதைப்பு நடைபெற்று வருகின்ற நிலையில் விவசாயிகளின் போக்குவரத்து மற்றும் முக்கிய விவசாயச் சாதனமான உழவு இயந்திரத்தைக் கொண்டு செல்வதில் ஏற்பட்டுள்ள சிரமங்கள் உற்பத்தியைப் பெரிதும் பாதிக்கலாம் என விவசாயிகள் அஞ்சுகின்றனர்.

ஏற்கனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. சிறுதொகையினரே வயல் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் ஒரு காலத்தில் நெல்லில் தன்னிறைவு கண்டு வந்த மட்டக்களப்பு மக்கள் தற்பொழுது வேறு மாவட்டத்தில் கையேந்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால் தற்பொழுது வயல் செய்துள்ள விவசாயிகளுக்கு போக்குவரத்து மற்றும் உழவு இயந்திரங்களைக் கொண்டு செல்வதற்கு அனுமதியைப் பெற்றுக் கொடுக்காது விட்டால் மேலும் பல சிக்கல்கள் தோன்ற வாய்ப்புகள் உள்ளன.

இலங்கை வானொலி மற்றும் தொலைக்காட்சி செய்தித் தயாரிப்பாளருக்கு படையினர் பாலத்துக்குக் குண்டு வைத்துத தகர்க்கும் உண்மை தெரிவதால் மிகுந்த தார்மீகப் பொறுப்புடன் பயங்கரவாதிகள் குண்டு வைத்துத் தகர்த்தனர் என்று செய்தியைச் சரிக்கட்டி விடுவார்.

பிறகென்ன பயங்கரவாதிகள் பாலம் தகர்த்தார்கள்.

## தமிழ் மாணவர்களின் கல்வி:

# உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் அச்சுறுத்தல்!

இந்த வாரம் கல்வி பற்றிய இரண்டு விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

ஒன்று, 2001 ஆம் ஆண்டு கல்விப் பாடநூல் வெளியீட்டுத்திணைக்களம் வெளியிடவிருக்கும் தமிழ்மொழிப் பாடநூல்களில் இடம்பெற வேண்டிய திருத்தங்கள் பற்றி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சமர்ப்பித்த யோசனைகள் கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் நிராகரிக்கப்பட்டு விட்டன.

இரண்டாவது. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் யுத்தப்பிரதேசங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கும் ஒரு நடவடிக்கையாக அவர்கள் கடமையாற்றும் இடங்களில் விடுதிகளை அமைத்துக் கொடுப்பதற்கு உலக வங்கி ஒதுக்கிய பணம் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் இன்னும் செலவழிக்கப்படாமல் இருப்பது தெரிய வந்துள்ளது.

தமிழ்மொழி மூல பாடநூல்கள் தயாரிப்பில் அண்மைக்காலங்களில் மிகுந்த குழறுபடிகள் இருந்து வருகின்றன. 1999ஆம் ஆண்டிற்குரிய தமிழ்மொழிப் பாடநூல்களில் காணப்பட்ட எழுத்துப் பிழைகளிலும் பார்க்க மிகக் கூடுதலான பிழைகள் 2000 ஆம் ஆண்டு கல்வி வெளியீட்டுத்திணைக்களம் வெளியிட்ட தமிழ்மொழி மூலபாட நூல்களில் காணப்பட்டன. 2001ஆம் ஆண்டில் வெளியாகவிருக்கும் தமிழ்மொழிப் பாடநூல்களில் எழுத்துப்பிழைகள் சிலவேளை குறைவாக இருக்கக்கூடும். ஆனால் அப்பாடநூல்களில் கருத்துப்பிழைகள் மற்றும் திரிபுகள் நிறைய இருக்கப்போகின்றன. திருத்தப்பட வேண்டிய கருத்துப்பிழைகள் பற்றி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சமர்ப்பித்த திருத்தங்களைப் உயர் கல்வி அமைச்சின் பாடநூல் தயாரிப்புப் பிரிவினர் நிராகரித்து விட்டனர்.

குறிப்பாக வரலாறு, சமூகக் கல்வி, மற்றும் மொழி சம்பந்தமான பாடநூல்களில் சிறுபான்மை இனத்தவரை அவமதிக்கும் வகையிலான விடயங்கள் இருப்பது தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டப்பட்டும் அமைச்சு அதனைக் கவனத்தில் எடுப்பதாயில்லை. தமிழ் மக்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கான பாடநூல்களைத் தாமே தயாரிப்பதற்கான வழி வகைகளை மேற்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்றாகிறது. அது அவர்களுடைய நாட்டில் தான் சாத்தியம்.

மற்றைய பிரச்சினையான விடுத அமைக்கும் நடவடிக்கைக்கு பணம் ஒதுக்கப்பட்டும் அதனை நிறைவேற்றி முடிக்காததற்கு காரணமென்ன? பேரினவாதிகளின் தடையா அல்லது பணம் ஒதுக்கப்படவில்லையா?

வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சில் உள்ள தமிழ் அதிகாரிகளின் அசமந்தத்தைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்? தமிழ் மாணவர்களின் கல்வியை ஒரு புறம் பேரினவாதம் நசக்குகிறது. மறுபறம் இவ்வாறான பொறுப்பற்ற அதிகாரிகள் அழிக்கிறார்கள். இந்த அதிகாரிகளை என்ன செய்யலாம்?

# தமிழர்களுக்கும் இல்லை! முஸ்லிம்களுக்கும் இல்லை!

இலங்கை மத்திய சுகாதாரம் மற்றும் சுதேசிய அமைச்சு ஜுன் 20 ஆம் திகதி 274 சுதேச மருத்துவர்களுக்கு சமாதான நீதிவான் பட்டங்களை வழங்கி கௌரவித்தது. அவர்களில் வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சித்த வைத்தியம் மற்றும் யுனானி வைத்தியம் ஆகிய துறைகளைச் சேர்ந்த தமிழ் மற்றும் முஸ்லிம் வைத்தியர் ஒருவர் கூட இடம்பெறவில்லை.

வடக்கு-கிழக்கு மாகாண சுதேச வைத்திய திணைக்கள வட்டாரங்கள் இத்தகவலை தெரிவித்தன.

நாடு முழுவதிலும் உள்ள சுதேச வைத்தியர்களில் பிரபல்யமானவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு சமாதான நீதிவான் பட்டங்களை வழங்கிக் கௌரவிப்பது என்று சுகாதாரம் மற்றும் சுதேசிய அமைச்சு தீர்மானித்து மாகாண ஆயுள்வேத திணைக்களங்களிடமிருந்து தகுதியான சுதேச வைத்தியர்களின் பெயர்களைக் கோரியிருந்தது. அதற்கிணங்க எல்லா மாகாண பிரதேசங்களைச் சேர்ந்த பிரபல்யமான சுதேச வைத்தியர்களின் பெயர்களை மத்திய அமைச்சுக்கு அனுப்பியிருந்தன.

கிழக்கு மாகாண ஆயுள்வேதத் திணைக்களமும் சித்த மற்றும் யுனானி வைத்தியர்களின் பெயர்களை மத்திய அமைச்சுக்கு அனுப்பியிருந்தும் ஒருவரைக் கூட மத்திய அமைச்சுக்கு தெரிவு செய்து சமாதான நீதிவான் பட்டம் வழங்கவில்லை.

வைத்தியர்களாக தமிழர்களும் யுனானி வைத்தியர்களாக முஸ்லிம்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சபாஸ் டிரோன்!

"இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமேயான நாடு. அந்த நாட்டில் வாழ்கின்ற ஏனைய இனங்கள் சிங்களவர்களது நாட்டில் வாழும் பிற இனத்தவர் என்று தான் கொள்ளப்பட வேண்டும்".

- இது சிங்கள இனவாத சக்திகளுக்கு தலையேற்றிருக்கும் சிங்கள வீர விதானவின் கோட்பாடு.

சிங்கள இனவாதிகளின் இந்தக் கோட்பாட்டுக்கு அரசாங்கக் கட்சியிலும், எதிர்க்கட்சியிலும் பலர் ஒப்புக்கொடுத்துப் பேசிவருகிறார்கள்.

ஆயினும், அண்மையில் தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்திருக்கும் ஒரு கருத்து பலரதும் கவனத்துக்கு உரியது.

'இந்த நாடு சிங்கள பௌத்தர்களின் நாடு என்பதை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது... இலங்கை பல்லின பல்மத கலாசார மக்களைக் கொண்ட ஒரு நாடு... இலங்கை சிங்களவருக்கு மட்டும் உரித்தான நாடு அல்ல. பௌத்தர்களுக்கு மட்டும் உள்ள மண்ணுமல்ல. இது பௌத்த நாடென்றால் நானும் அங்கு வாழமுடியாது. ஏனென்றால், நான் ஒரு கத்தோலிக்கன்...

தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள், கத்தோலிக்கர்களுக்கு இந்த நாடு சொந்தமில்லை என்று எவராலும் சொல்வார்கள் ஆனால், அவர்களுக்கு இந்த மண் சொந்தமானதல்ல. அவர்கள் போய் கடலில் குதிக்கட்டும்"

ஆம், சிங்கள இனவாதிகளது பேரினவாத மனோபாவம் குறித்து டிரோன் பெர்னாண்டோ தெரிவித்த இந்தக் கருத்துக்கள் நிச்சயம் தமிழ் முஸ்லிம் மக்களின் மத்தியில் நம்பிக்கையை ஊட்டுகின்ற கருத்துக்கள் தான். அவருக்கு ஒரு 'சபாஷ்' சொல்வோம்!

ஆனால், அரசியல் லாபங்களுக்காக தமது மத, இன உணர்வுகளை அடகு வைத்து விட்டு சிங்கள இனவாதிகளைவிட, தீவிர இனவாதிகளாகத் தம்மை மாற்றிக் கொண்ட தலைவர்கள் பற்றிய வரலாறை நாம் மறந்துவிட முடியாது!

ஜே.ஆர்.ஜயவர்த்தனவும், எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவும் இதற்கு மிகச் சிறப்பான உதாரணங்கள்.

நாட்டை இனவாதிகள் கையில் கொடுப்பதா அல்லது இனவாதிகளை ஒதுக்கி நாட்டைக் காப்பாற்றுவதா என்ற தீர்க்கமான முடிவுக்கு அரசியல் தலைவர்கள் வந்தாக வேண்டிய தருணம் இது.

ஆனால், தலைவர்களுக்கு குறுகிய நலன், அதிகாரம் என்பவற்றில் இருக்கும் பேராசையை கட்டுப்படுத்துவதற்கு என்ன செய்யலாம்? இதுதான் இன்று விடை காணப்படவேண்டிய முக்கிய கேள்வி.

# உங்களுக்கு என்ன தோன்றுகிறது?

கத்தியை ஓங்கியபடி ஒருவன் வெட்ட வருகிறான்.

வெட்டுப்படப் போபவர் அலறியடித்துக் கொண்டு "ஐயோ கொல்கிறான் என்னைக் கொல்கிறான்" என்று கத்துகிறார்.

பார்த்துக் கொண்டிருக்கும் ஒருவர் சொல்கிறார்:

'இன்னமும் கத்தி அவரது உடலில் படக்கூட இல்லை' வெறுமனே கொல்கிறான், கொல்கிறான்' என்று கத்துகிறார்... இது கத்தியுடன் வருபவனை கொலைகாரன் என்று காட்டுவதற்காக செய்யப்படும் ஒரு கத்தல் தான்...!

- இந்தச் சம்பவத்தை வாசிக்கையில் உங்களுக்கு என்ன தோன்றுகிறது?

கொலைகாரன் மற்றவரை வெட்டிவிட வேண்டும் என்று மூன்றாமவர் ஆசைப்படுகிறார் என்று தோன்றவில்லையா?

உங்களுக்கு அப்படி நிச்சயமாகத் தோன்றியிருக்கும்.

ஆனால், அப்படித் தோன்றாத ஒருவரும் எம்மத்தியில் இருக்கிறார். அவர் வேறு யாருமில்லை! சாட்சாத் டக்களஸ் தேவானந்த எம்.பி. அவர்கள் தான்!

"இன்னமும் முழுமை பெறாத பரிசீலனைக்கே கிட்டாத ஒரு தீர்ப்பைத் தாம் நிராகரிப்பதாக புலிகள் கூறுவது, பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையின் தீாப்பதில் அவர்களுக்கு நாட்டமில்லை என்பதையே காட்டுகிறது" என்கிறார் அவர். தமிழ் கார்டியன் பத்திரிகைக்கு பாலசிங்கம் அளித்த பேட்டியில் வந்த ஒரு பதிலில் இந்த அரசியலமைப்பு திட்டத்திருத்தை தாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லியிருந்தார். இதற்குப் பதிலாகத் தான் டக்ளசின் மேற்சொன்ன அறிக்கை வெளிவந்திருந்தது.

பார்க்காமல் சொன்னரா, பார்த்துச் சொன்னரா என்பது ஒரு புறமிருக்க, இந்த அரசியல் தீர்வுப்பொதியை ஏன் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதற்காக பாலசிங்கம் சொன்ன காரணங்கள் டக்ளஸ் அவர்களின் பார்வையில் எப்படிப்படாமல் போயின என்பது தான் புரியவில்லை.

புலிகளுக்கு பேச்சுவார்த்தையில் நாட்டமில்லை என்று சொல்லி அதை ஸ்தாபித்துவிட வேண்டும் என்பதில் டக்ளஸுக்கு உள்ள அக்கறையைத் தவிர வேறெதையும் இதிலிருந்து விளங்கிக் கொள்ள முடியவில்லை.

சரி, டக்ளஸிடம் ஒரு கேள்வி.

1995இல் முதன் முதலாக அரசாங்கம் இந்தப் பொதியை வெளியிட்ட போதே அது போதாது என்று கூறி புலிகள் நிராகரித்திருந்தார்கள். அதற்குப் பிறகு அந்தத் தீர்வுப் பொதி சிங்கள பௌத்த இனவாத சக்திகளின் விருப்பு வெறுப்புகட்கேற்ப வெட்டிக் குறைத்த சங்கதி ஊரெல்லாம் தெரிந்த ஒன்று. அது டக்ளஸுக்கு தெரியாதா?

அல்லது அன்று இருந்ததைவிட சந்திரிகா அரசாங்கம் தமிழ் மக்களது அபிலாஷைகளைப் புரிந்து கொண்டு மேலதிக விடயங்களை அதில் சேர்த்திருக்கின்றது என்று கூறுகிறாரா?

அப்படியானால், அதைச் சொல்ல வேண்டியது தானே!

ஒரு வேளை புலிகள் நிராகரித்தால் தங்களது அறிக்கைகள் கருத்துக்களுக்கு அரசாங்கம் காது கொடுக்கப் போவதில்லை என்று பயப்படுகிறாரோ என்னவோ?

வவுனியா

# காணாமல் போகும் இளைஞர்கள்! காணத் தவிக்கும் பெற்றோர்கள்!!

வவுனியா பகுதியில் இராணுவ பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ள போதிலும் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருக்கின்றார்களா என்பதைக் கண்டுபிடிப்பதற்காக அடிக்கடி சுற்றிவளைப்பு தேடுதல்கள் நடைபெறுகின்றன. இவ்வாறான தேடுதல்களின் போது சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்படுபவர்கள் விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்படுகின்றார்கள்.

இதேவேளையில், திடீர் திடீர் என இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவதும், காணாமல் போவதும் மிகச் சாதாரண நிகழ்வாக வவுனியாவில் இடம்பெற்று வருகின்றது. இரகசியமாகக் கிடைக்கின்ற தகவல்கள், விசாரணைகளில் கிடைக்கின்ற தகவல்கள் என்பவற்றின் அடிப்படையில் விசாரணைக்காகத் தேவைப்படுபவர்கள் அவர்களின் வீடுகளில் அல்லது வேலைத்தளங்களில் வைத்து கைதுசெய்யப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றார்கள்.

இவ்வாறாகக் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்படுபவர்கள் ஒரு சிலரின் உறவினருக்கு யார் வந்து கைது செய்து கொண்டு செல்கின்றார்கள் என்ற விபரம் தெரிவிக்கப்படுகின்றது. பலர் யாரால் என்ன தேவைக்காக எங்கு கொண்டு செல்லப்படுகின்றார்கள் என்பது தெரியாத நிலையில் குடும்பத்தினர் தவிக்க நேரிடுகின்றது.

கைது செய்யப்படுவது நிச்சயமாக குடும்பத்தினருக்குத் தெரிந்தாலும் கைது செய்தவர் யார் என்பது தெரியாத நிலையில் சிவிலுடையில் வருபவர்கள் நடந்து கொள்கின்றார்கள்.

இராணுவத்தினரும் சி.எஸ்.யு என்றழைக்கப்படுகின்ற கிளர்ச்சித் தடுப்பு பொலிஸ் பிரிவினரும் இவ்வாறு கைது செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். இந்த வகையில் கைது செய்யப்படுபவர்கள் பற்றிய விபரங்கள் அநேகமாக உடனடியாகத் தெரியவருவதில்லை.

காணாமல் போகின்றவர்கள் தொடர்பாக வவுனியாவில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்கு உறவினர்கள் முறைப்பாடு செய்ததும், இவர்கள் இராணுவத்தினரின் அல்லது பொலிசாரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்களா என்பதை விசாரித்து அறிந்து உறவினர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறான முறைப்பாடுகளில் பலர் இன்னும் கண்டறியப்படாமல் இருப்பதாகவும், கடந்த 6 மாதங்களில் மாத்திரம் 17 பேர் காணாமல் போயுள்ளார்கள் என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினரின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் ஜுன் மாதம் 30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியிலேயே இவ்வாறானவர்கள் காணாமல் போயுள்ளார்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

படையினருக்கும் பொலிசாருக்கும் ஒருவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணை செய்வதற்கு நாட்டில் உள்ள சட்டங்கள் அதிகாரத்தை வழங்கியுள்ளது. ஆனால், கைது செய்யப்படுபவர்கள் என்ன காரணத்திற்காக இரகசியமான முறையில் கைது செய்யப்படுகின்றார்கள் என்பது பொதுமக்களுக்குப் புரியாத புதிராகவே உள்ளது. சட்ட அதிகாரம் வாய்ந்தவர்கள் முறைப் படி வெளிப்படையாகக் கைது செய்து கொண்டு செல்வதையும், யாரைக் கைது செய்தார்கள், அவர்களை எங்கு கொண்டு செல்கின்றார்கள் என்பது பற்றிய தகவல்களை அவர்கள் உத்தியோக பூர்வமாக குடும்பத்தினருக்கு அறிவித்துச் சென்றால் உறவினர்கள் கலவரமடைய மாட்டார்கள். கைது செய்யப்பட்டவர்களைச் சென்று பார்க்கலாம், அவர்களை விடுதலை செய்வார்கள் என்று நம்புவதற்கு இடமிருக்கும். அதிகாரம் வாய்ந்த படையினரும் பொலிசாரும் இரகசியமாகக் கைது செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால், அவர்கள் மீது பொதுமக்கள் நம்பிக்கை இழப்பதற்கு வசதியாகிவிடுகின்றது. ஏனென்றால் சட்ட விரோதமானவர்களே இரகசியமாக ஆட்களைப் பிடித்துச் செல்கின்றார்கள் என்று உறுதியாகக் கூற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

வவுனியாவில் அண்மையில் நலன்புரி நிலையங்களில் சுற்றி வளைத்துத் தேடுவதும், அங்கிருந்து ஆட்களைப் பிடித்துச் சென்று விசாரணை செய்வதும் இப்போது அதிகமாக நடைபெற்று வருவதாகப் பொதுமக்கள், குறிப்பாக இடம்பெயர்ந்து இத்தகைய நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ளவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

பூந்தோட்டம், சிதம்பரபுரம், பாவற்குளம் போன்ற நலன்புரி நிலையங்களிலும், வவுனியா குட்ஷெட் வீதியில் உள்ள இடைத்தங்கல் முகாமிலும் இவ்வாறான சுற்றி வளைப்பும் கைது செய்தலும் நடைபெற்று வருகின்றன. மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு வருகின்ற முறைப்பாடுகளில் கணிசமானவை, அண்மைக் காலமாக நலன்புரி நிலையங்களில் இருந்து வருவதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா இணைப்பாளர் எஸ்சிறிதரன் தெரிவிக்கின்றார்.

கடந்த 6 மாதங்களில் காணாமல் போயுள்ளவர்களின் விபரங்கள் வருமாறு:

*வவனியாவில் வைத்து ஜனவரி மாதம் 30 ஆம் திகதி காணாமல் போன வவுனியா நவீன சந்தையைச் சேர்ந்த மகேந்திரராஜா கஜமுகன் (19),ஜனவரி 29 ஆம் திகதி காணாமல் போயுள்ள தட்சணா மருதமடு நன்புரிய நிலையத்தைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை தர்மகுலநாதன் (18), பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி காணாமல் போயுள்ள பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தின் யுனிட் 2 ஐச் சேர்ந்த திருநாவுக்கரசு ஜெயசங்கர் (28) மார்ச் மாதம் 3 ஆம் திகதி காணாமல் போயுள்ள பண்டாரி குளத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை பாலச்சந்திரன் (29) பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி காணாமல் போயுள்ள மகாலிங்கம் திவாகரலிங்கம் கணுக்கேணி முள்ளியவளையைச் சேர்ந்த மகாலிங்கம் திவாகரலிங்கம், (இவர் எங்கு வைத்து காணாமல் போனார் என்பதே தெரியவில்லை)*

*மார்ச் மாதம் 24 ஆம் திகதி காணாமல் போயுள்ள தேக்கங் காட்டைச் சேர்ந்த சஞ்சயபாபு (15) ஜனவரி மாதம் 18 ஆம் திகதி காணாமல் போயுள்ள குடாகச்ச கொடியைச் சேர்ந்த புஞ்சி பண்டாகே ரணசிங்க (49) மார்ச்மாதம் 23 ஆம் திகதி காணாமல் போயுள்ள நேரியகுளம் வீரபுரத்தைச் சேர்ந்த நமசிவாயம் யோகராஜா (33) ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி காணாமல் போயுள்ள தேக்கங்காட்டைச் சேர்ந்த குணரத்தினம் காண்டீபன் (19) மே மாதம் 8 ஆம் திகதி காணாமல் போயுள்ள புத்தளம் கற்பிட்டியைச் சேர்ந்த மொகமட் பாகிஸ் (22) மே மாதம் 13 ஆம் திகதி காணாமல் போயுள்ள வேப்பங்குளம் 7 ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த இரட்ணம் விஜயகமல் (25) மே மாதம் 9 ஆம் திகதி காணாமல் போயுள்ள குட்ஷெட் வீதியில் உள்ள இடைத்தங்கல் முகாமில் இருந்தவரான பாலசிங்கம் தவராஜா (28) மே மாதம் 25 ஆம் திகதி காணாமல் போயுள்ள தோணிக்கல் ஆலடி வீதியைச் சேர்ந்த சிற்றம்பலம் கருணாகரன் (29) ஜுன்மாதம் 5 ஆம் திகதி காணாமல் போயுள்ள கோவில் குளம் வீதி, ஆசிகுளத்தைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி ரஞ்சித் குமார் (20) ஜுன் மாதம் 22 ஆம் திகதி காணாமல் போயுள்ள வேப்பங் குளத்தைச் சேர்ந்த தம்பையா விஜயகுமார் (26) ஜுன் மாதம் 8 ஆம் திகதி காணாமல் போயுள்ளவர்களான சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுபாஸ் (18), வேலு தியாகராஜா (23) ஆகியவர்கள் எங்கு உள்ளார்கள். அவர்களை யார் தடுத்து வைத்திருப்பது, போன்ற விபரங்களைத் திரட்ட முடியாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.*

இவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளில் மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அண்மைய அவசரகாலச் சட்டத்தின் கீழ், கைது செய்யப்படுபர்கள் யாரால் கைது செய்யப்படுகின் றார்கள், அவரை அவர்கள் எங்கு கொண்டு செல்கின்றார்கள் என்பதைத் தெரிவிக்கும் வகையில் உத்தியோகபூர்வமான பற்றுச் சீட்டு வழங்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது, ஆயினும் அந்த நடைமுறைகள் வவுனியாவில் கைக் கொள்ளப் படுகின்றதா என்றால் இல்லையென்றே கூற வேண்டியிருக்கின்றது.

**-தீபன்**

# புலிகளிடம் மீண்டும் புலிக்குணம்?


தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் கறைபடிந்த அத்தியாயங்களாகிய காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை, வடக்கு முஸ்லிம்களின் பலவந்தமான வெளியேற்றம் போன்ற துரதிருஷ்டமான நிகழ்வுகள் இடம்பெற்று 10 ஆண்டுகள் நிறைவடையும் இக்காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் முஸ்லிம்கள் தொடர்பான தங்கள் நிலைப்பாட்டில் இன்னும் மாறவில்லை. முஸ்லிம்கள் மீது வன்முறைகளை பிரயோகிக்க மீண்டும் தயாராகிவிட்டார்களோ எனச் சந்தேகம் கொள்ளும் வகையில் கிண்ணியாவில் ஒரு சம்பவம் இடம் பெற்றிருக்கின்றது.

கிண்ணியா வாசியொருவரின் மோட்டார் சைக்கிளை புலிகள் அபகரிக்க முயன்று அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவே வன்மமான முறையில் புலிகள் அவரை கொலை செய்திருக்கின்றார்கள். இச்சம்பவத்தின் உடன் எதிரொலியாகவும் இதேபோன்று கிண்ணியாவில் இடம்பெறுவரும் மோட்டார் சைக்கிள் அபகரிப்பு, கப்பம் கோரல் நடவடிக்கை என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக கிண்ணியா மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளார்கள். புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட இப்படுகொலை, அபகரிப்பு நடவடிக்கை வடகிழக்கில் வாழும் முஸ்லிம்கள், மத்தியில் மீண்டும் அச்சத்தினையும் அதேபோன்று புலிகள் முஸ்லிம்களின் நிரந்தர விரோதிகளா என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

வடகிழக்கு வாழ் முஸ்லிம் மக்கள் மீது விடுதலைக்குழுக்கள் மேற்கொண்ட அநீதிகள் மறக்கப்பட்டு இயல்பான வாழ்க்கை முறைகள் மிக அன்னியோன்யமாக இடம்பெற்று வருகின்றது. 1990ம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற சகப்பான நிகழ்வுகளின் அச்ச நிலை முற்றாக தணிக்கப்பட்டு தமிழ், முஸ்லிம் உறவு ஸ்திரமடைந்து அன்றாட வாழ்வியல் நடவடிக்கைகள் ஒருவரில் ஒருவர் தங்கிநின்றதாகவே இடம்பெறுவருகின்றது.

தமிழ்ப் பிரதேசங்களில் முஸ்லிம்கள் வர்த்தகத்தில் ஈடுபடுவதும், அதேபோன்று முஸ்லிம் பிரதேசங்களில் தமிழர்கள் வர்த்தகத்தில் ஈடுபடுவதும் தமிழ்க்கிராமங்களின் ஊடாக முஸ்லிம்கள் அச்சமற்று பிரயாணத்தில் ஈடுபடுவதும், இன்னும் சில பிரதேசங்களில் மீன்பிடி, விவசாய முயற்சிகள் இருதரப்பினராலும் பரஸ்பர நல்லுறவுடனும் நடைபெறுகின்றது.

இந்நிலையில் புலிகளின் இந்நடவடிக்கை இரு சமூகங்களுக்கிடையிலும் மீண்டும் விரிசலை தோற்றுவித்து விடக்கூடாது.



வருவாய்த்துறை,
நிதித்துறை,
ஆண்டாங்குளக். கோட்டம்,
மட்டு-அம்பாறை மாவட்டம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
.......2000

திரு/திருமதி/செல்வி.......................................
.................................அவர்கட்கு

அன்புடையீர்!
தங்களுடன் சில முக்கிய விடயம் சம்மந்தமாக நாம் பேசவேண்டியுள்ளதால் எதிர்வரும் ....../....../2000 அன்று மு.ப/பி.ப......மணிக்கு.............. ..........பகுதியில் அமைந்திருக்கும் எமது செயலகத்துக்கு தவறாது சமுகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்

"நன்றி"

இவ்வண்ணம்

குறிப்பு.......................................

" புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் "

ஒற்றுமையுடனான வாழ்க்கை என்றும் தொடரவேண்டும். தமிழ் முஸ்லிம் ஐக்கியத்திற்கு ஆப்பு வைக்கும் செயலில் புலிகள் ஈடுபடக்கூடாது அவ்வாறு ஈடுபடுவர்களானால் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமிழ் மக்கள் மீது மேலாட்சி செலுத்தும் சிங்களப் பேரினவாதம் இராணுவ ரீதியான நகர்வுகள் எதிர்பாராத பயனை ஈட்டித்தராத நிலையில் தமிழ் முஸ்லிம் ஐக்கியத்தை குலைத்து இரு சமூகங்களையும் மோதவிடும் தந்திரமாக இப்படுகொலையைப் பயன்படுத்தி முஸ்லிம்கள் மீது தாக்குதல்களை தொடுத்து அதனை புலிகள் மீது சாட்டிவிடவும், தமிழ் மக்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு முஸ்லிம்கள், மீது சாட்டிவிடவும், சந்தர்ப்பம் உண்டு. பேரினவாதிகள் இதற்காக அரச படைகளையும், முஸ்லிம் ஊர்காவல் படைகளையும் பயன்படுத்தக்கூடும். இலங்கை இன்னொரு பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொண்டிருக்கையில் இடம்பெற்றிருக்கும் இப்படுகொலையை வைத்து ஈழப்போராட்டம், இனவிடுதலை போன்ற பதங்கள் மூலதனமாக்கி அரசியல் வியாபாரம் நடாத்தக்கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் இரு சமூகங்களையும் மோதவிட்டு தமது அரசியல் இலாபங்களை அடைந்துகொள்ள முயற்சிக்கலாம்.

எனவே விடுதலைப் புலிகள் இயக்கமானது அன்னிய அரசுகளின் உதவியுடன் பேரினவாத அரசு விடுதலை போரை நசுக்கிவிட முனைகையில் முஸ்லிம் மக்களையும் தம்முடன் இணைந்து போராடுமாறு அழைப்பு விடுத்திருக்கும் இந்நேரம் (இராணுவ ரீதியாபன இவ்வழைப்பு மீள்பரிசீலிக்கப்படவேண்டும். இவ்விடம் இது பற்றி ஆராயவில்லை) முரண்பாடான விதத்தில் முஸ்லிம் நபர்மீது தாக்குதல் மேற்கொண்டிருப்பது புதிராகவே உள்ளது. ஆயினும், புலிகள் தமிழ் முஸ்லிம் உறவை இருண்ட யுகத்தினுள் மீண்டும் தள்ள முயற்சிக்கக்கூடாது.

அதேபோல் இப்படுகொலையை மட்டும் கருத்திற்கொண்டு முஸ்லிம் சமூகம் தமிழ் மக்களை தவறான முறையில் நோக்கக்கூடாது. புலிகளின் செயலுக்கு ஆர்ப்பாட்டம் மூலம் எதிர்ப்பை தெரிவித்திருக்கும் கிண்ணியா முஸ்லிம்கள் தொடர்ந்தும் அமைதியை நிலைநாட்ட வேண்டும். தவறான புரிதல்களுடன் வீணான செயல் எதனிலும் ஈடுபடக்கூடாது. அமைதியையும் பொறுமையையும் கைக்கொள்ளவேண்டும். அதற்கான உத்தரவாதத்தை புலிகள் இயக்கம் வழங்க வேண்டும்.

**. ஸிபான்ஷரா**


நன்றி - நூலகத்திட்டம்




## மட்டு: ஜனநாயகவழி இயக்கத்தின்

# கொலைகள்!

மட்டக்களப்பு செங்கலடி கறுத்தப் பாலத்தில் இருக்கும் குரு தலைமையிலான புளொட் உறுப்பினர்கள் அண்மைக் காலமாக மிக மோசமான முறையில் தனிப்பட்ட முறையிலும் இராணுவத்துடன் சேர்ந்தும் பொதுமக்கள் மீது தமது காடைத்தனங்களை கட்ட விழ்த்து விட்டிருக்கின்றனர். இவர்கள் கறுத்தப் பாலத்தில் இருந்து கொண்டு இராணுவக் கட்டுப்பாடில்லாத பகுதியில் இருந்து வரும் செங்கல் லொறி, நெல்லு லொறிகளில் காசு பறிப்பதும் அப்பகுதிக்குச் செல்லும் பொதுமக்களை மிரட்டிக் காசு பறிப்பதுமே இவர்களுடைய வேலையாக இருந்து வருகிறது. இவர்கள் பகற்கொள்ளையோடு மட்டும் நின்று விடாது இரவுக் கொள்ளைகளிலும் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை தங்களுடன் முரண்படுவர்களை புலியெனப் பயமுறுத்துவதோடு மட்டும் நின்றுவிடாது இரவோடு இரவாக சுட்டும் தள்ளுகின்றனர். இவ்வாறான சம்பவங்கள் பற்றி பொலிசாருக்கு தெரிந்தாலும் பூனைக்கு மணி கட்டுவது யார் என்ற நிலையில் அவர்கள் இருக்கின்றார்கள். கடந்த மார்ச் மாதம் 26ந் திகதி ஓமநாதன் கோமளேஸ்வரி(42) வயதுப் பெண் செங்கலடி ஒருமுழச்சோலை என்ற இடத்தில் வைத்து இவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். கோமளேஸ்வரியின் மகன் மோகன் என்பவர் ஆரம்பத்தில் செங்கலடியில் புளொட் இயக்கத்துடன் செயற்பட்டு வந்தவர். திடீரென கடந்த வருடம் ஆயுதத்துடன் புலிகளிடம் சரணடைந்து புலிகளோடு செயற்பட்டு வந்தார். மோகனுடன் ஒன்றாக புளொட்டில் இருந்த கொம்மாந்துறையைச் சேர்ந்த வேலன் என்பவரே மோகனின் தங்கையையும் திருமணம் செய்திருந்தார். ஆனால் மோகன் புளொட்டை விட்டு ஓடிய காலத்திலிருந்தே வேலன் வீட்டில் வந்து நின்றாலும் புளொட்டோடு தொடர்பு இருந்து வந்து





அதுமட்டுமல்லாமல் இரகசியமான முறையில் கொம்மாதுறை இராணுவ முகாமில் இருக்கும் புலனாய்வுத் துறையினருடனும் செயற்பட்டு வந்திருக்கின்றார். இவர் தான் புளொட் இல்லை என்று சொன்ன காலத்திலே இராணுவ முகாமில் வைத்து இவரால் பலர் விசாரணைக் குட்பட்டிருக்கின்றனர். இதனால் வேலன் புலிகளால் பலதடவை கடிதங்கள் மூலம் விசாரணைக்காக அழைத்திருந்ததாக வேலனின் மனைவி கூறியிருக்கின்றார்.

மார்ச் 24ந் திகதி இரவு வேலன் தனது தாயின் வீட்டுக்கு போகும் போது சுட்டுக் கொல்லப்பட்டார். வேலனைச் சுட்டது மோகன் தான் எனக் கருதி மோகனோடு கொண்ட கோபத்தால் மோகனின் தாய் கோமளேஸ்வரி பலிக்கடாவானார். கோமளேஸ்வரியை இரவு 7.30 மணிக்கு வீட்டில் இருந்து அழைத்துச் சென்றவேளை அயலவர்கள் சிலர் அழைத்து சென்றவர்களை இனம் கண்டிருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் எல்லோரும் கப்சிப். இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் மரணவாசம் என்ற நிலையில் நமக்கெதுக்கு வம்பென்று இருந்து விட்டார்கள். இதே போன்று தான் கடந்த வருடம் செங்கலடி ஐயன் கேணி என்ற இடத்தில் வைத்து தனிப்பட்ட விரோதத்தை வைத்து ஒரே வீட்டில் ஏழு பேரை புளொட் இயக்கத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பாலா என்பவர் சுட்டுக் கொன்றார். ஆனால் பாலா என்பவர் எங்களுடைய ஆளில்லை எங்களுக்கும் அவருக்கும் எதுவித தொடர்பும் இல்லையென புளொட் இயக்கம் கையை விரித்து விட்டது. சின்னத்துரை அந்தோனி(31), அந்தோனியின் மனைவி றஞ்சினி(28), பிள்ளைகள் தேவலோஜினி(7), நிலுஜா(8), சிந்துஜா (10மாதம்), அந்தோனியின் தகப்பன் சின்னத்துரை(65), றஞ்சினியின் தாய் கனகம்மா முருகேசு(50) ஆகியோரே பாலாவின் கோரக் கொலைப் பசிக்கு ஆளாகியவர்கள். பாலா றஞ்சினியின் தங்கை வாவாவையே திருமணம் செய்திருந்தார். இவர்கள் ஆரம்பத்தில் கறுத்தப்பாலத்து புளொட் முகாமுக்கு அருகிலேயே இருந்து விட்டு 1998 கடைசிப் பகுதியிலேயே ஐயன் கேணிக்கு வந்திருக்கின்றார்கள். கறுத்தப்பாலத்தடியில் அந்தோனியின் வீட்டிலேயே வாவாவும் இருந்திருக்கிறார். இந்த வேளையில் தான் பாலா வாவாவைத் திருமணம் செய்தார். வாவா கர்ப்பமாகிய போது பாலாவுக்கு வாவாவின் கர்ப்பத்தில் சந்தேகம் வந்தது. அன்றிலிருந்து வாவாவுக்கு அடியும் உதையும் தான். பாலா அதோடு மட்டும் நிற்கவில்லை. வாவாவின் கர்ப்பத்துக்கு காரணம் அந்தோனி தான் என்ற சந்தேகத்தில் அந்தோனியுடனும் சண்டை போடத் தொடங்கியுள்ளார். இதனாலேயே அந்தோனி ஐயன்கேணிக்கு வரவேண்டி வந்தது. இங்கு வந்தும் அந்தோனியால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அந்தோனியைச் சுடப் போவதாக பலரிடம் சொல்லியனுப்பியிருக்கின்றார் பாலா. இது தொடர்பாக ஏறாவூர் பொலீசாரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் முறைப்பாடு தொடர்பாக பொலிஸார் செங்கலடி புளொட் பொறுப்பாளரை அழைத்துக் கதைத்ததாகவும் அந்தோனியின் சகோதரியொருவர் குறிப்பிட்டார். எது நடந்தும் அந்தோனியையும் அவனது குடும்பத்தாரையும் பாலாவின் கொலை வெறியில் இருந்து காப்பாற்ற முடியாமற் போய்விட்டது என்பது தான் உண்மை.

இந்தக் கொலைக்குரிய முழுப் பொறுப்பையும் புளொட் எடுத்துத்தான் ஆக வேண்டும். பாலா முகாமில் துப்பாக்கியுடன் நின்றிருக்கின்றான். அதைக் கண்டவர்கள் இருக்கின்றார்கள். பாலாவுக்கு அந்தோனியின் குடும்பத்தைச் சுடுவதற்கான துப்பாக்கி புளொட் இயக்கத்திடமிருந்து தான் கிடைத்தது. இதற்கு புளொட் இயக்கம் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

இது போன்றே புளொட் உறுப்பினர்களின் அட்டகாசம் செங்கலடிப் பகுதியில் பல்வேறு வடிவங்களில் அமைகின்றது. அண்மையில் செங்கலடியில் ஒருமுழச் சோலை என்னுமிடத்தில் அப்பகுதியில் சமூகசேவையில் ஈடுபடும் அமைப்பொன்று அக்கிராமத்தின் நன்மை கருதி அக்கிராம இளைஞர்களை ஒன்றாக்கி குழுவாக செயற்படுத்தி வந்துள்ளனர். அந்தக்குழு கிராமத்தில் கசிப்பு ஒழிப்பு போன்ற பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளது. அக்குழுத் தலைவருக்கு அண்மையில் செங்கலடி முகாமிலுள்ள புளொட் உறுப்பினர் சயந்தன் என்பவர் மிரட்டல் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். சயந்தன் என்பவர் அண்மையிலேயே தான் புளொட் இயக்கத்தில் சேர்ந்து கொண்டவர். ஆனாலும் இவர் செங்கலடிச் சந்தியில் நின்று கொண்டு அட்டகாசம் காட்டுவதில் கெட்டிக்காரராம். ஒருமுழச்சோலைக்கும் இவருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. அந்தக் கிராமத்தில் தன்னைச் சார்ந்த குடும்பத்துக்கு விழிப்புக்குழுவின் செயற்பாடுகள் இறுக்க நிலையைக் கொடுத்தவுடன் சயந்தன் தனது சுயரூபத்தை காட்டத் தொடங்கிவிட்டார். (அவர் அனுப்பிய கடிதம் கீழே தரப்பட்டுள்ளது) உண்மையில் இவற்றை வைத்துக் கொண்டே இன்று ஜனநாயக நீரோட்டத்துக்கு வந்து விட்டோம் என்று கூறிக்கொள்கின்றவர்கள் செய்கின்ற அட்டூழியங்களையும் அடாவடித்தனங்களையும் பார்க்கக் கூடியதாகவுள்ளது. இவர்களை போன்ற ஜனநாயக இயக்கங்கள் இருக்கும் வரைக்கும் தமிழர்கள் எல்லோரும் புலி என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

## வடக்கு - கிழக்கு இணைப்பா? பிரிப்பா?
## முஸ்லிம்களின் பிரச்சினை இதுவல்ல!

- பையூஸ் அகமட்

"வட்டுக்கோட்டைக்கு வழி என்ன என்று கேட்டால் துட்டுக்கு ரெண்டு கொட்டைப்பாக்கு" என்கிறார்கள். இது தான் வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்களுக்கு இன்று நேர்ந்திருக்கிறது.

சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்களுக்கு வெறும் கானல்நீர் அரசியல் தீர்வை வழங்கும் வரலாற்றுப் பாத்திரத்தில் தன்னை ஈடுபடுத்தி காலங்கடத்திக் கொண்டிருக்கிறது. சிங்கள அரசியல் தலைமைகளின் மிகப்பெரும் அரசியல் தீர்வு நாடகத்தில் சந்திரிகா அம்மையாரின் அத்தியாயம் - இப்போது அரங்கேறி இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. சந்திரிகாவின் நாடகம், ஜே.ஆரின் அரசியல் நாடகத்தைவிட அடிப்படைத் தன்மையில் அப்படியொன்றும் வேறுபட்டதல்ல: பெரும்பான்மை சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தி - சிறுபான்மை மக்களை யுத்தம் என்ற போர்வையில் அழித்துக் கொண்டு - அம்மக்களுடைய அரசியல் அபிலாஷைகளை சர்வாதிகார இரும்புக் கரம் கொண்டு கொன்றொழித்து அம்மக்களின் முதுகுகளில் "சிங்கள பௌத்த நாட்டின் மூன்றாம் தரப் பிரஜைகள்" என நெருப்புக் கரம் கொண்டு எழுதி, - அதேநேரம் வெளி உலகுக்கும் - தனது அரசியல் சிஷ்யர்களுக்கும் மிகப் பெரும் சமாதான தேவதையாக தன்னை காட்டிக் கொள்ளும் பழக்கப்பட்ட நாடகத்தின் பிரதி தான் இது.

அடிப்படையில் தெற்கில் உள்ள மானிதாபிமானமிக்க, அரசியல் தெளிவுள்ள விரல் விட்டு எண்ணக் கூடிய சிங்களப் புத்திஜீவிகளுக்கும் தமிழ்த்தேச உரிமைப் போராட்டத்தின் தவிர்க்க முடியாத நிலையை உணர்ந்த தமிழர்களுக்கும், வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களில் தன்னாதிக்க நிலைப்பாட்டின் அவசியத்தை உணர்ந்தவர்களுக்கும் மலையக மக்களின் விடிவின் பேரில் அக்கறை கொண்டவர்களுக்கும் சந்திரிகா என்ற இன்றைய அரசியல் பிரதான பாத்திரம் அப்படியொன்றும் விசேட தேவதையாக காட்சியளிப்பதற்கு எந்தவிதமான அவசியமும் இல்லை.

டக்ளஸ் தேவானந்தாவுக்கும், முஸ்லிம்களின் விடுதலைத் தளபதி அஷ்ரஃப்புக்கும், ஆறுமுகம் தொண்டமானுக்கும், பட்டிவீரக்கோனுக்கும், வரதராஜப் பெருமாளுக்கும்... சந்திரிகா சிறுபான்மை மக்களுக்கு உரிமை தரும் நம்பிக்கை தேவதையாக காட்சி அளிப்பார். சந்திரிகாவின் புடவைத் தலைப்பில் தொங்கிக் கொண்டு ஆட்சி அதிகார சுகத்தை அனுபவித்துக் கொண்டு வாக்களித்த மக்களை ஏமாற்றி - அவர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வை பெற்றுத் தராது அம்மக்களின் வாழ்வுடனும், இருப்புடனும் விளையாடிக் கொண்டிருக்கும் இவர்களால் தமிழர்களுக்கோ, வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கோ அரசியல் தீர்வு விடயத்தில் ஒரு துரும்பைத் தானும் தூக்கிப் போட முடியாது என்பது நிரூபணமாகி விட்டது.

டக்ளஸ் தேவானந்தாவின், வரதராஜப் பெருமாளின் கருத்துக்கள் தமிழ் மக்களின் சுயகௌரவத்தை விரும்பும் தமிழரின் கருத்தாக இருக்க முடியாது என்பது எப்படி உண்மையோ அதேபோல் தான் - தமிழ்த் தலைமைகள், தமிழர்கள் - அஷ்ரஃப் அவர்களின் கருத்தையும் முஸ்லிம்களின் அரசியல் கருத்தாக பார்க்கத் தேவையில்லை. அவரின் அரசியல் கருத்துக்கள் தனது பதாகையையும் அதிகாரத்தையும் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் தனது இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் என்கிற முதன்மை நிலைப்பாட்டின் அடிப்படையில் தான் எழுகிறது. இதனை அரசியல் தெரிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள்.

இனி வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்களின் அரசியல் நிலைப்பாட்டைப் பார்ப்போம். வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம் மக்கள் - சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களினால் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றனர். கடந்தகால சிங்கள ஆட்சி வரலாற்றில் தங்கள் மண்ணையும், உரிமைகளையும் வாழ்வையும் இழந்துள்ளனர். அடிப்படையில் மிகவும் உணர்வுபூர்வமாகத் தமிழ் மக்களுடைய ஆயுதப் போராட்டத்தை ஆதரிக்கின்றனர். (முஸ்லிம்களுக்கு எதிராக திரும்பாத வரை) அதேநேரம் கடந்த கால வரலாற்று அனுபவங்களின் அடிப்படையில் அவர்கள் வடக்கு கிழக்கில் தாங்கள் ஒரு தனித்துவமான தேசம், இனமென்றும், தங்களுக்கான மத, கலாசார, பாதுகாப்பு, நில, நிர்வாக அம்சங்களால் தமிழ் மேலாதிக்கத்தின் தலையீடின்றி சுயமாக இயங்கக் கூடிய நிர்வாகக் கட்டமைப்பைக் கோரி நிற்கின்றனர். இந்த விடயத்தை தமிழ்த் தலைமைகள் - குறிப்பாக விடுதலைப் புலிகள் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

சிங்களவர்கள், இலங்கை என்பது சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தம் என உரக்கச் சொன்னது இன்று எப்படியான நிலைமைகளைத் தோற்றுவித்திருக்கிறதோ அதேபோல் தான் வடக்கு - கிழக்கு அல்லது ஈழம் தனித் தமிழர்களுக்கு மட்டும் சொந்தமானது என்ற மனப்போக்கு பொதுச் சூழலில் பிரகடனப்படுத்தப்படும் போது, முஸ்லிம்களை எதை நோக்கி தள்ளும் என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். கடந்த காலத்தில் தமிழ்பேசும் மக்கள் என அடையாளப்படுத்தப்பட்டு - வடக்கு கிழக்கு என்பது தமிழ் மொழி பிராந்தியம் என நம்பப்பட்டு வந்த ஒரு கருத்தியல் எப்படி தமிழ் ஆயுத அமைப்புகளின் அடக்குமுறை நடவடிக்கையினால் சிதைக்கப்பட்டு தமிழர், முஸ்லிம்கள் என்று தமிழர்களுக்கு தனி நிர்வாக அலகும், முஸ்லிம்களுக்கு தனி நிர்வாக அலகும் தேவை தான் என்ற உண்மையை இன்று உணர்த்தி நிற்கிறதோ அதை விட மிகப் பெரும் தூரத்திற்கு இந்த தனித்த இனத்திற்கு மட்டும் வடக்கு கிழக்கு சொந்தம் என்ற சிந்தனை மனோபாவம் தள்ளிவிடும் என்பதை உணர்தல் வேண்டும்.

வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு வடக்கு - கிழக்கு பிரிப்பா இணைப்பா அல்லது தமிழர்களுக்கு ஈழமா என்பதல்ல பிரச்சினை. வடக்கு - கிழக்கு முஸ்லிம்களுக்கு தாங்கள் பாதிக்கப்படாத தங்கள் சுயநிர்ணயத்தையும் பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்தும் ஒரு அரசியல் தீர்வு தான் வேண்டும். சுதந்திரத்திற்கு பின் சிங்களவர்களால் அடக்கப்பட்டும் ஆளப்பட்டும் வந்த முஸ்லிம்கள் - தமிழ் ஈழ இராணுவ போராட்டத்து அச்சுறுத்தப்பட்டு இனப்படுகொலை, இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்ட முஸ்லிம்கள் - சிங்களவர்களின் தமிழர்களினதும் கீழ் ஆளப்படத் தயார் இல்லை என்பதை புரிந்துகொண்டால் சரி.

இந்தப் புரிதல்கள் தான் எதிர்காலத்தில் தமிழ் போராட்டத் தலைமைகளுடனும், தமிழ் மக்களுடனும் வடக்கு - கிழக்கு வாழ் முஸ்லிம்கள் சமத்துவத்துடன் இணைந்து சிங்கள பேரினவாதத்திற்கு எதிராகப் போராட வழி அமைக்கும். இல்லையேல் முஸ்லிம்கள் எதிர்காலத்தில் இரண்டு பேரினவாத மேலாதிக்க சக்திகளுக்கு எதிராகப் போராடத் தான் வேண்டும் என்பதை மெய்ப்பிக்கும்.

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ் முஸ்லிம் மக்களின் நிலை என்ன?

இலங்கை அரசாங்கம் சொன்னது போல தேர்தலை நடத்துமா என்ற சந்தேகம் இப்போது அரசியல் கட்சிகள் மத்தியில் அடிபடத்-தொடங்கியுள்ளது.


1994ம் ஆண்டு ஒகஸ்ட் 16ம் திகதி நடைபெற்ற தேர்தலில் ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கத்தின் பதவிக்காலம் எதிர்வரும் ஓகஸ்ட் 24ம் திகதியுடன் முடிவடைகிறது. இதன்படி அடுத்த இருமாதத்துள் அதாவது ஒக்டோபர் மாதம் முடிவடைவதற்கு முன்பாக பொதுத்தேர்தலை நடத்தியாக வேண்டும் என்பது சட்டவிதி.

ஏற்கெனவே அரசாங்கம் தேர்தலை நடாத்துவதற்குப் பதிலாக பாராளுமன்றத்தை நீடிக்கக்கூடும் என்ற சந்தேகத்தை சில காலத்திற்கு முன்பதாக இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். அரசியல் தீர்வுப் பொதியை பாராளுமன்றத்தில் சமர்பித்து வெற்றிபெறச் செய்வதற்குப் போதிய பெரும்பான்மைப்பலம் இல்லாத காரணத்தால் தான்



சந்திரிகா பண்டாரநாயக்கா

ஜனாதிபதி தேர்தலில் நின்று மக்களிடம் புதிய ஆணையைப் பெறவேண்டும் என்று சந்திரிகா கூறியிருந்தார். பாராளுமன்றப் பெரும்பான்மை இல்லை என்றால் உண்மையில் அதற்காக பாராளுமன்றத் தேர்தலைத் தான் நடாத்தி இருக்க வேண்டும். ஆனால், அரசாங்கமோ அதற்குப் பதிலாக அது ஜனாதிபதித் தேர்தலை நடாத்தியது. ஜனாதிபதித் தேர்தல் பாராளுமன்றத் தேர்தலைப்போல ஒரு சில பகுதிகளை தவிர்த்து நடாத்தக் கூடிய ஒரு தேர்தல் அல்ல என்பதால், வடக்கு கிழக்கிலும் கூட அப்போதும் வடக்கு பெருமளவுக்கு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது - அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலை நடாத்தியது. சரிநிகர் சார்பில் இவ்வாறான ஒரு தேர்தலை நடாத்துவது ஏற்கெனவே தேர்தல் நடத்தக்கூடிய சூழல் இல்லையென்று கூறி மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்படாமல் இருக்கின்ற சூழ்நிலையில் சட்டவிரோதமானது என்று கூறி ஒரு வழக்கு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், அந்த வழக்குக்கு போதிய ஆதாரங்கள் சமர்பிக்கப்படவில்லை என்ற காரணம் காட்டப்பட்டு அது நிராகாரிக்கப்பட்டது. அரசாங்கம் பாராளுமன்றத் தேர்தலை நடாத்தப்படக் கூடிய ஒரு சூழலில் ஜானதிபதித் தேர்தலை நடாத்திய போது, அதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக



எரிக் சொல்ஹெய்ம்

பாராளுமன்றத்தை ஒரு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நீடிக்கும் நோக்கத்துடனேயே அதை செய்கிறது என்று சரிநிகர் சந்தேகம் கிளப்பி இருந்தது. ஐ.தே.கவிலிருந்து ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி தனது ஆட்சியை பலப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் அரசாங்கம் அப்போது ஈடுபடவும் செய்தது. அந்த முயற்சியில் - அது இப்போது இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் எதிர்க்கட்சி தலைவர் ரணிலுடனும் ஏனைய அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டிருக்கும் ஒரு சூழலில் கூட கட்சித்தாவலை ஊக்குவித்து ஐ.தே.கவிலிருந்து ஆட்களை வாங்கிக் கொண்டிருப்பது இந்தச் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துவதாக உள்ளது.

எவ்வாறாயினும், இந்த நடவ-டிக்கையின் அடுத்த கட்ட நகர்வாக அமையப்போவது தீர்வுப்பொதி இன்னொரு நான்கு அல்லது ஐந்தாண்-டுகட்கு இழுபறிப்படப் போவது தான் என்று கருத்து தெரிவித்தார் ஒரு அரசியல் விமர்சக நண்பர்.

அடுத்தமுறை ஒரு தேர்தல் நடந்தால் தாமெல்லாம் பதவிக்கு வருவோமோ என்று அஞ்சுகிற, அரசாங்கத்திற்கு ஆலவட்டம் குடை-பிடித்து நிற்கும் தமிழ் கட்சிகள் சிலவும் கூட இந்த முடிவக்கு ஆதரவு தந்து நிற்க விழைகின்றன. அதேவேளை தப்பித்தவறி தேர்தல் நடந்து ஏதாவது இசகுபிசகாக நடந்தாலும் என்ற அச்சம் காரணமாக அவை இடைக்கால நிர்வாக சபையொன்றிற்காக ஒற்றைக் காலில் நிற்கின்றன.

இந்த இடைக்கால நிர்வாக சபையும் சரி அரசாங்கம் முன்வைக்கப் போவதாக கூறும் தீர்வுப்பொதியும் சரி உண்மையில் தமிழ் மக்களுக்கு எதைத் தான் வழங்கப் போகின்றன?

ஒரு புறத்தில் நோர்வேயின் மத்தியஸ்த்துடன் அரசு - புலிகள் பேச்சுவார்த்தைக்கான ஒரு சூழலை உருவாக்கும் செயற்பாடுகள் நடந்து கொண்டி-ருந்தாலும், மறுபுறத்தில் யுத்தத்தை இன்னுமின்னும் தீவிரமாக நடத்தும் நடவடிக்கைகளே தொடர்கின்றன. பாகிஸ்தான் முதல் செக்கோஸ்லாவாக்கிய நாடுவரை எல்லா நாடுகளிலும் இருந்து ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதில் அரசாங்கம் தீவிரமாக இயங்கி வருகிறது.

இடைக்கால நிர்வாக சபையில் புலிகளை சேர்க்கப் போவதில்லை, தீர்வுப்பொதியை புலிகளுக்கு தரப்போவதில்லை என்று சிறுபிள்ளைத்தனமாக அறிவிக்கும் அரசாங்கமும் அதன் தலைவி சந்திரிகாவும் உண்மையில், நாட்டின் நிலைமை என்ன என்று புரியாமல் பேசுகிறார்கள். ஏற்கெனவே உள்ளூராட்சி தேர்தலில் அதிகாரத்தைக் கைப்பற்றிய கட்சிகளால் அவற்றை நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கையில் இடைக்கால நிர்வாக சபை மட்டும் எப்படி இயங்கப் போகிறது?

இந்த இடைக்கால நிர்வாக சபை மற்றும் தீர்வுப் பொதி என்பவை ஒரு புறத்தில் தமிழ் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை பூரணமாக் உள்வாங்கி தயாரிக்கப்பட்டவை அல்ல என்பதை இதுகாறுமான, இவ்விடயம் தொடர்பான தமிழ்க்கட்சிகளிடமிருந்து வெளிப்பட்ட அபிப்பிராயங்கள் தெரிவிக்கின்றன. தமிழ் கார்டியன் இதழுக்கு அன்ரன் பாலசிங்கம் வழங்கிய செவ்வி ஒன்றில் தமிழ் மக்களது பிரச்சினையைத் தீர்க்கும் எந்த அடிப்படைகளையும் கொண்டிராத இந்தத் தீர்வுப்பொதியோ அல்லது இடைக்கால நிர்வாக சபையோ எந்தப் பயனும் அற்றவை என்று தெரிவித்-திருந்தார். கிட்டதட்ட வரதராஜப் பெருமாள் மற்றும் ஈ.பி.டி.பி. தரப்பினர் தவிர்ந்த மற்றெல்லாத் தமிழ்க்கட்சிகளும் இவற்றை ஏற்றுக் கொள்வதில் தயக்கமோ அல்லது மறுப்போ கொண்டிருக்கின்றன.

அதேவேளை, சிங்கள இனவாத சக்திகள் ஆறுதலாகவும், படிப்படி-யாகவும் ஆனால், உறுதியாகவும் தம்மை வளர்ந்து வருவதுடன் இத்தீர்வுத்திட்டம் மற்றும் இடைக்கால நிர்வாகம் என்பவற்றுக்கு எதிரான பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட்டுவிடுகின்றன. அவர்களது செல்வாக்குக்கும் இனவாதக் கருத்தியலுக்கும் விட்டுக்கொடுத்து விட்டுக்கொடுத்து இந்த நாட்டில் இனப்பிரச்சினை ஒன்று இருக்கிறது, அது தீர்க்கப்பட வேண்டும், அது தீர்க்கப்படுவதானால், தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் திருப்தி செய்கிற விதத்தில் தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும் என்கிற வியடங்களை அரசாங்கம் வசதியாக அல்லது காரியார்த்தமாக மறந்து விட்டுள்ளது.

ஆக, அரசாங்கத்திடம் இன்றுள்ள உருப்படியான



அன்ரன் பாலசிங்கம்

ஒரு தீர்வாக கைவசம் இருப்பது என்னவென்றால், அது தொடர்ச்சியாகவும், உறுதியாகவும் யுத்தத்தை நடத்தும் தீர்வு ஒன்று மட்டுமேயாகும்.

இந்த நிலையில் தமிழ் - முஸ்லிம் மக்கள் எடுக்க வேண்டிய நிலைப்பாடு தான் என்ன?

அரசாங்கம் கொண்டு வரப்போகிற தீர்வுத்திட்டத்தை ஆதரிப்பதா? இடைக்கால நிர்வாக சபைக்கு ஆதரவு தருவதா?

அல்லது அவற்றை - அவை அவர்களது அபிலாஷைகளுக்குரிய தீர்வாக அயைமப்போவதில்லை என்பது மட்டும் திண்ணம் என்று தெளிவாகவே தெரிகிறது - ஆதரிப்பதா?



சிங்கள இனவாதி-களை எதிர்த்து நிற்கின்ற ஒரு சூழலில், அப்படிப்பட்ட ஒரு தீர்வையும் நிர்வாக ச்பை-யையும் தமிழ் முஸ்லிம் மக்களும் நிராகரித்தால் அது இனவாதிகளுக்கு விட்டுக் கொடுப்பதாகாதா?

-இந்தக் கேள்வி கடந்த காலத்தில் பல தடவை ஊசலாடும் ஜனநாயகவாதிகளால் எழுப்பப்பட்டுவந்த ஒரு கேள்வி.

ஆனால், இனவாதிகளுடன் கணக்குத்-தீர்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுடையது அல்ல.

அது அரசாங்கத்தின் பொறுப்பு. அவர்களுக்கு செவிசாய்த்து சாய்த்துத் தான் நாட்டை இன்றுள்ள மோசமான நிலைக்கு இட்டு வந்திருக்கின்றன இதுவரை கால அரசாங்கங்கள்.

இனவாதிகளுக்கு விட்டுக் கொடுக்காமல் வரப்போகிற தீர்வை ஒரு படிக்கல்லைப் பயன்படுத்தி மேலே போவோம் என்கிற நிலையை எடுத்த தமிழ் முஸ்லிம் கட்சிகளும், ஜனநாயகவாதிகளும், தொடர்ந்தும் நாட்டின் இன்றைய மோசமான நிலைக்குத் தமது பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள்.

ஆக, தமிழ், மற்றும் முஸ்லிம் மக்கள் முன் உள்ள கடப்பாடு தான் என்ன?

உடனடியான யுத்த நிறுத்தமும் பேச்சு-வார்த்தையும் அடுத்த கட்ட நகர்வை நோக்கி நாடு செல்ல வேண்டுமானால், அவசியமான முன்நிபந்-தைகள் என்பதை தமிழ் முஸ்லிம் மக்கள் மறந்து விடக்கூடாது.

இந்தியாவின் நிலைப்பாடு, இலங்கைக்கு ஒரு சமாதானபூர்வமான பேச்சுவார்த்தைக்கான சூழலை உருவாக்குதல் என்ற மட்டத்திற்கு அப்பால் போகாமல் இருத்தலை வலியுறுத்துவதும் அவர்கள் முன்னுள்ள கடப்பாடு தான் என்பதை மறந்துவிடக்கூடாது.

அதேவேளை அரசாங்கம் ஒற்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டின் தேசிய வளங்களை வீணாக்கி அழித்துக் கொண்டிருக்கும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவராமல் அரைகுறைத் தீர்வுகளை முன்வைப்பது, உலகத்தை ஏமாற்றியபடி தமது குறுகிய அரசியல் லாபங்களுக்காகச் செயற்படுவதை நிறுத்த வேண்டும். எது தேவையோ அதை அடைவதற்கான முயற்சியில் ஈடுபடுவதைவிடுத்து எதைக் கொடுத்தால் சிங்கள இனவாத சக்திகள் ஒன்றும் பேசாமல் இருப்பார்களோ அதைக்கொடுத்துத் தப்பிக் கொள்ளலாம் என்பதைக் கைவிட வேண்டும்.

தமிழ்க்கட்சிகள் அரசிடம் எதைக் கேட்க வேண்டுமோ, எது தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்குமோ அதற்காக போராடுவதை விட்டுவிட்டு எதை விரும்பு-கிறார்களோ அதைப் பெற்றுக் கொள்வது என்ற நாய்ப்பிழைப்பு அரசியலை விட்டொதுக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் நடைமுறை யதார்த்தத்தையும், மக்களது அவலத்தையும் கணக்கிலெடுத்து யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை என்கிற ஒரு நிலைக்கு செல்வதற்கான தயார் நிலையை தம்முன் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

ஆயுதங்களை கீழே போடு என்று அரசாங்கம் புலிகளை கேட்பதோ, அல்லது வடக்கிலிருந்து படைகளை மீட்டால் தான் பேசவரமுடியும் என்று புலிகள் சொல்வதோ இரண்டுமே யுத்தத்தை தொடரவே வழிவகுக்கும் என்பதை மறந்து விடக்கூடாது. பேச்சுவார்த்தைகள் எல்லாக் கட்டங்களிலும் அரசியல் பிணக்குகளைத் தீர்க்க செய்யப்பட வேண்டியவை என்பதை மக்களின் நலனின் பெயரால் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

பேசத் தொடங்கும் கணத்திலேயே 'பிரேமதாசா கண்ணியமானவர்' என்று அதீதமாக நம்புவதோ, அல்லது 'இவர்கள் ஒரு போதும் சரிவரமாட்டார்கள்' என்று தீவிர அவநம்பிக்கையுடன் உரையாடலைத் தொடர்வதோ இரண்டுமே பயனற்றவை. முதலாவது ஆபத்து என்றால் இரண்டாவது எந்த விளைவையும் தராது.

ஆக, அனைத்து சக்திகளும் பொறுப்புடனும் உணர்ந்து செயற்படவேண்டிய ஒரு அவசர-காலகட்ட்ம் இது என்பதை மறந்துவிடக்கூடாது.

சொல்ஹெய்ம் ஆனாலும் சரி, வேறு யாராலும் சரி, தண்ணீரை காட்டத்தான் முடியும். எங்களுக்காகக் குடிக்க முடியாது.

அதை விளங்கிக் கொண்டால் பல பிரச்சினைகளுக்கு தீர்வு கைக் கெட்டும் தொலைவில் வந்துவிடும்.

**நாசமறுப்பான்**

நன்றி - நூலகத்திட்டம்



# பொருளாதாரத்தை விழுங்கும் யுத்தம்!

யுத்தத்திற்காக இலங்கை அரசு கண்மூடித்தனமான விதத்தில் செலவுகளைச் செய்து கொண்டு போவது இன்று பல மட்டங்களில்-இருந்து அதிருப்தியையும், எதிர்ப்-புகளையும் கிளப்பியுள்ளது.

இப்படியே யுத்தம் என்ற போர்வையில் அரசியல் லாபங்-களுக்காகவும், அர்த்தமற்ற பேரின-வாத ஆணவங்களுக்குத் தீனி-போடுவதற்காகவும் செய்யப்படும் செலவானது, இறுதியில் நாட்டை எங்கு கொண்டு போய்த் தள்ளிவிடப் போகிறது என்பதே பலதரப்பட்ட புத்திஜீவிகளின் கேள்வியாகும். இன்று அரசினால் செய்யப்படும் மிதமிஞ்சிய செலவு யார் தலையில் பொறியப் போகிறது என்பதும், அவர்கள் முன்வைக்கும் கேள்வி-யாகும்.

| | பாதுகாப்புச் செலவு | வருமானம் |
|---|---|---|
| 1995 | 42.5 | 32.2 |
| 1996 | 44.5 | 30.7 |
| 1997 | 45.0 | 27.3 |
| 1998 | 51.0 | 29.1 |
| 1999 | 63.4 | 33.0 |

அட்டவணை - 1

ஏறிக்கொண்டு போகும் போர்ச்செலவை, திறைச்சேரி நிதியறிக்கை மேலுள்ள அட்டவணை காட்டுகிறது.

மத்தியவங்கியின் ஆண்டறிக்-கையின்படி 2000மாம் ஆண்டுக்-கான உத்தேச மதிப்பீட்டுச் செலவு 70 பில்லியனாகும். இதுவும் கடந்த மாதம் அரசுக்கு ஏற்பட்ட நெருக்கடி நிலைக்கு முந்திய மதிப்பீடாகும் இது. இந்நிலையில் அரசுக்கு நிதிசேரிக்க உள்ள வழிகள் இரண்டாகும்.

ஒன்று வரியறவிடுவதன் மூலம் இதைச் சாதிப்பது. இரண்டு கடன் வாங்குவதன் மூலம் இதைச் சாதிப்பது. ஆனால், இவ்விரண்டு வழிகளுமே இன்று நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்துவனவாக உள்ளன.

| | 1995 | 1996 | 1997 | 1998 |
|---|---|---|---|---|
| உள்நாட்டுக்கடனுக்கான வட்டி | 35.0 | 42.2 | 48.6 | 47.6 |
| உள்நாட்டுக்கடனுக்கான வட்டி வீதம் | 12.2 | 11.8 | 12.7 | 10.7 |
| வெளிநாட்டுக்கடனுக்கான வட்டி | 6.2 | 6.7 | 6.7 | 7.3 |
| வெளிநாட்டுக்கடனுக்கான வட்டி வீதம் | 1.8 | 1.9 | 1.8 | 1.6 |
| வட்டி/அரசின் மொத்த வருமான வீதம் | 30.2 | 32.8 | 33.5 | 31.4 |

அட்டவணை - 2

வரியறவிடுதலின் மூலம் வட்டிகட்ட வேண்டும் என்ற நிலை இல்லாது போகிறது என்பது உண்மை தான். ஏற்கெனவே வட்டிக்குச் செலவிட்ட தொகை பாரியது என்பதை 1998 திறை சேரி நிதியறிக்கையின் மற்றைய அட்ட-வணை தெளிவாகக் காட்டுகிறது

கடன் வாங்குதல் அல்லது மக்களிடமிருந்து வரி அறவிடல் ஆகிய இருவகையான நிர்ப்பந்தங்-களுக்கிடையில், அரசு போரைத் தொடர வேண்டியுள்ளது. கடன் வாங்குதல் மூலம் அரசு, எதிர்காலச் சந்ததியினர் தலை நிமிர முடியாத வகையில் அவர்கள் மேல் பெருஞ்சுமையை ஏற்றுகிறது. அதேநேரம் வரிஅறவிடுதல் மூலம் இன்றைய சந்ததியினர் தலைநிமிர முடியாத பாரத்தைத் தாங்க வேண்டிய நிலைக்குஉள்ளாக்-கப்படுகின்றனர். வரி அறவிடுதல் என்பது வரி இறுப்போரிடமிருந்து வரிப்பணத்தை இராணுவத்-தினருக்கும், போர்ச்செலவுக்கும் மாற்றுவதாகும். கடன் வாங்குதல் என்பது வைப்புப் பணமிட்ட-வரிடமிருந்து பணத்தை இராணு-வத்தினருக்கும் போர்ச்செலவுக்கும் மாற்றுவதாகும்.

இதன்மூலம் அரசு நாட்டின் பொருளாதாரத்தை ஒரு நச்சுச் சூழலுக்குள் புகுத்தி மீளமுடியாத பொருளாதார 'யுத்தத்திற்'குள் சிக்கிக் கொள்கிறது.

வரியறவிடுவதன் மூலம் மக்கள் தாக்கப்படும் போது அவர்கள் தமது செலவினங்களைக் குறைக்க முற்படுகின்றனர். இன்னும் அவர்கள் தமது சேமிப்பிலுள்ள பணத்தை மீளப்பெற்றுக்கொள்ளு-கின்றனர். இது மக்களின் நுகர்வைக் குறைத்துக் கொள்ளச் செய்கிறது. இதனால் இப்பொருட்களுக்கான தேவை வீழ்ச்சிஅடைகிறது. அதானல் இவற்றுக்கு முதலீடு செய்தல் வீழ்ச்சியடைந்து வியாபாரத்தையும் பணப்-புழக்கத்தையும் பாதிக்கிறது. மக்கள் தமது வரிச்சுமையைச் சமாளிப்-பதற்காக தமது சேமிப்புக்களை மீளப்பெற்றுக்கொள்ளுவதனால் தனியார் ஸ்தாபனங்களுக்குத் தேவையான பணம் இல்லாது போகிறது. அதனால் வட்டி வீதம் அதிகரிக்கிறது. இதனால் பொருட்-களுக்கான விலைகள் ஏற்றமடைகின்றன.

நாடு போரில் ஈடுபட்டுள்ள-தால் 45சதவீதமான செலவு போருக்காகச் செய்யப்படுகிறது. இராணுவத்தினர் தமக்குக் கொடுக்கப்படும் பணத்தை நுகர்வுக்குப் பயன்படுத்துகின்றனர். இருந்த போதும் இவற்றின் மூலம் புழக்கத்திற்குவரும் பணம் ஆயுதக்-கொள்வனவுக்கும் இடைத்-தரகர்களுக்குமாக செலவழிந்து போகிறது. மேலும் இதையே வைத்துப் பிழைப்பு நடத்து-வோருக்குமாக மக்கள் வரிப்பணம் இறுக்கப்படுகிறது. யுத்தம் என்ற பேரில்'.

இந்த லட்சணத்தில் நாடு தழுவிய யுத்தப் பிரகடனம் செய்து சகலரையும் யுத்தத்திற்கு வருமாறு ஆள்திரட்டலில் ஈடுபடுவது, மீன்பிடி, கமத்தொழில், தொழில-நுட்பம் என்று நாட்டுக்கு வளம் சேர்க்கும் வேலையில் ஈடுபடுபவர்-களையும், அவற்றைவிட்டு விட்டு வெளியேற்றுவதாக முடியும். இது ஈற்றில் எந்தவித வருமானத்தையும் நாடு பெறாது. நாடு பெரும் அழிவுப்பாதையை நோக்கி நடை போடுவதில் தான் முடியும்.

இவற்றில் இருந்து தப்ப-வேண்டுமானால் பல விதமான பொருளாதார நடவடிக்கைகளை நாடு மேற்கொள்ள வேண்டும். இவற்றுக்கு அடிப்படையாகத் தேவைப்படுவது போரை நிறுத்தி பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத்தை முன்னெடுப்பது தலையானதாக உள்ளது.

மேலும் தேர்தலை அடிப்-படையாகக் கொண்டு வாக்கு வங்கிகளை நிரப்புவதற்காக, "வேலைகள்" உருவாக்கப்பட்டு வெட்டித்தனமாக(?) சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கும் அரச கூட்டுத்தாபன "ஊழியர்கள்" எனப்-படுவோரை கணக்கிலெடுத்து அவர்களை வெளியேற்ற வேண்-டும்.

மாகாண அரசுகளை ஏற்ப-டுத்தி எந்தவித பயனும் இல்லாது, வெறும் "அமைச்சர்களாக" பதவி வகிக்கும் அரசியல்வாதிகளையும், அவர்களால் ஏற்படும் எக்கச்-சக்கமான செலவுகளையும் இல்லாது செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்யாது, அரசியலுக்காகவும், வெற்று ஆணவத்திற்காகவும் யுத்தம் தொடருமானால் நாடு இன்னும் சிறிதுகாலத்தில் அமெரிக்காவிடமோ அல்லது வேறு அயல்நாட்டிடமோ அடகு வைக்கப்படும் கட்டத்தை எட்டினால் ஆச்சரியப்படுவதற்-கில்லை.

எவ்வாறு பழைய தமிழ் அரசியல் வாதிகள் அன்று தமது பொறுப்பற்ற 'தேசிய அரசியல்' கொள்கைகளால் இன்று இத்தனை தமிழ் இளைஞர்களின் இரத்தம் சிந்-தலுக்கு காரணமாக இருந்தார்களோ அவ்வாறே இன்றைய அரசின் தீர்க்கதரிசனமற்ற நடவடிக்கைகள் இலங்கையை வேறு நாடுகளுக்கு ஈடு வைப்பதில் முடிந்தாலும் முடியலாம்.

- எம்.பி.எம்.

## அக்கறை பற்றிய இரண்டு செய்திகள்

**செய்தி 1)**

"அன்பான யாழ்ப்பாண மக்களே பாதுகாப்புப்படையினர் உங்கள் பிள்ளைகள் மீது மிகவும் அக்கறை கொண்டுள்ளார்கள். விடுதலைப் புலிப் பயங்கரவாதிகள் தற்போதைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உங்கள் பிள்ளைகளைக் கடத்திச் செல்லக்கூடும். எனவே உங்களது பிள்ளைகளை மிகவும் அவதானமாக வைத்திருக்குமாறு பாதுகாப்புப் படையினர் உங்களை மிகவும் அன்பாகக் கேட்டுக்-கொள்கின்றனர்.

இலங்கை வானொலியின் யாழ். சேவையில் அண்மையில் படையினரால் விடுக்கப்பட்ட அறிவித்தல் இது. இலங்கைப் பாதுகாப்புப்படைகள் புலிகளிட-மிருந்து யாழ்ப்பாண இளைஞர்களைப் பாதுகாப்பதற்காகத் தான் யாழ். இளைஞர்கள் பலரை பூஸா, வெலிக்கடை, களுத்துறை போன்ற இன்னோரன்ன இடங்களில் வைத்து மிகவும் அன்பாக, ஆதரவாக உபசரித்து வருகின்றனர் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

**செய்தி 2)**

தென்மராட்சியில் அல்லலுறும் மக்களை மீட்க நடவடிக்கை எடுக்குமாறு மனித நேய அமைப்புகளுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக கடந்த 19.06.2000 அன்று அறிக்கையொன்றையும் புலிகள் வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

தென்மராட்சியில் போதிய உணவு அடிப்படை வசதிகளின்றி பதுங்கு குழிக்குள் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்வதற்காக நாமாக முன்வந்து யுத்த நிறுத்தமொன்றை அறிவித்தோம். எனினும், சர்வதேச மனித நேய அமைப்புகளான ஐ. நா. தூதுவராலயம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புகள் இவர்களை மீட்டெடுக்க முன்வராது பராமுகமாயிருந்தது எமக்கு பலத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. தென்மராட்சியில் உள்ள மக்களனைவரும் வலிகாமத்திற்கும் வன்னிக்கும் சென்றுவிட நடமாட முடியாதோர் மட்டும் தற்போது உயிரைக் கையில் பிடித்தபடி வாழ்ந்து வருகின்றனர். இவர்களையாவது மீட்டெடுப்பதற்கு சர்வதேச மனித நேய அமைப்புகளும் சர்வதேச சமூகமும் முன்வர வேண்டும் எனவும் ஜெனீவா உடன்படிக்கையின் கீழ் பொது மக்கள் யுத்தம் நடைபெறும் பகுதியிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அனுமதியளிக்கப்பட வேண்டுமெனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உதயனுக்குத் தடை தொடர்கிறது

கடந்தவாரம் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு - அரசாங்கத்தையும் அதன் 'தகுதிவாய்ந்த அதிகாரியையும்' தடுமாற வைத்துள்ளது. ஜனாதிபதி எவ்வளவு துாரம் இந்தத் தீர்ப்பால் தடுமாறிப் போயிருந்தார் என்றால், இந்தத் தீர்ப்பு வழங்கிய நீதிபதிகளுக்கு லஞ்சம் வழங்கப்பட்டதாக தான் அறிவதாகக் கூறுமளவுக்கு தடுமாறிப் போயிருந்தார்.

தீர்ப்பு வழங்கப்பட்டவுடன் உடனடியாகவே சண்டே லீடர் பத்திரிகை வெளியிடப்பட்டது. ஆயினும், சண்டே லீடர் தடை செய்யப்படுவதற்கு முன்பாக பொலிஸ் அதிகாரியால், தகுதிவாய்ந்த அதிகாரியின் உத்தரவின் பேரில் தடை செய்யப்பட்ட உதயன் பத்திரிகை அலுவலகத்தின் சீல் உடைக்கப்பட்டு பத்திரிகை இயங்க அனுமதிக்கப்படவில்லை.

இதுபற்றி விசாரித்தபோது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சிகர் நீதிமன்ற உத்தரவு தனக்குக் கிடைக்கும்வரை தன்னால் அவ்வாறு செய்ய முடியாது என்று தெரிவித்தாராம்.

இப்போது மீண்டும் பத்திரிகை வெளிவருவதாக அறிய முடிகிறது. பத்திரிகைத் தணிக்கை சட்டவிரோதமானது, தகுதிவாய்ந்த அதிகாரியான ஆரிய ருபசிங்கவுக்கு பத்திரிகையை தடைசெய்யவோ, அல்லது தணிக்கையிடவோ அதிகாரம் இல்லை என்று உயர் நீதி மன்றம் தெரிவித்திருந்தது.

யாழ், குடாநாட்டில் சிவில் நிர்வாகம் நடப்பதாக அரசாங்கம் பெரிதாக கூறிக்கொண்ட போதும், நடப்பது என்ன என்பதை விளக்க இந்த ஒரு சம்பவமே சான்று. யாழ் குடாநாட்டில் கொழும்பில் பத்திரிகை தணிக்கை இருந்த இல்லாத காலமெல்லாம் கூட தொடர்ச்சியான தடை - எழுப்படாத -தடை இருந்து வந்திருக்கிறது.

அங்கு பத்திரிகை நடாத்துவது என்பது அரசாங்கப் படைகளின் நெருக்கடிகட்கு மத்தியிலே ஒரு கத்திமேல் நடக்கும் பணியாகவே நடந்து வந்தது. இப்போது உதயன் மீண்டும் பிரசுரிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள போதும், அதன் செய்திகளுக்கான இராணுவத்தில் மறைமுக தணிக்கை தொடரத் தான் போகிறது என்கிறார் ஒரு அனுபவஸ்தரான பத்திரிகையாளர்.

இந்த நாட்டில் ஆளுக்கு ஆள் ஒரு நீதி என்பது ஒரு எழுதப்படாத சட்டமாக இருக்கையில் இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது என்பது ஒரு அடிப்படையான கேள்வியாக இன்னமும் இருக்கிறது!

## நோயாளிகளாக வரும் புலிகள்

தமக்கு சிற்சில நோய்க் கூறுகள் இருப்பதாகக் கூறிக் கொண்டு நோயாளர்கள் என்ற போர்வையில் புலி தீவிரவாதிகள் கொழும்புக்குள் ஊடுருவியுள்ளதாக தகவல்கள் தெரிய வந்துள்ளன. முதலில் இவர்கள் யாழ் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று பின்னர் செஞ்சிலுவைச் சங்கத்தினுாடாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு வருகை தருகின்றனர். இவ்வாறு வருகைதந்த தமிழ் இளைஞர்கள் இருவர் டிக்கட் வெட்டிக்கொண்டு அவசரமாக வைத்தியசாலையில் இருந்து வெளியேறும் போது கைது செய்யப்பட்ட வேளையிலேயே இத் தகவல்கள் தெரியவந்துள்ளன.

இவ்விரு இளைஞர்களில், இரண்டாமவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலிருந்து கடந்த 1ம் திகதி அவசர அவசரமாக வெளியேறியுள்ளார். கொட்டாஞ்சேனை பொலிசாரினால் இந்த தமிழ் சந்தேகநபர் ஜம்பட்டா வீதி வீட்டில் வைத்து கடந்த இரண்டாம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் வைத்தியசாலையிலிருந்து அவசரமாக வெளியேறியமை குறித்து கவனமாக இருந்த வைத்தியசாலை அதிகாரிகள் பொலிசுக்கு வழங்கிய தகவலின் பேரில் இந்நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் வைத்தியசாலைக்கு போலி முகவரிகளை வழங்கியுள்ளதாக பொலிசார் கூறுகின்றனர்.

இதற்கு முன்னரும் இவ்விதத்தில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற யாழிலிருந்து வந்த தமிழ் இளைஞர் வைத்தியசாலையில் இருந்து வெளியேறிய போது கைது செய்யப்பட்டார்.


இது திவயின பத்திரிகையின் ஜுலை 5ம் திகதிய தலைப்புச் செய்தி

நன்றி - நூலகத்திட்டம்





# தன்மானம் சுயமரியாதை தமிழர் இந்தியா



அறுநூறு வருடங்களுக்கு மேலாக வேற்று அரசுகளின் குடிகளாக வாழ்ந்து பழக்கப்பட்டுப் போனதாலோ என்னவோ பெரும்பாலான தமிழ் மக்களிடம், அதிலும் குறிப்பாக நடுத்தர மற்றும் உயர் வகுப்பார்களிடம் நம்மை விட மேலானதொரு அரசியல் ஆதிக்க சக்தி உண்டென்று பயந்து வாழும் ஒரு உளப்பாங்கு நிலைத்துக் காணப்படுகின்றது. "நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்" என்பதெல்லாம் இவர்களைப் பொறுத்தவரையில் பழங்கதை. தமிழ்ப் பஞ்சமரை ஒடுக்கும் பேடித்தனத்தை தம் மறமாண்பு என எண்ணி மயங்கினர் சிலர். வெள்ளையருக்கு நன்றியுள்ள நாய்களாய் இருந்து 'சேர்' பட்டம் வாங்குவதே மகா கௌரவம் என எண்ணியோர் பலர். சிங்கள அரசியல் தலைமைகளுடன் நட்புறவாடி வாழ்வதே பலம் என செயலாற்றி வாழ்ந்தோர் அதிலும் பலர்.

பெரியார் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக சுய மரியாதை இயக்கம் நடத்திப் பார்த்தார். சரிவரவில்லை.

சுயமரியாதை, தன்நம்பிக்கை ஆகிய இரண்டும் எமது அரசியலகராதியில் நீண்ட காலம் இல்லாது போயிருந்த இரு கருத்துக்கள்.

இன்று, யாழ்ப்பாணப் போர் உச்சக் கட்டத்தை அடையும் தறுவாயில் அரசியற் தலைவர்கள், செய்தித்தாள் ஆசிரியர்கள், விடயமறிந்த பொதுமக்கள் என பல தமிழர் மத்தியில் உலாவுகின்ற ஒரு முட்டாள் தனமான எண்ணம் இதற்கு நல்ல உதாரணம். இவர்கள் எல்லாருமே இப்போது, முரண்பாடில்லாமல் "இந்தியா ஏதோ செய்யப் போகிறது", "இந்தியா வரும்", "இந்தியா தலையிட்டு பிரச்சினையைத் தீர்க்கப் போகிறது" எனக் கூறுகின்றனர்.

வடக்கில் நடைபெறும் போர் சிறுபிள்ளை வேளாண்மை என்கிற வகையில் மேற்கண்டோரின் பேச்சுகள் அமைந்துள்ளன. நாம் எது செய்யினும் பயனில்லை இறுதியில் டெல்லி அதிகாரிகளின் நினைப்புப் படிதான் எல்லாம் நடக்கும் என்கின்ற ஒரு போக்கை இன்று பலரிடம் காணலாம்.

உங்களுக்குத் தன்நம்பிக்கையும், சுயமரியாதையும் சற்றேனும் இல்லாமல் இருக்கலாம். ஆனால், மூளையிருக்கிறது.

சற்று சிந்தித்துப் பாருங்கள். டெல்லி அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கூர்ந்து நோக்குங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருக்கும் சிறிலங்காப் படைகளை வெளியெடுத்துப் பாதுகாப்பாக திருமலைக்கு கொண்டு செல்வதானால் முதலாவதாக குடாநாட்டில் இரு படைகளுக்கும் இடையில் போர் நிறுத்தம் ஒன்று ஏற்பட வேண்டும்.

இரண்டாவது, இலங்கை அரசு இந்திய அரசிடம் நேரிடையாக யாழ்ப்பாணத்தில் சிக்குண்டுள்ள தன் படைகளை வெளியெடுத்துத் தரும்படி கேட்க வேண்டும்.

மூன்றாவதாக யாழ்ப்பாணம் புலிகளின் கையில் முற்றாக விழும் நிலை தோன்றியிருக்க வேண்டும். எனும் மூன்று நிபந்தனைகளும் சரியாக இருக்கும் பட்சத்திலேயே இந்திய அரசின் மூத்த அதிகாரி ஒருவர் செவ்வாய்க்கிழமை கூறியதைக் கவனிக்க வேண்டும்

போர் நிறுத்தம் இல்லாத ஒரு நிலையில் குடாநாட்டில் கால்வைத்து புலிகளிடம் மோத வேண்டிய நிலை இந்திய மத்திய அரசுக்கு ஏற்பட்டால், ஒன்று முழுமையான ஒரு பெரும் போரில் சிக்க வேண்டி வரும் அல்லது அடிவிழுந்த கையோடு வெளியேற வேண்டி வரும். இங்ஙனம் பின்வாங்கினால் மீண்டும் மானம் போய் விடும் என்பது டெல்லியின் எண்ணம். இந்த இரண்டும் நடப்பதை இந்திய மத்திய அரசு விரும்பவில்லை என்பது வெளிப்படை. புலிகளுடன் பெரும்போரில் இறங்கினாலும் சரி, அடிவிழுந்தவுடன் பின்வாங்கினாலும் சரி மேற்கு நாடுகளும், சீனாவும் அதை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் என்பது டெல்லியின் நியாயமான பயம். 'மேலும் தென் ஆசியப் பிராந்தியத்தில் இந்தியாவினால் தனித்து எந்தச் சிக்கலையும் தீர்க்க முடியாது என்ற ஒரு நிலைமையை அமெரிக்காவும் வேறு மேற்கு நாடுகளும் ஏற்படுத்த முயற்சி செய்கின்றன, இந்தக் காய் நகர்த்தல்களில் ஒன்றாகத் தான் இலங்கைச் சிக்கலுக்குள் தன்னை ஈடுபடுத்த அமெரிக்கா கடுமையாகத் தூண்டுகின்றது என இந்தியா மிகச் சரியாகவே கவனங் கொள்கிறது.

இந்தியப்படை உதவியை இதுவரை இலங்கை அரசு மனப்பூர்வமாகக் கோரவில்லை. நாடாளுமன்றில் கூட அதைப்பற்றி மூச்சு விடவில்லை. ஒரு சில புத்த பிக்குகள் இந்திய உதவியை நாடியிருந்த போதும் சிங்களத் தரப்பில் நாட்கள் செல்லச் செல்ல பலவகையான குழப்பங்களும் எதிர்ப்புகளும் தற்போது தோன்றத் தொடங்கியுள்ளன.

குறிப்பாக சிங்கள பௌத்தத் தேசியவாதத்தின் நவீன பிதாமகர்களான பேராசிரியர் நளின் டி சில்வாவும், குணதாச அமரசேகராவும் புதன்கிழமை கொழும்பில் வெளியிட்டுள்ள கருத்துக்கள் இந்திய படை வருகையை எதிர்ப்பவையாகவே இருக்கின்றன. இதில் முதலாமவர் நேரடியாகவே எந்த வெளிநாட்டுத் தலையீடும் எதிர்க்கப்பட வேண்டியது என்கிறார். இரண்டாமவர் இலங்கைப் படைகளே புலிகளை நசுக்க வேண்டும். யாருடைய படையாள் உதவியும் சிறீலங்காவிற்குத் தேவையில்லை என்கிறார்.

புலிகளிடம் தோற்க வேண்டி வந்தாலும் வெளிநாடொன்றின் படை இங்கு வருவது தவிர்க்கப்பட வேண்டும் என்பது சிங்கள பௌத்த தேசியவாத அமைப்புகளின் கூட்டணித் தலைவர் தெளிவாக இவ்வாரம் லண்டன் டைம்ஸ் பத்திரிகையாளரிடம் சொன்ன கருத்து.

இதை இன்னொருவகையில் மிகச் சுவையாக ஆனால் மிக கவனமாக எண்ணிப் பார்த்துக் கூறுகிறார் நவீன சிங்களப் பௌத்த தேசியவாதத்தின் தந்தை குணதாச அமரசேகரா.

"சிங்கள தேசத்தைக் காப்பாற்ற வந்துள்ள விஷ்ணுவின் அவதாரந்தான் பிரபாகரன். அவர் இன்னொரு எல்லாளன். எல்லாளன் எம்மை நாற்பது வருடங்கள் ஆண்டபடியினாலேயே ஒரு துட்டகைமுனு தோன்றக் கூடியதாயிற்று. பிரபாகரன் இருந்திராவிட்டால் எம்மையறியாமலேயே நாம் (அந்நியருக்கு) எப்போதோ விற்கப்பட்டிருப்போம். எம்மையறியாமலேயே நாம் (அந்நியருக்கு) பலியிடப்பட்டிருப்போம். சிங்களப் பழமொழியொன்றின் வார்த்தைகளிற் சொல்வதானால் எமது கழுத்துகள் எமது குளியலாடைகளினாலேயே நசுக்கப்பட்டிருக்கும். இவையெல்லாவற்றிலிருந்தும் பிரபாரன் எம்மைக் காப்பாற்றியிருக்கிறார்." எனக் கூறுகிறார் அமரசேகர.

புலிகளிடம் யாழ்ப்பாணம் வீழ்ந்தால் அதன் பின்னர் அவர்கள் இலங்கை முழுவதையும் கைப்பற்றுவதை யாராலும் தடுக்க முடியாது என இன்று சில சிங்களச் சிந்தனையாளர் கருதுவதை நான் கொழும்பில் கேட்கக் கூடியதாய் உளது. சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா இந்துப் பத்திரிகைக்கு செவ்வாய்க்கிழமை (மே 23) அளித்த பேட்டியில் பிரபாகரனின் நோக்கம் முழு இலங்கையின் அதிபராக வருவதே எனக் கூறுவதிலும் மேற்படி எண்ணம் தொக்கு நிற்பதைக் காணலாம்.


இந்தியாவின் காலடியில் வீழ்ந்தாவது குடாநாட்டைக் காப்பாற்றுக என சிங்கள மக்கள் மத்தியில் இருந்த எண்ணம் ஏன் இப்போது மாறுகின்றது? உலகில் எந்நாட்டின் உதவியும் இன்றி 8 ஆயிரம் படையாட்களையே கொண்ட ஒரு படையுடன் புலிகளின் தலைவர் பிரபாகரனால் ஒரு இலட்சத்து இருபதினாயிரம் பேர் கொண்ட தம் படையை இந்த அடி அடிக்கக் கூடியதாயிற்றென்றால் நாம் இன்னும் இந்தியாவிடம் மடிப்பிச்சை கேட்டு நிற்பது கேவலத்திலும் கேவலம் அன்றோ என்றதோர் எண்ணம் அவர்களிடம் ஏற்படத் தொடங்கியுள்ளது என்பது கண்கூடு.

"யாழ்ப்பாணத்தை எமது படைகள் கைப்பற்றிய போது புலிகள் எந்த ஒரு நாட்டின் காலிலும் போய் விழவில்லையே. இவர்கள் (இலங்கை அரசு) மட்டும் ஏன் யாழ்ப்பாணம் விழுமுன்னரே மானங்கெட்டுப்போய் உலக நாடுகளிடமெல்லாம், அதிலும் குறிப்பாக இந்தியாவிடம், போய்க்காலில் விழுந்து காப்பாற்றும் படி வெட்கமற்று இறைஞ்சுகின்றார்கள்" என என்னிடம் கேட்டார் நான் முன்னர் வேலை செய்த ஒரு செய்தி அலுவலகத்தின் சிங்கள தேசியவாத எண்ணங் கொண்ட ஒரு சிற்றூழியர். (சிங்கள இனவாதிகளே தன்மானம் என்றால் என்ன என்பதைப் பற்றி பாடம் கற்கையில் இந்தியா ஏதோ செய்யப் போகிறது என மானங்கெட்டுப் பிதற்றும் தமிழ் கூறு நல்லுலகின் சில குடிமக்களை என்னவென்று சொல்ல)

எனவே குடாநாட்டுப் போரின் திசையை மாற்றும் வகையில் இந்தியா யாழ்ப்பாணத்தில் படையிறக்குவதற்கு சாதகமான அரசியல் சூழ்நிலை தெற்கில் இன்று அற்றுப் போய்க் கொண்டிருக்கின்றது என்பதே உண்மை. இதை இவ்வாரமே சற்றுக்கூர்ந்து நோக்கத் தலைப்பட்டுள்ளனர் டெல்லியதிகாரிகள். இவையெல்லாவற்றிற்கும் மேலாக இலங்கைப் படைகளைக் குடாநாட்டில் இருந்து வெளியெடுக்க இந்தியப் படைகள் தயார் நிலையில் உள்ளன என இந்தியச் செய்தி ஊடகங்களில் தொடர்ந்து செய்தி வருவதும், அந்த வகையில், டெல்லி அரசியலாளரும், அதிகாரிகளும் கருத்து வெளியிடுவதும் ஒரு கபட நோக்கத்திலேயே என்ற ஒரு காழ்ப்புணர்வும் தென்னிலங்கையில் ஒரு சிலரிடம் துளிர்விடத் தொடங்கியுள்ளது.

இலங்கை அரசாலும், இலங்கைப் படைகளாலும் எதையும் செய்ய முடியாது. இந்தியா தான் இறுதியில் கைகொடுக்க வேண்டும். இலங்கைப் படைகள் கையாலாகாதவர்கள் போன்ற கருத்துக்களை நிலைபெறச் செய்து தென்னாசியப் பிராந்தியத்தில் தன் வல்லாதிக்க நலனை முன்னிறுத்தவே யாழ்ப்பாணத்திலிருந்து படை வெளியெடுப்பு எனும் பூச்சாண்டியை டெல்லி தூக்கிப்பிடிக்கிறது என சில சிங்கள தேசியவாதிகள் தற்போது எண்ணத் தலைப்பட்டுள்ளனர்.

இவ்வெண்ணம் வலுக்குமானால் இந்தியா தான் நினைத்தபாட்டிற்கு குடாநாட்டினுள் கால் வைப்பதற்கு மேலும் முட்டுக்கட்டைகள் தோன்றும் என்பதில் ஐயமில்லை. இவற்றையும் இன்னோரன்ன விடயங்களையும் சீர்தூக்கிப் பார்க்காமல் இந்திய மத்திய அரசின் நடவடிக்கைகளைப் பற்றியும் எமது அரசியல் எதிர்காலத்தைப் பற்றியும் வாயளப்பது நன்றன்று என்பதே எனது கருத்தாகும்.



**டி.சிவராம்**

இதழ் 197இல் தணிக்கை அதிகாரியால் தணிக்கை செய்யப்பட்ட கட்டுரை இது.

நன்றி - நூலகத்திட்டம்



# தொழிற்சங்கங்களின் துரோகத்தனமும் தோட்டத் தொழிலாளர்களும்

அடிப்படை வாழ்க்கை வசதிகளற்ற, அரசியல், பொருளாதார உரிமைகள் மறுக்கப்பட்ட, நாட்டின் பொருளாதாரத்தில் முதுகெலும்பாய் இருக்கின்ற தோட்டத் தொழிலாளர்களை சரி, பிழைகளை இனம்காண முடியாதளவுக்கு மலையக சமூகத்தை பின்தங்கிய நிலைக்குத் தள்ளிய மலையக அரசியல் தலைமைகள் காலங் காலமாக அவர்களை ஏமாற்றி வருவதில் சாதனை படைத்துள்ளது. இந்தப் பட்டியலில் இறுதியாக தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்த பிரச்சினை தொழிற்சங்க தலைமைகளுக்கும் அரசியல் தலைமைகளுக்கும் பெரும் வெற்றியை அளித்துள்ளது எனலாம்.

தொழிலாளர்களின் சந்தாப் பணத்தில் பிழைப்பு நடத்துகின்ற தொழிற்சங்க தலைமைகள் இவ்விடயத்தில் அரசின் ஒடுக்கு முறையைவிட மோசமான துரோகத்தனத்தை இழைத்துள்ளன என்பதில் சந்தேகமேயில்லை.

மூன்று மாதங்களுக்கொருமுறை நாணய பெறுமதியிறக்கம் செய்யப்படுவதும், விலைவாசிகள் உயர்வதையும் அறிந்திருந்தும் 121 ரூபா சம்பள உயர்விற்கு இணக்கம் தெரிவித்திருப்பதும் இவ்வுடன்படிக்கை செய்யப்பட்ட தினத்திலேயே இலங்கை நாணயத்தின் பெறுமதியிறக்கம் செய்யப்பட்டதுவும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயங்களாகும். மலையக அரசியல் வரலாற்றில் இவ்வாறான துரோகச் சம்பவங்கள் சர்வ சாதாரணமாகிவிட்ட நிலையில் இதுவொன்றும் பெரிய விடயமல்ல என்று தப்பித்துக் கொள்ளலாம். ஆனால், இதற்குப் பின்னாலுள்ள பிழைப்புவாத அரசியலை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

பெருந்தோட்டத்துறையை அரசு தனியார் மயப்படுத்துவதில் பெரும் அக்கறை செலுத்தி வருகின்றது. அரைவாசிக்கும் மேற்பட்ட தோட்டங்கள் தனியார் வசம். இந்நிலையில் ஒரு குடும்பத்தில் மூவர் வேலை செய்கிறனர் என்றால் ஒருவருக்கு மட்டுமே வேலை வழங்கப்படுகின்றது. வருமானம் குறைவடைகின்றது. வேறு வழிகளில் வருமானத்தை ஈட்டக்கூடிய வசதிகளும் அவர்களுக்கில்லை. குறிப்பாக மலையகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடியேற்றங்களால் அவர்களின் சிறு கைத்தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. வேறு இடங்களில் வேலை செய்வதென்றால் பாதுகாப்பு, பயங்கரவாதம் என்று பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

அடிப்படை விடயங்களில் கவனம் செலுத்தாமல் தொடர்ந்தும் மாறி மாறி ஏமாற்றி வருகின்ற தலைமைகள் இச்சம்பவத்தில் மட்டும் மலையக மக்களுக்கு துரோகமிழைக்கப்பட்டு விட்டது, நியாயத்திற்காக வழக்கு தாக்கல் செய்வோம் என்றெல்லாம் கோஷமிட்டுக் கொண்டிருப்பவர்கள் காட்டிக்கொடுப்புக்களுக்கும், துரோகமிழைத்தல்களுக்கும் உடந்தையாக துணைபோனார்கள் என்பதை வரலாறு ஒருபோதும் மறந்துவிடப்போவதில்லை. வெற்றுக் கோஷமிடுவதில் எவ்வித நியாயமும் இருப்பதாக தெரியவில்லை.

இந்த சம்பள விடயத்தில் இன்னுமொரு வேடிக்கை என்னவென்றால், வரவிற்காக கோரப்பட்ட தொகை 10 ரூபாவாக இருக்க 14 ரூபா வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளமைதான். 90 வீத வரவிற்கே இக்கொடுப்பனவு வழங்கப்படும். சாதாரண எந்தவொரு மனிதனாலும் 90 வீத வரவை பூரணப்படுத்த முடியாத நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமென்ன விதிவிலக்கா? அவ்வாறு நடந்தாலும் அது தொழிலாளர்கள் மீது செலுத்தப்படுகின்ற உயர்ந்தபட்ச உழைப்புச் சுரண்டலாகத்தான் இருக்கும்.

தொடர்ந்தும் ஒரு சமூகத்தை ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது. எந்தவொரு சமூகமும் தன்னைத் தாங்கும் வரை தாங்கும் பின்னர் வெடித்துச் சிதறும். சமூக, பொருளாதார, கல்வியில் பின்தங்கிய சமூகமாயினும் வரலாற்று அனுபவங்கள் மலையக சமூகத்தை விழிப்புணர்வடையச் செய்யத்தான் போகிறது. அப்போது எந்தவொரு சக்தியும் அதனை அடக்கி ஒடுக்கிவிட முடியாதளவிற்கு கிளர்ச்சியுறும். அப்போது தொழிற்சங்க தலைமைகளும் அரசியல் தலைமைகளும் தான் பிரார்த்தனைப் போராட்டத்தில் ஈடுபட வேண்டிவரும். அந்தகாலம் மிகத் தொலைவில் இல்லை.

— தர்ஷினி

# பத்திரிகைப் பேரவையின் வக்கிரத் தீர்ப்பு!

வயதுவந்த "பெரும்பாலான" பெண்கள் மத்தியில் நிலவும் தன்னினச்சேர்க்கை மோசமான வகையில் தீர்த்துக் கொள்ளப்படும் காம இச்சையென இலங்கை பத்திரிகை பேரவையினால், பெண்கள் தன்னினச்சேர்க்கை குறித்து குரூரமான தீர்ப்பொன்று வழங்கப்பட்டுள்ளது.

பத்திரிகைப் பேரவையின் தலைவர் சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ச அவர்களினால் எழுதப்பட்டு அதன் பிற உறுப்பினர்களான ஆரிய ரூபசிங்க, தயா லங்காபுர எஸ்.குணரத்ன, லெஸ்லி தேவேந்திர, கே.எஸ். பெரேரா (செயலாளர்) கையெழுத்தில் வெளியிடப்பட்டுள்ள இம் முடிவு அடங்கிய தீர்ப்பு சர்வதேச தர, உள்ளூர் அறிவுஜீவிகள், மனித உரிமை ஆர்வலர்கள், நீதிமன்ற பிரிவு மற்றும் தொடர்பூடகங்களின் (ஒரு சில) விமர்சனத்திற்கும், கலந்துரையாடலுக்கும் உள்ளாகியுள்ளது.

1999 ஒகஸ்ட் 20 ஐலன்ட் பத்திரிகையில் 'ஆசிரியர் கடிதம்' பத்தியில் சர்ச்சைக்குரிய கடிதம் ஒன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. பெண் தன்னினச்சேர்க்கையாளர்கள் மாநாடு ஒன்று இலங்கையில் நடாத்தப்படுவது குறித்து பி.அலஸ் என்ற நபர் ஒரு ஆலோசனையுடன் இப்பத்தியில் ஒரு கடிதம் வரைந்திருந்தார்.

பெண்களை பாலியல் வல்லுறவு புரிந்த குற்றத்திற்காக சிறைகளில் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கும் குற்றவாளிகளை விடுதலை செய்து குறிப்பிட்ட அந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் பெண் தன்னினச்சேர்க்கையாளர்களை பாலியல் வல்லுறவு புரியச் செய்து உண்மையான ஆண் பெண் பாலுறவின் சுவையை அறியச் செய்ய வேண்டுமென அந் நபர் ஆலோசனை வழங்கியிருந்தார். ஐலன்ட் பத்திரிகையும் இந்த யோசனைக்கு முக்கியத்துவமளித்து விடயத்தை பிரசுரித்திருந்தது.

இவ்விடயம் குறித்து ஷர்மன் டி றோஸ் எனும் தன்னினச்சேர்க்கையாளர் சங்கத் தலைவர் (companions on a Journey), இலங்கை தேசிய பத்திரிகை பேரவைக்கு முறைப்பாடு செய்ததன் விளைவாகவே மேற்கூறப்பட்ட சர்ச்சைக்குரிய தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பாலியல் வல்லுறவாளர்கள் பெண்களுக்கு உரிய சுவையை அறியத்தருபவர்கள் என கூறும், குற்றவாளிகளை வீரர்கள் என உயர்த்திக் காட்டும், சட்டத்தை இழிவு செய்யும், பெண்களை இழிவுபடுத்தும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறையை நியாயப்படுத்தும் விதமாகவே இவ்வாறு பத்திரிகைப் பேரவை தனது தீர்ப்பை வழங்கியுள்ளது எனலாம்.

பத்திரிகைப் பேரவை இவ்விடயம் குறித்தான தீர்ப்பில் மிகவும் பாரபட்சமாக செயற்பட்டுள்ளமையை அவர்களது தீர்ப்பு அறிக்கை தெளிவுறுத்துகின்றது.

(1) பி.அலஸ் என்ற நபர் பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த வேண்டும் என குறிப்பிட்ட மாத்திரத்தில் எதுவும் நடைபெற்றுவிடாது. அது ஒரு உணர்ச்சி வெளிப்பாடு மட்டுமே.

(2) தன்னினச்சேர்க்கை இலங்கை சட்டத்தின்படி ஒரு சட்டவிரோத செயல். சட்டவிரோத செயலில் ஈடுபடும் ஒருவருக்கு சட்டரீதியான முறைப்பாடு செய்ய உரிமையில்லை.

(3) முறைப்பாடு செய்த ஆண் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுதல் குறித்து தனது அச்சத்தை தெரிவிக்க முடியாது. ஏனெனில் ஒரு ஆண் பாலியல் வல்லுறவுக்குள்ளாகும் வாய்ப்பில்லை. இந்த முறைப்பாட்டை ஒரு பெண் செய்தால் தாம் பாதிக்கப்படுவதன் வாய்ப்பு குறித்து பீதியை வெளிப்படுத்தலாம்.

என்பனவே இத்தீர்ப்பின் சாராம்சமாகும்.

ஷர்மன் டி றோஸ் ஒரு தன்னினச்சேர்க்கையாளராக இருந்தபோதிலும், தனது முறைப்பாட்டில் பெண்களின் பாலியல் உரிமை குறித்தே அதிகம் வலியுறுத்தியுள்ளார். சட்டத்தரணி ஏ.எம்.சுமந்திரம் அவர்களின் உதவியுடன், பெண்களுக்கு எதிரான வன்முறையை தாமும், தனது அமைப்பும் வன்மையாக எதிர்ப்பதாகவும், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைக்கு பகிரங்க அழைப்பு விடுக்கும் இவ்வாறான கட்டுரையை பிரசுரிப்பது தொடர்பூடக ஒழுக்கத்திற்கு எவ்வளவு தூரம் பொருத்தமானது என்ற வகையிலும் முறைப்பாடு செய்திருந்தார்.

எனினும், பத்திரிகை பேரவையின் தீர்ப்பு ஷர்மன் டி றோஸ் அவர்களை இழிவுபடுத்துவதாக அமைந்துள்ளது. இது பற்றி அவர் கருத்து தெரிவிக்கையில், "1999 ஒகஸ்ட் 24 பத்திரிகைப் பேரவைக்கு செய்த முறைப்பாட்டில், தன்னினச்சேர்க்கைக்கு சார்பாகவோ, எதிராகவோ, அது சரியா, பிழையா என்று கூறுமாறோ,

19

# அந்த ராணி என்ன ஆனாள்?

போதிய கல்வியறிவும் இல்லாமல் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டு தமது வறுமையைப் போக்கிக் கொள்வதற்காக தங்களுடைய சிறு பிள்ளைகளை நகரங்களுக்கு வீட்டு வேலைகளுக்கு அனுப்பி அவர்களது வருமானத்தில் வயிற்றை நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள் தோட்டத் தொழிலாளர்களில் ஒரு பகுதியினர். அப்பாவிகளான இவர்களுக்கு இதை விட்டால் வேறு வழி தெரியவில்லை. அந்த வகையில் வீட்டு வேலைக்கென கொழும்பு வந்து சேர்ந்தாள் ராணி. அவளுக்கு மிஞ்சி மிஞ்சிப் போனால் 15 வயது தானிருக்கும். அவள் ஹட்டனைச் சேர்ந்தவள்.

அவள் அந்த வீட்டுக்கு வேலைக்கு வந்த சில நாட்களிலேயே எனது நண்பியானாள். அவளைப் போல் நானும் நாடற்றவளாக இருப்பது தான் காரணமோ தெரியவில்லை அவளை எனக்கு மிகவும் பிடித்துப் போயிற்று. அவள் என்னுடன் பழகிய நாட்களில் அதிகமாகக் கதைத்தது "நான் வீட்டுக்குப் போகப் போகின்றேன். இங்கிருக்க எனக்குப் பிடிக்கவில்லை. நான் படிக்க வேண்டும்" என்பதே. அந்த வீட்டு எஜமானியை அவளுக்குப் பிடிக்கவில்லைப் போலும். எனக்கு மிகவும் கவலையாகவிருக்கும். அவளை எண்ணி என் மனம் இரக்கப்படும். என்னால் அது மட்டுமே செய்யக் கூடியதாக இருந்தது. அந்த நாட்களில் அவள் தன்னைப் பற்றி நிறையவே என்னிடம் கூறியிருக்கின்றாள். தான் பிறந்தது வளர்ந்தது படித்தது எல்லாம் ஹட்டனிலே தான் என்று சொன்னாள்: "நோய்வாய்ப்பட்ட அப்பா, மனநிலை பாதிக்கப்பட்ட அக்கா, பாடசாலை போகும் தம்பி, வாழ்நாள் முழுவதும் கொழுந்து பறித்துக் குடும்பத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் அம்மா இது தான் என்னுடைய குடும்பம்.

எனக்குச் சின்ன வயதிலிருந்தே படிப்பென்றால் உயிர். எங்களுடைய வீட்டிலிருந்து பாடசாலைக்குப் போக கனதூரம். ஆனால் படிப்பிலிருந்த ஆர்வம் காரணமாக தூரத்தையும் பார்க்காமல் பள்ளிக் கூடத்துக்கு பஸ் எடுத்துப் போய் வருவேன். வகுப்பிலே நான் தான் முதலாம்பிள்ளை. விளையாட்டுக் கூட எனக்கு அத்துப்படி.எங்கடை சனம் போல அடிமையாக வாழாமல் படித்து முன்னேறி நானொரு ஆசிரியையாக வர வேண்டும் என்பதே எனது கனவாக, எனது இலட்சிமாக இருந்தது. ஏன் எனக்கு ஆசிரியத் தொழிலில் விருப்பம் என்றால் என்னைப் போன்றவர்களை இந்த சமுதாய வாழ்க்கை நிலையிலிருந்து மாற்ற கல்வி ஒன்று தான் வழி கோலும் என்று நான் நினைத்தேன். வயதுக்கு வந்தவுடன் கொழுந்து பறிக்க பெயர் பதியாமல் படிப்பிலே ஆர்வங் கொண்டவர்களாக சமுதாயத்தில் சுதந்திரமான மனிதர்களாகத் எனது சந்ததியினர் இருக்க வேண்டும் என்பதற்காகவுமே. ஆனால், எனது கனவுகள் இலட்சியங்கள் நம்பிக்கைகள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீர் போல் ஆகுமென்று நான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. இன்று வேலைக்காரியாக அடிமையாக கேவலமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். எனக்கு இந்த வாழ்க்கை பிடிக்கவில்லை. படிக்கத்தான் முடியாவிட்டாலும் பெற்றோரின் அரவணைப்பில் பதுங்கி இருக்க எனது மனம் ஏங்குகிறது. ஆனால் அதற்கும் வாய்ப்பில்லாமல் போய் விட்டது.

எனது இடத்தில் நான் பிறந்து வளர்ந்து ஓடியாடி விளையாடிய எனது ஊரில் என்னால் வாழ முடியவில்லை. அங்குள்ள சிங்களக் காவாலிகள் என்னைப் போன்ற இளம் பெண்களை தங்களது காமக் கண்களால் மேய்வதும் எப்போது தனிமை கிடைக்கும் எமது பெண்மையைச் சூறையாடலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பதையும் நினைத்து ஒவ்வொரு நாளும் நாங்கள் செத்துப் பிழைத்தோம்.

அது மட்டுமில்லாமல் இரவு வேளைகளில் நாம் குடியிருக்கும் லயன்களுக்கு கல்லெறிவதும் பகலில் தெருவில் போகும் எங்களிடம் வம்பு பண்ணி கையைப் பிடித்து இழுப்பதும் நாங்கள் அழுது கொண்டு ஓடுவதுமே எமது அன்றாட வாழ்க்கையாகப் போனது.

அதனால் படிப்பும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம் எனது பெண்ணின் மானமும் உயிரும் நிலைத்திருக்கட்டும் என்று அப்பா என்னை இங்கு கொண்டு வந்து விட்டுவிட்டார். நானும் எனது இலட்சியங்கள் கனவுகள் எல்லாவற்றையும் கைவிட்டு வாழ்தலில் நம்பிக்கையின்றி இங்கு வந்து சேர்ந்துள்ளேன். இதே மாதிரிதான் எனது அக்காளையும் ஒரு வீட்டில் கொண்டு போய் விட்டார்கள் ஆனால் அவள் ஓரிரு மாதங்களிலேயே மனநோயாளியாய் வீட்டுக்கு வந்து விட்டாள்.

அவள் சொன்னாள்: அவளது அக்கா ஆரம்பத்தில் நன்றாகத்தானிருந்தாளாம் அம்மா படும் கஷ்ரத்தைப் பார்க்கப் பொறுக்காமல் கொழும்பில் ஒரு வீட்டில் வேலைக்காரியாகச் சேர்ந்தாளாம். அந்த வீட்டு எஜமானியின் கொடுமைகள் தாங்க முடியாமல் தான் அவள் மனநோயாளியாக ஆக்கப்பட்டாளாம். இவ்வாறு அவள் கூறியவை ஏராளம் ஏராளம். இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த எனக்குள் ஒரு புறம் ஆச்சரியமும், அதே நேரமும் ஆத்திரமும் ஏற்பட்டது. என்னால் என்ன செய்ய முடியும் ஒன்றில் இரக்கப்பட முடியும் அல்லது அவளுக்காக இரண்டு சொட்டுக் கண்ணீர் விட முடியும்.

பின்னர் பல நாட்களாக ஏனோ அவளை என்னால் சந்திக்க முடியவில்லை. எனக்கும் பரீட்சைகள் நெருங்கும் சமயமாக இருந்ததனால் அதற்கான ஆயத்தங்களைச் செய்வதில் நானும் அவளை மறந்து போனேன். பரீட்சைகள் முடிந்த பின் ஒருநாள் எனக்கு அவளை கனநாளாகப் பார்க்கவில்லையென்ற எண்ணம் வந்தது. அவளைப் பார்ப்பதற்காக அவள் வேலை செய்த வீட்டிற்குப் போனேன். அங்கு அவள் இல்லை. அவளுக்குப் பதிலாக இன்னொரு பெண் நின்று கொண்டிருந்தாள். என்னைக் கண்டவுடன் அந்த வீட்டு எஜமானி ராணி ஊருக்குப் போய்விட்டாள் என்றும் அவள் தமக்கு விசுவாசமானவளாக இல்லாமையினால் தாம் அவளை வைத்திருக்க விரும்பவில்லையென்றும், அவள் சரியான பொய் பித்தலாட்டக்காரியென்றும் கூறினார். நானும் அப்படியா? என்று தலையசைத்து விட்டு வீட்டுக்கு வந்து விட்டேன். எனக்குள் ஏதோ ஒரு உணர்வு என்னை உறுத்திக் கொண்டிருந்தது. நான் அவளைச் சந்திக்காத அந்த நாட்களில் என்ன நடந்திருக்கும்.?

வீட்டிற்குப் போயிருப்பாய். அம்மாவின் மடியில் தலைபுதைத்து சுகங்காண ஆசைப்பட்டிருப்பாய். பாடசாலைக்குப் போகும் உன் வயதொத்தவர்களைப் பார்த்து ஏங்கியிருப்பாய்.

ஆனாலுமென்ன வயிறும் வாயுமிரும் உனது கனவுகளை நொருக்க அம்மாவின் சுமையைப் பகிர்வதற்காக திரும்பவும் எந்த வீட்டின் பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டிருக்கிறாயோ?

- சுரபி

# 1999 யுத்தத்தின் போக்கு ஒரு கணக்கெடுப்பும் சில குறிப்புகளும்




### 5. அனுமானங்களும் சவால்களும்

### 5.1. வன்முறையின் அரசியல் கலாசாரம்

2000மாம் ஆண்டு இலங்கையின் தேர்தல் ஆண்டாகும். பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் பொதுத் தேர்தல் ஆண்டான 2000, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, சமாதானத்தை ஏற்படுத்தும் ஆண்டாக ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தேர்தலில் வெற்றி பெறுதல், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருதல், அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் ஊடாகச் சமாதானத்தை ஏற்படுத்தல் என்பன அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலின் பிரதான பகுதிகளாகும்.

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தினால் உத்தேச அடிப்படை மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் ஜனநாயக சமூகத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தேர்தலில் வெற்றி பெறுதல் போன்ற தேவைகளுக்கிடையில் உக்கிரமான முரண் தன்மை தற்போது வளர்ச்சி பெற்றுள்ளது. 1999ம் ஆண்டு முழுவதும் நடைபெற்ற நான்கு தேர்தல் சந்தர்ப்பங்களில் தேர்தலை நீதியாகவும், நியாயமாகவும் நடாத்த அரசாங்கம் தவறியது. அரசியல் வன்முறை மற்றும் கள்ள வாக்கு இயக்கங்கள் மட்டுமன்றித் தேர்தல் காலங்களில் அரச தொடர்பூடகங்கள் உள்ளிட்ட அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமையை 1999ல் காணலாம். பொ.ஐ.முவின் (அதாவது ஆளும் கட்சியின்) தேர்தல் கலாசாரம் முழுமையாகவே ஜனநாயகத்திற்கு விரோதமானது. ஜனநாயக சமூகத்தின் பிற அனைத்துச் சுதந்திரங்களின் அடிப்படையாகக் கருதப்படக் கூடிய தொடர்பூடகச் சுதந்திரத்தை நசுக்குதல் மற்றும் தனது கட்டுப்பாட்டிற்குள் வராத தொடர்பூடகங்கள் மற்றும் தொடர்பூடகவியலாளர்களைத் தாக்குதல் அரசாங்கத்தின் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளாகியுள்ளன.

புதிய அரசியலமைப்பு சீர்த்திருத்தம் குறித்தான ஒரு மாயையான பற்று அரசாங்கத்திடம் இருக்கின்றதா என்பது பற்றியதான ஒரு உரைக்கல்லாக அரசியல் வன்முறை சிக்கல் இருக்கக்கூடும். பொ.ஐ.மு. தவிர்ந்த பிரதான எதிர்க் கட்சியான ஐ. தே. கவும், மூன்றாவது கட்சியான ஜே. வி. பியும் அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடைமுறைகள் குறித்துப் பலத்த எதிர்ப்பை 2000ம் ஆண்டின் முதற் பகுதியில் வெளிக்காட்டியிருந்தன. குறிப்பாக, ஜே.வி.பி. நாடு முழுவதும் சிவில் அமைப்புகள் ஆயிரக்கணக்கானவற்றை வரவழைத்து, இந்த ஜனநாயக விரோத போக்கைத் தோற்கடிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியது. தொடர்பூடகவியலாளர்களின் மற்றும் கலைஞர்களின் அமைப்புகள் தமக்கெதிராக உள்ள அரசியல் வன்முறைகளைக் கண்டிக்க முன்வந்துள்ளன. வடக்கு கிழக்குக்கு வெளியே இலங்கைச் சமூகம் இன்று அரசியல் வன்முறையின் பிடிக்குள் அகப்பட்டுள்ளது. இந்த நிலைமையை மாற்றும் பொறுப்பு அரசாங்கத்தின் பொறுப்பாகும். நாட்டில் சமாதானமான சூழலைக் கட்டியெழுப்புதல், புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தங்களின் வெற்றியின் ஒரு முக்கியமான பிரச்சினையாகத் தோன்றும் என்பது உறுதி. பொதுத் தேர்தலை வெற்றி கொள்ள அரசியல் வன்முறை மற்றும் துஷ்பிரயோகங்களைப் பயன்படுத்தும் அடிப்படையை அரசாங்கம் கொண்டிருக்குமாயின், இதனால் ஏற்படுத்தப்படும் அரசியல் சூழல் சமாதானத்தை ஏற்படுத்த ஏற்புடையதாக இருக்காது.

இதன்படி இரு தரப்பினரின் முயற்சி, மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் மற்றும் புதிய அரசியல் சீர்திருத்தம் பற்றிய கலந்துரையாடலை இந்நாட்டில் அடிப்படையாகக் கொண்டு நிலவும் அரசியல் வன்முறையைத் தோற்கடிக்கும் கலந்துரையாடலாக மாற்றுதல் எதிர்வரும் காலத்தில் முக்கியமான விடயமாக இருக்கும் எனலாம்.

### 5.2 சிங்கள பௌத்த தேசியவாத அடிப்படைவாதம்

ஜனாதிபதித் தேர்தலில் அரசாங்கத்துடன் நட்பைப் பேணிய, பகிரங்கமாக எதிர்ப்புத்தெரிவிக்காத சிங்கள - பௌத்த - தேசியவாத -

> "புலிகள் மற்றும் அரசாங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை ரீதியிலான தீர்வுக்கு எதிராக மோசமான எதிர்ப்புணர்வைக் காட்டக்கூடியவை இந்தச் சிங்கள அடிப்படைவாதச் சக்திகள் மட்டுமே. தற்போது இந்தச் சக்திகள் அரசாங்கத்தில் பலம் வாய்ந்தவையாக உள்ளன. அரசாங்க இயந்திரத்தில் அவர்கள் அழுத்தம் இராணுவச் சக்திகளுக்குச் சார்பானது. சிங்கள வர்த்தக, முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதரவு, தியாகம், அரச அதிகாரம் பற்றிய தத்துவங்கள் தற்போது இவற்றிடம் உள்ளன."

அடிப்படைவாத சக்திகள் தமது செயற்பாடுகளை அதிகரித்துக் கொள்ளும் எனலாம். 2000மாம் ஆண்டு ஆரம்பத்தில் வடக்கு கிழக்குக்கு வெளியே பயணிகள் போக்குவரத்துப்

## வன்முறைக் கலாசாரத்தைக் கையிலெடுத்த அரசாங்கம்!

பேருந்துகளில் குண்டுகளை வெடிக்க வைக்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. யாரால் செய்யப்பட்டாலும், இந்தத் தீவிரவாதக் குண்டுத் தாக்குதலின் நன்மை அடிப்படைவாத இயக்கங்களுக்குரித்தாயின. புலிகள் மற்றும் அரசாங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை ரீதியிலான தீர்வுக்கு எதிராக மோசமான எதிர்ப்புணர்வைக் காட்டக்கூடியவை இந்தச் சக்திகள் மட்டுமே. தற்போது இந்தச் சக்திகள் அரசாங்கத்தில் பலம் வாய்ந்தவையாக உள்ளன. அரசாங்க இயந்திரத்தில் அவர்கள் அழுத்தம் இராணுவச் சக்திகளுக்குச் சார்பானது. சிங்கள வர்த்தக, முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதரவு, தியாகம், அரச அதிகாரம் பற்றிய தத்துவங்கள் தற்போது இவற்றிடம் உள்ளன. அரசியல் தீர்வு மூலம் சமாதானம் ஏற்படுவதைத் தடுக்க, தமிழ் அடைப்படைவாத இயக்கங்களுக்கு தென்பகுதியில் நம்பிக்கையானவர்களாகவும், தமது காரியத்தை சாதித்துக்கொள்ளுவதற்கு உதவுபவர்களாகவும் இந்தச் சிங்கள - பௌத்த - தேசியவாத - அடிப்படைவாதம், 1999 வருடம் முழுவதும் சுட்டிக் காட்டியதன்படி, பலாத்காரத்தினால் தமது எதிரிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக் கூடும். 2000மாம் ஆண்டு ஜனவரி 25ம் திகதி, கண்டியில் அவர்கள் வடக்கில் யுத்தத்தை வெற்றி கொள்ளும் முன்னர், தெற்கின் சமாதானவாதிகளுடனான பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தனர். நாடு முழுவதும் வளர்ச்சி பெற்று வரும் அரசியல் வன்முறையின் சூழல் அவ்விதம் காணப்பட்டால் இச்சக்திகளுக்கு நன்மை விளையும் எனலாம். அரசியல் வன்முறையைப் போன்று சிங்கள - பௌத்த - தேசியவாத - அடிப்படைவாத இயக்கங்களின் வன்முறையின் ஆவல் குறித்துக் கவனமாக இருப்பதும், அவற்றை வெளிப்படுத்தித் தோற்கடித்தலும் சமாதான மற்றும் ஜனநாயகவாத இயக்கங்களின் சவாலாக இருக்கும்.



### 5.3 அரசியலமைப்புச் சீர்திருத்தம்

அரசாங்கம், யாப்புச் சீர்திருத்தம் குறித்து மீண்டும் ஒரு முறை தயாராகி வருகின்றது. 1996, 1997ல் இவ்வாறான முயற்சியை அரசாங்கம் மேற்கொண்டது. பலதரப்பட்ட பிரச்சார இயக்கங்களும் ஒழுங்கு செய்யப்பட்டன. எனினும், இறுதியில் அவ்வனைத்து யாப்புச் சீர்திருத்த முயற்சிகளின் விளைவாக யுத்தம் விரிவாக மேற்கொள்ளப்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. உத்தேச அரசிலமைப்புச் சீர்திருத்த யோசனைகள் பற்றித் தமிழ் மக்கள் மத்தியில் காணப்பட்ட சந்தேகம் அவ்விதமே காணப்பட்டது. அதாவது, இதுவரையில் 1948 தொடக்கம் சிங்கள ஆட்சியாளர்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்த ஏமாற்றுத் தனங்களின் இன்னுமொரு நடைமுறையாக இருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில், தெற்கின் பிரதான அரசியல் சக்திகளின் இணக்கத்தின்படி அரசியல் தீர்வு யோசனைகள் அடங்கிய புதிய யாப்பு வரைவுப் பிரதி செய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனினும், இவ்வாறான யாப்புச் சீர்திருத்த யோசனைகளை அரசியல் தீர்வுக்கான எல்லையாக அன்றி, இறுதித் தீர்வாகக் கருதப்படக் கூடாது. ஏனெனில், தெளிவாகப் புலிகள் இயக்கத்தின் இணக்கத்தைப் பெறுவதற்கு அதிகாரத்தைப் பரவலாக்கும் உயர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனினும், யாப்புச் சீர்திருத்தம் குறித்துத் தற்காலத் தர்க்கங்கள், கலந்துரையாடல்கள் இவ்வாறான நெகிழ்சிக்கு இடமளிக்காது மேற்கொள்ளப்படுகின்றன.

உத்தேச யாப்பு யோசனைகளைத் திறமையாக மேற்கொள்ளக் குறிப்பாகத் தமிழ் மக்களுக்கிடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் அவசியம். அவர்களது மனித உரிமைகளைப் பாதுகாப்பதும், அரசியல் சூழலை அவர்களுக்கு வழங்குவதும் அவசியம். வடக்குக் கிழக்கு மக்களின் அன்றாட வாழ்க்கையின் விருப்பு - வெறுப்புகள், நீண்ட காலமாக வழக்குத் தாக்கல் செய்யாது தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், கொழும்பு மற்றும் சுற்றுப் புறச் சூழலில் உள்ள தமிழர்களின் கௌரவத்தைப் பாதுகாக்கும் நடைமுறைகள் என்ற வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய கலந்துரையாடல்கள் பல உள்ளன. யாப்புச் சீர்திருத்த முயற்சியின் பிரச்சினைகள் குறித்த தெளிவான முயற்சிகளை இன்னும் காணக் கிடைக்கவில்லை. இந்த நிலைமையை மாற்றும் நடவடிக்கைகள் சமாதானத்திற்காக எடுக்கப்படும் அடிப்படையாக அமையும்.

சமாதானமான தீர்வை ஏற்படுத்த, மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதலைப் போன்று மோதலில் இரண்டு தரப்பார் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படல் வேண்டும். யுத்த நிறுத்தம் இந்த முயற்சிகளின் நடவடிக்கைகளாக அமைதல் வேண்டும். யுத்தத்தின் பங்காளர்களுக்கிடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் பிரதான வழியான மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தற்போது காணப்படுகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். சமாதான வழி இவ்விடயங்கள் நிறைவேற்றப்பட்டால் தான் ஏற்படும். புலிகள் மற்றும் அரசாங்கத்துக்கு இடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதலைப் போன்று, மக்களுக்கிடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதலும் சமமான முக்கியத்துவம் கொண்டவை. சிவில் - சமூக - சமாதான - ஜனநாயக இயக்கங்களின் பிரதான முயற்சியாக இந்த நடவடிக்கைகள் அமையலாம். யுத்தப் பங்காளர்களின் பேச்சுவார்த்தை மேசையில் சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்களின் அழுத்தம் மற்றும் கோரிக்கையைச் சமர்ப்பித்தல் சிவில் - சமூக இயக்கங்களின் முக்கியமான ஒரு நடவடிக்கையாகும்.

**(இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள 'இலங்கையின் (இன மோதல்கள் 1999 - 2000 வளர்ச்சியும் போக்கும்) நூலில் இருந்து எடுக்கப்பட்டது.)**

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய சிங்கள தேசியவாதத்தின் எழுச்சி!

இக்கட்டுரை இரு பகுதிகளை உடையது.

இவ்விதழில் வெளியாகும் முதல்பகுதி சிங்களத் தேசியவாதம் உருவான பின்னணியையும் அதற்குக்காரணமாயமைந்த தலைவர்கள் மற்றும் நிறுவனங்கள் பற்றி விவரிக்கிறது.

இரண்டாவது பகுதி 1990களின் பின்னரைப்பகுதியில் சிங்கள தேசியவாதம் எவ்வாறு மறுவார்ப்புச் செய்யப்பட்டு உத்வேகம் பெறுகிறது என்பதையும், அதற்குக் காரணமாயமைந்த தலைவர்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் அவற்றின் போக்குகள் என்பவற்றை ஆராய்கிறது.

19ஆம் நூற்றாண்டின் பின்பாதியில் ஆரம்பமான சிங்களத் தேசியவாதம், 20ம் நூற்றாண்டு முழுமையையும் கடந்து நாட்டின் பிரதான தத்துவார்த்த அரசியல் போக்காகத் தொடர்ந்து இருந்து வருகிறது. அதன் ஆரம்ப காலங்களில் ஏகாதிபத்திய அரசாங்கத்தை அது தனது பிதான



அநகாரிக தர்மபால

> ‘20ம் நூற்றாண்டின் முதற்பாதிக் காலத்தில் சிங்கள வணிகக் குடும்பம் ஒன்றில் பிறந்த அநகாரிக தர்மபால அவர்களே சிங்கள தேசியவாதத்தின் பிரதான பேச்சாளராக இருந்தார். சிங்கள எழுச்சி இயக்கத்தின் மூலவர் என்று கருதப்படுபவர் இவரே. அவரது ஆரம்ப பௌத்த எழுச்சி நடவடிக்கைகள் கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு எதிராகவே இருந்தது.’

எதிரியாகக் கருதவில்லை. மாறாக, இலங்கையின் வர்த்தகத்தில் ஆதிக்கம் வகித்து வந்த சிறுபான்மை இனத்துவக் குழுக்களையே அது தனது பிரதான எதிரிகளாகக் கருதியது. அவர்களில் முக்கியமானவர்கள் முஸ்லிம்களும், இந்திய மற்றும் பாகிஸ்தானிய வர்த்தகர்களுமாவர். சிங்கள வணிக முதலாளிய வர்க்கத்தின் எழுச்சியின் தேவையோடொட்டி எழுந்த இந்த நிகழ்வில் இந்த முதலாளிய வர்க்கம் தன்னை சிங்கள பௌத்த எழுச்சியாக வெளிப்படுத்தியது. இந்த எழுச்சிக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியவாத இயக்கமொன்றிற்குரிய எத்தகைய முதிர்ச்சியும் இருக்கவில்லை. குமாரி ஜெயவர்த்தன இதன் பிரதான போக்குகளை இவ்வாறு வகுக்கிறார்:

1. 19ம் நூற்றாண்டில் வளர்ந்து வந்த சிங்கள வணிக முதலாளிய மூலதனமும், அதற்கு ஒப்பீட்டளவில் அந்நிய மற்றும் சிறுபான்மை இன மூலதனங்களை விட இருந்த பலமும்.
2. சிங்கள பௌத்த அடையாளத்தை மத கலாசார எழுச்சிகளூடாக சிங்கள வர்த்தகர்களும், குட்டி முதலாளிகளும் வெளிப்படுத்தியமை.

ஆகவே, இன்றைய புதிய சிங்கள தேசியவாதத்திற்கான வேர்கள் அன்றைய ஆரம்ப நாட்களிலேயே இருந்திருக்கின்றன. அன்றிலிருந்து இன்று வரை நிலவிவரும் ஒரு கருத்து என்னவென்றால், சிங்களவர்கள், தமிழர்களைப் போல திராவிட இனவழிவந்தவர்கள் அல்ல, மாறாக, உயர்ந்த இனக்குழுவான ஆரிய இனத்திலிருந்து வந்தவர்கள் என்பதாகும். இரண்டாவது தத்துவார்த்த நிலைப்பாடு என்னவென்றால், சிங்கள இனத்தின் தோற்றத்தை விஜயனின் வருகையுடன் சம்பந்தப்படுத்திப் பேசுவதாகும். மூன்றாவதாக, பண்டைக் காலத்திலிருந்தே இருந்துவரும் சிங்களவர்களுக்கும், பௌத்தத்துக்கும் இடையிலான உடைக்க முடியாத உறவு. பௌத்தத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு சிங்களவர்களுடையது. ஆகவே உண்மையான ஒரு சிங்களவர் கட்டாயம் ஒரு பௌத்த சிங்களவராக இருக்க வேண்டும்.

### சிங்கள தேசிய வாதத்தின் ஆரம்பம்

இந்த விதமாக ஆரம்பித்த சிங்கள தேசியவாதம், 20ம் நூற்றாண்டு முழுவதுக்குமாக அரசியற் களத்திலிருந்து பல ஏற்ற இறக்கங்களைச் சந்தித்த போதும் - வளர்ந்து வந்துள்ளதுடன், அது ஒரு சிங்கள இயக்கமாக மட்டுமல்லாமல் பௌத்த சிங்கள இயக்கமாகவும், இருந்து வந்துள்ளது. சிங்களத் தேசியவாத இயக்கம் படிப்படியாக தனக்கென ஒரு தத்துவார்த்த அடிப்படையை வளர்த்தெடுப்பதில் வெற்றி பெற்றது. அத்துடன் இலங்கையில் வாழும் பிற இனக்குழுமங்களுக்கு எதிரான பரவலான பிரசாரத்தை முக்னெடுத்துச் செல்வதிலும் வெற்றி பெற்றது. சிங்கள பௌத்தர்கள் அல்லாத சிங்களவர்களை ஆரம்பகால சிங்கள தேசியவாதிகள் பிறத்தியார் என்று குறை கூறினர். சிங்கள பௌத்தர்களால் கட்டியெழுப்பப்பட்ட கடந்த பொற்காலம் அந்நிய ஐரோப்பியராலும், இந்தியர்களாலும், முஸ்லிம்களாலும் அழிக்கப்பட்டு விட்டது என்று அவர்கள் சாதித்தனர்.

### சிங்கள தேசிய இயக்கத்தின் மூலவர்

20ம் நூற்றாண்டின் முதற்பாதிக் காலத்தில் சிங்கள வணிகக் குடும்பம் ஒன்றில் பிறந்த அநகாரிக தர்மபால அவர்களே சிங்கள தேசியவாதத்தின் பிரதான பேச்சாளராக இருந்தார். சிங்கள எழுச்சி இயக்கத்தின் மூலவர் என்று கருதப்படுபவர் இவரே. அவரது ஆரம்ப பௌத்த எழுச்சி நடவடிக்கைகள் கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு எதிராகவே இருந்தது. அத்துடன் அவர் அக்காலத்தில் இயங்கிய குடி ஒழிப்பு இயக்கத்தின் தலைவராகவும் இருந்தார். அவர் நாடு முழுவதும் சுற்றுப் பயணங்கள் செய்து பௌத்தர்கள் அல்லாதவர்களை மட்டுமல்லாது தனது ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் ஏற்றுக் கொள்ளாத சிங்கள பௌத்தர்களையும் அவருக்கே உரிய கடுமையான கோபமும் வெறுப்பும் கலந்த வார்த்தைகளால் சாடி உரை நிகழ்த்தினார். அவருடைய இந்த கடுமையாக பேசும் முறையை பல சிங்கள பௌத்த கிளர்ச்சியாளர்கள் கைக்கொள்ளத் தொடங்கினார்கள். 'சிங்களவர்கள் ஆரியர்கள். எந்தக் காட்டுமிராண்டிகளின் இரத்தக் கலப்பும் அற்றவர்கள். சிங்களப் பெண்கள் வேறு இனத்தவருடன் கலப்பதிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார் அவர்.

சிறுவர்கள் மத்தியில் தேசபக்தியை வளர்ப்பதற்காக, மரங்களுக்கு நீளக்காட்சை அணிவித்து, அதனை அடிக்கச் செய்யும்படி கூறியது அவரது அறிவுறுத்தல்களுள் ஒன்றாகும்..! பௌத்த பிக்குகள் கூட இவரது தாக்குதல்களிலிருந்தும் அவமதிப்புகளில் இருந்தும் தப்ப முடியவில்லை. ஆனால், அவரதும், அவரைப் போன்ற பிற சிங்கள பௌத்த பிரசாரவாதிகளதும் கோபமும், வெறுப்பும் நாட்டின் காலனித்துவ ஆட்சியாளர்கள் மீது காட்டப்படவில்லை. எழுந்து வந்த சிங்கள முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதரவானது இன்னமும் சிறுபான்மை வணிகக் குழுமங்களை இலக்கு வைத்ததாக இருந்ததே அன்றி ஏகாதிபத்திய ஆட்சியாளர்களுக்கு எதிராக அமையவில்லை. அந்த வர்க்கம் அவர்களுடன் சண்டையிடவும் இல்லை. இந்த இயல்பு காரணமாகத் தான் சிங்கள தேசியவாத இயக்கம் சுதந்திரத்திற்கான தேசிய இயக்கத்தில் எந்த அதிகாரமிக்க பதவியையும் பெற்றுக் கொள்வதில் வெற்றி பெறவில்லை. இலங்கையின் சுதந்திரத்திற்கான போராட்டம் அனைத்து இனக்குழுமங்களையும் சேர்ந்த உயர் குழாத்தினரின் கூட்டு முயற்சியாகவே அமைந்திருந்தது.


### பிக்குகளின் வருகை

எவ்வாறாயினும், இலங்கை அரசியலில் சிங்களத் தேசியவாத இயக்கத்தின் தலைமைப் பாத்திரத்திற்கு புத்தபிக்குகள் வந்துசேர நீண்ட காலம் எடுக்கவில்லை. அதுவரை தமிழையும் சிங்களத்தையும் உத்தியோகபூர்வ மொழியாகக் கொள்வதென்று கருதப்பட்டுவந்த நிலைமைக்கு மாறாக, 1956ல் சிங்கள மொழி மட்டும் 24 மணிநேரத்துள் உத்தியோகபூர்வ மொழியாக்கப்படும் என்ற வாக்குறுதியைக் கொடுத்ததன் மூலம் மிகப்பெரிய பாராளுமன்ற பெரும்பான்மையுடன் அதிகாரத்தைக் கைப்பற்றினார் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா. அதன் பின்னர் சிங்கள பௌத்த சக்திகளிடம் பிரதமர் பண்டாரநாயக்காவை கட்டுப்படுத்தக்கூடிய ஒரு பிடி, அவர் 1959ல் ஒரு பௌத்த பிக்குவால் கொல்லப்படும் வரை இருந்து வந்தது. அவர் பதவியேற்பதற்கு நான்கு ஆண்டுகட்கு முன்னர் அவர் அன்று ஆளும் கட்சியாக இருந்த ஐ.தே.கவிடமிருந்து தலைமைத்துவ அதிகாரப் பிரச்சினை காரணமாகப் பிரிந்து வந்திருந்தார். 1927ல் இவர் தான் முதன் முதலாக இலங்கைக்கு சமஷ்டி முறைமையை இலங்கை அரசியல் நிலைமைக்குப் பொருத்தமான முறை என்று முன்மொழிந்தவர். ஆனால், அதிகாரத்திற்கு வருவதற்கு அவர் சிங்கள பௌத்த தேசியவாதத்திடம் சரணடைந்து கொண்டார்.



### தத்துவார்த்த இயக்கத்தின் வருகை

சிங்கள தேசியவாதத்தின் எழுச்சி அரசியலில் ஏற்பட்டுக் கொண்டிருக்கையில் அதற்குச் சமாந்தரமாக, சிங்கள தேசியவாதத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வரலாற்றை வியாக்கியானப் படுத்துகின்ற ஒரு தத்துவார்த்த இயக்கமும் எழுந்து வந்தது. இந்த தத்துவார்த்த இயக்கத்தின் முக்கிய நோக்கம், காலனித்துவத்திற்கு முந்திய இலங்கையின் வரலாறு முழுக்க முழுக்க சிங்கள பௌத்தத்தின் வரலாறே என்று நிருபிப்பது தான்! பேராசிரியர் தென்னக்கோன் விமலானந்த போன்ற வரலாற்றாசிரியர்கள் வரலாறு குறித்த இந்த வியாக்கியானத்தின் தலைமைப் பாத்திரத்தை ஏற்றுக் கொண்டனர். இப்படி நிருபணம் செய்யும் நோக்கிலான வியாக்கியானம் இற்றைவரை தொடர்ந்த வண்ணமே உள்ளது.



சிங்கள தேசியவாதிகளின் நடவடிக்கைகளில் ஒன்று

இந்த அரசியல் தத்துவார்த்த சக்திகள், இலங்கையை ஒரு பல்லின பல் கலாசார நாடு என ஏற்றுக் கொள்வதனைத் தடுக்கும் செயற்பாட்டில் கடந்த 50 வருடங்களாக வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். 1957, 1966, 1987ம் ஆண்டுகளில் இலங்கை அரசை அதிகாரப்பகிர்வு மூலம் மீளமைப்பு செய்ய எடுத்த முயற்சிகள் அனைத்தும் சிங்கள தேசியவாத சக்திகளின் எதிர்ப்பின் காரணமாகத் தான் வெற்றி பெறாமல் போயின. பௌத்த பிக்குகள் இன்றெல்லாம் இந்த எதிர்ப்பிற்கான ஆன்மீக தலைவர்களாக உள்ளனர். அதேவேளை இந்த சிங்கள தேசியவாத இயக்கம் தமக்கென பல பிரசித்தி பெற்ற அரசியல் தத்துவார்த்த சிந்தனையாளர்களை கடந்த காலங்களில் தோற்றுவித்துள்ளது. சிங்கள வாக்காளர்களில் தங்கியுள்ள, ஏறக்குறைய எல்லாப் பெரிய அரசியல் கட்சிகளும், அவர்களது செல்வாக்குக்கு குறைந்தளவிலோ பெரியளவிலோ - நாட்டின் அரசியல் சூழ்நிலையைப் பொறுத்து - உட்பட்டுத்தான் இருக்கிறார்கள்.

இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இருபெரும் அரசியல் கட்சிகளும், சிங்கள தேசியவாதத்தை பதவிக்கு வருவதற்காக தமது குறுகியகால அரசியல் கூட்டுகளாக ஏற்றுக்கொண்டு வந்திருக்கின்றன. அவர்கள் சிங்கள பௌத்த சுலோகங்களை ஏற்றுக் கொண்டும் உள்வாங்கியும் செயற்பட்டு வருவதன் மூலமாக சிங்கள தேசியவாதத்தை பலமூட்டியும் வந்துள்ளார்கள். உதாரணமாக, இனப்பிரச்சினையின் இன்றைய நெருக்கடியான சூழலிலும், இலங்கை அரசாங்கம் முழு நாட்டையும் இராணுவ மயப்படுத்துவதற்கான சிங்கள தேசியவாத வேலைத்திட்டத்தை உள்வாங்கியுள்ளது.

### சமஷ்டிக்கும் தமிழர்களுக்கும் எதிரான வளர்ச்சி

இந்த விதத்தில் சிங்களத் தேசியவாதம், அண்மைக்காலம் வரை தனது அரசியல் வெளிப்பாட்டினை வேறு வேறு நோக்கங்களைக் கொண்ட பிற அரசியல் கட்சிகளினூடாக வெளிப்படுத்தி வந்தது. சுந்திரத்துக்குப் பிந்திய சிங்கள தேசியவாத இயக்கத்தின் பிரதான பிரதிநிதிகளுள் ஒருவரான களுவட்டவாகே சிறில் மத்தியூ இதை மிகவும் தெளிவாகப் பின்வருமாறு கூறுகிறார்:

"சிங்கள மக்கள் முன்னாலுள்ள ஒரேயொரு தீர்வு இதுதான். சிங்களவர்களுக்கு எதிரான சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்த சமஷ்டிவாதிகளையும், மலைநாட்டுத் தமிழர்களையும் நேரடியாகவோ, மனப்பூர்வமாகவோ எதிர்க்கின்ற கட்சி எது என அறிந்து (ஐ.தே.கவா அல்லது ஸ்ரீ.ல.சு.க.) அதன் கீழ் அணிதிரள்வது தான். சிறில் மத்தியூ யாழ் தமிழர்களின் சமஷ்டிக் கோரிக்கைக்கு எதிராகவும், மலையகத் தமிழரின் பிரசாவுரிமைக் கோரிக்கைக்கு எதிராகவும், மிகவும் பலமான தத்துவார்த்தப் பிரச்சாரத்தையும் அமைப்பு ரீதியான நடவடிக்கைகளையும் 70களிலும், 80களின் நடுப்பகுதிவரையும்

நன்றி - நூலகத்திட்டம்



தொடர்ச்சியாகச் செய்து வந்தார். 1977ல் ஐ.தே.க சார்பில் போட்டியிட்டு, அமைச்சரானார். தேர்தலின் பின் மிகவும் பயங்கரமான இனக்கலவரங்கள் 1977, 1979, 1981, 1983ஆம் ஆண்டுகளில் நடைபெற்றன. தமிழ் மக்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டதுடன் தெற்கிலிருந்து தமிழர்கள் கலவரம் காரணமாக வெளியேற்றப்பட்டார்கள். சிறில் மத்தியூவின் வலைப்பின்னல் அமைப்பே 1983ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தில் முன்னணிப் படையாக செயற்பட்டது என்று குற்றம் சாட்டப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டின் காரணமாக ஐ.தே.க தலைமையால் அவரது மந்திரிப் பதவி பறிக்கப்பட்டு அவர் சாதாரண மட்டத்திற்கு தள்ளப்பட்டார். அவர் தான் ஒரு பிரதான அரசியல் கட்சியை அந்த அளவுக்கு தள்ளக்கூடிய ஒரு வெற்றிகரமான கடைசி அரசியல்வாதியாக இருந்தார்.

80களில் தீவிரவாத தமிழ் தேசியவாதம் தமிழ் அரசியல் மீது தனது மேலாட்சியை நிறுவிக்கொண்டது. ஆயுதமேந்திய போராட்ட மூலம் தமிழீழ அரசை உருவாக்குவது இந்த தமிழ் தேசியவாதத்தின் நோக்கமாக அமைந்தது.

சிங்கள தேசியவாதத்தின் அண்மைக்கால வளர்ச்சிகள் ஈழப் போராட்டத்திற்கு சமாந்திரமாகவும் அதற்குப் பதிலடியாகவும் அமைவதான பண்புகளை வெளிப்படுத்துகின்றன. 80களில் தமிழ் தேசியவாதத்தின் அரசியல் தத்துவார்த்த நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்காக சிங்கள தேசியவாத இயக்கம் தனது தத்துவார்த்த ஆயுதங்களை மிகவும் செறிவான முறையில் தயார்படுத்திக் கொண்டது.

### சிங்கள தேசியவாதத்தின் மீளொழுங்கு

குணதாச அமரசேகர "அநகாரிக தர்மபால ஒரு மாக்ஸிஸ்டா?" என்று கேள்வி எழுப்பி எழுதிய கட்டுரையினூடாக புதிய சிங்கள தேசிய வாதத்துக்கான தத்துவார்த்தத்துறைச் செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தார். அதேவேளை நளின் டி சில்வா சிங்கள தேசியவாதத்தின் தத்துவார்த்த அடிப்படையை மீள ஒழுங்கமைப்புச் செய்தார். குணதாச அமரசேகர அப்போது சமசமாஜக் கட்சியின் மத்திய குழுவில் இருந்தார். நளின் டி சில்வா இன்னொரு தீவிர மாக்ஸியக் கட்சியின் அரசியல்பீட உறுப்பினராவார். முன்னைய தலைமுறையினரைப் போல அல்லாது இவ்விரண்டு சிங்களத் தேசியவாத தத்துவார்த்தத் தலைவர்களும், சிங்களத் தேசிய இயக்கத்தை தடம் புரளச் செய்தார்கள் என்று சொல்லலாம். அவர்கள் மாக்ஸிய அரசியலை விமர்சனம் செய்ததுடன், ஒரு சிங்கள பௌத்த தத்துவார்த்த அடிப்படையை உருவாக்கவும் தொடங்கினார்கள். அவர்களது பிரச்சாரம் பல்வேறு புத்திஜீவிகளையும் சிங்களத் தேசியவாத அலைக்குள் இழுத்ததுடன் அதற்கான வேகமான ஒரு பிரச்சாரம் என்பது உறுதி செய்யப்படக் காரணமாகவும் அமைந்தது.

**- சுனந்த தேசப்பிரிய**

### இரண்டாந்தரப்பிரஜைக் கோட்பாடு

இந்தப் புதிய போக்குகள் இரு பிரதான வடிவங்களில் வருகின்றன. முதலாவது, இலங்கையில் உள்ள சிங்களவர் என்பது பௌத்த சிங்களவரே என்ற முன்னைய கருத்தை வலுப்படுத்துவது. அவர்கள் தான் இந்த நாட்டின் உண்மையான புதல்வர்களும், புதல்வியரும். இலங்கையில் வசிக்க அனுமதிக்கப்படுகின்ற ஏனையோர் எல்லோரும் இரண்டாந்தரப் பிரஜைகளே.

இந்தக் கருத்துப் போக்கில், இந்த நிலைமை ஏற்றுக் கொள்ளாத, சிங்கள பௌத்தத்தின் மேலாட்சியை விரும்பாத எந்த ஒரு நபரோ, மத குருவோ, இனக்குழுவோ, எவராயினும் அவர் ஒரு இனவாதியாகவும் - துரோகியாகவும் கொள்ளப்படுவார். இதன் மூலம் சம அந்தஸ்தைக் கோரும் தமிழர் ஒரு இனவாதியாக அல்லது சிங்கள எதிர்ப்பாளராகவே இருப்பார் என்ற கருத்தை அறிமுகப்படுத்தினர். அவர்களைப் பொறுத்தளவில் சம உரிமை கோருவது என்பது இலங்கைத் தமிழ் இனவாதமாகும்.



### தமிழர்களுக்கு நாடு சொந்தமில்லை

இரண்டாவது, இந்த நவீன தத்துவவாதிகள், தமிழ் மக்களைப் பாதிக்கிற எந்தக் குறிப்பான பிரச்சினையும் இந்த நாட்டில் இல்லை என்றார்கள். அதாவது தமிழர்கட்கு எந்த உண்மையான துன்பங்களும் இல்லை. இவை தமிழ் இனவாதிகளால் தமிழர்களின் மனங்களில் கட்டியெழுப்பப்பட்ட துன்பங்களே. அவர்களைப் பொறுத்தவரை இந்த நாட்டில் ஒரு இனப்பிரச்சினை கிடையாது. அத்துடன் தமிழர்களுக்கென ஒரு பாரம்பரிய பூமி இந்த நாட்டில் கிடையாது. ஆரிய குணசேகர என்ற இன்னொரு தத்துவார்த்தியின் வார்த்தைகளில் சொல்வதானால்' தமிழர்கள் இந்த நாட்டிற்கு மூன்று காரணங்களுக்காகக் கொண்டு வரப்பட்டார்கள். தோட்டங்களில் வேலை செய்ய, வீதிகளைச் சுத்தம் செய்ய, மனிதக் கழிவுகளை சுத்தம் செய்ய என்பவையே அவையாகும்.' காலனியவாதிகளால் அன்று கொண்டு வரப்பட்ட கூலிகளின் வழித்தோன்றல்களே இன்றுள்ள தமிழர்களாவர். அவர்களுக்கு எந்தத் தேசிய அபிலாஷைகளும் இருக்க முடியாது!

> "சிறுவர்கள் மத்தியில் தேசபக்தியை வளர்ப்பதற்காக, மரங்களுக்கு நீளக்காட்சை அணிவித்து, அதனை அடிக்கச் செய்யும்படி கூறியது அவரது அறிவுறுத்தல்களுள் ஒன்றாகும்...!"

### வலியுறுத்தப்பட்ட ஒற்றையாட்சி

1980களின் முழுக்காலமும் சிங்களத் தேசியவாத சித்தாந்திகள் ஓய்வொழிச்சல் இல்லாமல் இந்தக் கருத்து நிலையில் நின்று தொடர்ச்சியான பிரச்சாரத்தையும் கல்வியூட்டும் நடவடிக்கைகளையும் செய்து வந்தனர். இது மிகவும், பரந்ததாகவும் தொடர்ச்சியான ஒன்றாகவும் இருந்து வந்தது. இந்தக் கொள்கைகளை தமது ஆசிரியபீடக் கோட்பாடாகக் கொண்டு ஒரு முக்கியமான பத்திரிகை நிறுவனம் செயற்பட்டது. சிங்களவர்களை உரிமையாளர்களாகக் கொண்ட பிற பத்திரிகைகள் இந்த விடயங்களுக்கு வேண்டியளவு இடத்தைத் தம் பத்திரிகைகளில் வழங்கின. வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் இந்தத் தொடர்ச்சியான ஆதரவின் காரணமாக சிங்களத் தேசியவாதம் மிகவும் சிறப்பாக இக்காலம் முழுவதும் வளர்ந்து வந்தது. மறுபுறத்தில் இக்கருத்துக்களை மறுத்துரைக்கும் எழுத்துக்களுக்குப் பிரதான பத்திரிகைகளில் இணக்கபூர்வ ஆதரவோ அனுசரிப்போ கிடைக்கவில்லை. இதேவேளை அரசுக்கும், தமிழ் ஆயுதமேந்திய இயக்கத்திற்கும், இடையில் விருத்தியடைந்து வந்த யுத்தமானது அரசாங்கத்தையும் சிங்கள தேசியவாதத்தையும் ஒரே மேடையில் நின்று பேச வைத்தது. சிங்களத் தேசியவாதிகளின் கருத்துக்கள் அரசின் யுத்தப் பிரச்சாரத்தின் பகுதியாக மாறத் தொடங்கின. இந்தச் சிங்களத் தேசியவாதத்தை ஆதரித்த அமுக்கக் குழுக்கள் இரண்டு பிரதான அரசியற் கட்சிகள் மத்தியிலும் உருவாகத் தொடங்கின. இக்காலகட்டத்தின் பல்வேறு சந்தர்ப்பங்களில், இவ்விரு கட்சிகளும் சிங்களத் தேசியவாத இயக்கத்திடம் சுரண்டுவதன் மூலமாகவே தம்மை நிலைநிறுத்திக் கொள்ளும் நிலையினைக் கொண்டிருந்தன. சிங்களத் தேசியவாத இயக்கம் இக்காலம் முழுவதும் ஒற்றை ஆட்சி முறையைப் பாதுகாத்து நின்றன. கடந்த 2500 வருடங்களாக இலங்கை ஒற்றை ஆட்சி முறையின் கீழ்தான் இருந்து வந்தது என்று அவர்கள் சாதித்தார்கள். சிங்களத் தேசியவாத சக்திகள் பிரிக்க முடியாத நாட்டிற்கான ஒரு கோட்பாடாக ஒற்றையாட்சியைக் கருதியது மட்டுமல்லாமல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒற்றை சட்டசபையை மட்டுமே கொண்டிருக்க வேண்டுமென ஏகமனதாகக் கருதினார்கள். தமிழர்களின், தேசிய அபிலாஷைகள் என்று எதுவுமே இல்லை என்பதால் எத்தகைய ஒரு சமஷ்டி ஆட்சி முறைக்கும் இணங்கிவர முடியாது என்று இத்தேசியவாதிகள் உறுதியாகக் கருதினர். ஒரு சமஷ்டி அரசாங்கம், அவர்களது அபிப்பிராயத்தில் நாட்டை சிறு சிறு துண்டுகளாகப் பிரித்துவிடக் கூடிய ஒன்றாகும். இந்த நிலைப்பாட்டிலிருந்து இயல்பாகவே சிங்கள பௌத்தம்தான் ஒற்றையாட்சியை கட்டுப்படுத்துவதாக அமைய வேண்டும் என்ற முடிவுக்கு அவர்கள் வந்தார்கள். பௌத்தம் அரச மதமாகவும், சிங்களம் உத்தியோகபூர்வ மொழியாகவும் அமைய வேண்டும்.

இந்த விவாதம் 19ம் நூற்றாண்டில் சிங்கள தேசியவாதம் ஆரம்பமாகிய கட்டங்களில் கூட இருந்ததாயினும், இப்போது அது மிகவும் தீவிரமாக தத்துவார்த்த அரசியல் விளக்கங்களுடன் ஜனரஞ்சகப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், 1980 முதல் 1990 வரையான பத்தாண்டுகாலப் பகுதி முழுவதும், சிங்களத் தேசியவாதத்திற்கு ஒரு அழுத்தத்தைக் கொடுப்பதற்கு மேலாக ஒரு பார்வைத் தெளிவோ அல்லது மூலோபாயமோ இருக்கவில்லை. அவர்களது அழுத்த அரசியல் இலங்கையை தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கக் கூடிய விதத்தில் மீளக்கட்டமைக்கும் எல்லா முயற்சிகளையும், வெற்றிகரமாக முறியடித்தன. அவர்கள் உண்மையில், சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளுக்கு உத்தரவிடக்கூடிய சக்தியைக் கொண்டவர்களாக இருந்தனர்.

### உபாலி குறூப் பத்திரிகைகளின் பணி

1980களில் கலாநிதி நளின் டி சில்வா, குணதாச அமரசேகர ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சிங்களத் தேசியவாதத்தின் தத்துவார்த்தப் பிரச்சாரத்திற்கு பல புத்திஜீவிகளும் பங்களிப்புச் செய்துள்ளனர். உபாலி குறூப் பத்திரிகைகள், சிங்கள தேசியவாதத்தின் உத்தியோகபூர்வமற்ற ஊதுகுழல்களாகச் செயற்பட்டன. இவை இந்த தத்துவார்த்த தளத்தைக் கட்டியெழுப்புவதற்கான தடங்கல் அற்ற வாய்ப்பினை வழங்கின. இந்தப் புதிய தத்துவார்த்தப் பிரச்சாரம் தமிழ்த் தேசியவாத இயக்கத்தையும் அதன் குறிக்கோள்களையும், மட்டும் குறிவைத்ததுடன் நிற்காமல் இடதுசாரி இயக்கம் அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் மேற்கத்திய இராஜதந்திர சமூகத்தையும் கூடக் குறிவைத்தது.

அது பெண்கள் அமைப்புக்களைத் தாக்குவதிலும் அவ்வளவு அக்கறை காட்டவில்லை. இந்தப் பிரச்சாரத்திற்கு கல்விகற்ற மத்தியதர வர்க்கம் தான் குறியாக இருந்தது. இது தொழிலாள விவசாயிகள் மத்தியிலும் இளைஞர்கள் மாணவர்கள் மத்தியிலும் எந்தக் குறிப்பிடத்தக்க செல்வாக்கையும் செலுத்தவில்லை. ஆனால், இக்கருத்தை ஏற்றுக் கொண்ட பல்வேறு பிற குழுக்கள் உதாரணமாக புத்த பிக்குகள், தொடர்புசாதனவியலாளர்கள் போன்றோர் மூலமாக இந்த விடயம் பலத்த கருத்தாடல்களுக்கு ஆட்பட்டது. மாதுலுவாவே சோபித மற்றும், பெங்கமுவே நாலக்க போன்ற பௌத்த பிக்குகள் இந்த தத்துவத்தின் பிரதான பிரச்சாரகர்கள் ஆனார்கள்.



மக்கள் ஐக்கிய முன்னணி என்கிற சிறிய அரசியல்கட்சி சிங்களத் தேசியவாதத்தை தனது அரசியல்வழியின் அடித்தளமாக வரித்துக் கொண்டது. சிங்களத் தேசியவாதத்தை பெண்ணுரிமை எதிர்ப்பு மற்றும் சூழலியல் கண்ணோட்டங்களிலிருந்து நியாயப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் தத்துவத்தின் செல்வாக்கினால், 'ஹெல உருமய" என்ற ஒரு உட்கட்சிக் குழு ஒன்று சுதந்திரக் கட்சிக்குள் உருப்பெற்றது. இத்தகைய எல்லா வளர்ச்சிகளையும் கொண்டிருந்த போதும், அதிகாரத்தைக் கைப்பற்றும் திட்டம் இந்த சிங்கள தேசியவாதக் கட்சிகளிடம் இருக்கவில்லை.

1994ல் இலங்கையின் இனத்துவ அரசியலைப் பொறுத்தவரை ஒரு முக்கியமான ஆண்டாக இருக்கப் போகிறது என்ற எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தும் விதத்தில் அவ்வாண்டின் அரசியல் உருவாக்கங்களும், சக்திகளின் சமநிலையும் அமைந்திருந்தன. 1994 ஓகஸ்டில் சந்திரிகா பண்டாரநாயக்கா அதிகாரப் பரவலாக்கத்தை மையமாக வைத்த ஒரு பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தைக் கொண்டு வருவேன் என்று கூறியபடி பதவிக்கு வந்தார். தமிழ் மக்கள் தமிழர்கள் என்ற காரணத்திற்காக பாரபட்சம் காட்டப் படுகிறார்கள் என்ற காரணத்தை வலியுறுத்திய அவர் யுத்தம் இந்த நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வர ஒருவழி அல்ல என்று அறிவித்திருந்தார். கடந்த 50 ஆண்டுகால சிங்களத் தேசியவாத அரசியலில் இது ஒரு குறிப்பிடத்தக்க திருப்பமாக அமைந்தது. ஆயினும், இலங்கையை மீளக்கட்டமைக்கும் விதத்திலான அவரது அரசியலமைப்பு திருத்தங்களுக்கு ஏற்பட்ட எதிர்ப்புக்களால், அவரால் இக்கருத்தில் உறுதியாக நிற்கமுடியவில்லை. அவருக்கு அரசியலமைப்புத் திருத்தத்துக்கான சர்வதேச ஆதரவு கிடைத்தது. பல அபிப்பிராய வாக்கெடுப்புகள் பல அமைப்புகளால் நடாத்தப்பட்டன. அவை அனைத்தும் யுத்தத்தை நிறுத்தி அரசியல்தீர்வுக்குப் போவதற்கு ஆதரவு தந்தன. ஒரு பரந்த பலமான சமாதான இயக்கம் அரசியல் தீர்வுக்கான பிரச்சாரத்தை மேற்கொண்டது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி 1987ல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட மாகாண சபைகள் சட்டத்தை முன்னின்று எதிர்த்திருந்த போதும், தலைகீழாக மாறி சந்திரிகாவின் தலைமையின்கீழ் அரசியலமைப்பு சீர்திருத்தப் பிரச்சாரத்தை மேற்கொண்டது. ஐ.தே.கவும், அதிகாரப் பகிர்வுக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டது. அதாவது 1994ல் இலங்கையை மாறிமாறி ஆண்ட இரு கட்சிகளும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்காக அதிகாரப் பகிர்வை மேற்கொள்வது என்று கருத்தில் உடன்பட்டிருந்தன.

இந்த இருகட்சிகளும் - 1957ல் ஸ்ரீ.ல.சு.கவும், 1996ல் ஐ.தே.கவும் தமிழ்க்கட்சிகளுடன் அதிகாரத்தைப் பகிர்வது தொடர்பான உடன்பாட்டிற்கு வந்திருந்தன. இவ்விரு சந்தர்ப்பங்களிலும், பௌத்த பிக்குகளால் தலைமை தாங்கப்பட்ட சிங்களத் தேசியவாத சக்திகள் இந்த இரு முயற்சிகளையும் முளையிலேயே கிள்ளி விடுவதில் வெற்றிபெற்றன. திரும்பவும், இரு அரசியல் கட்சிகளும் சிங்கள பௌத்த நாட்டை பாதுகாக்கும் அரசியலை, அவர்கள் எதிர்க்கட்சிகளில் இருந்த சந்தர்ப்பங்களில் - தாம் சொன்னதற்கும் உடன்பட்டதற்கும் மாறாக,- தூக்கிப் பிடித்து செயற்பட்டார்கள். 1987ல் ஐ.தே.க. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினை உருவாக்கிய போது ஸ்ரீ.ல.சு.க. அன்றைய பிரதான எதிர்க்கட்சி - அதை எதிர்த்து பௌத்த பிக்குகளுடன் சேர்ந்து பலத்த பிரச்சாரத்தை மேற்கொண்டது. அன்றைய பிரதமர் ஆர்.பிரேமதாசா, முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி போன்ற அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் கூட

⊃19

நன்றி - நூலகத்திட்டம்



# புனைவு என்பது வாழ்க்கைதான்!

"ஆங்கிலத்தில் எழுதும் இந்திய எழுத்தாளர்களில் சமீபத்தில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியவர் அருந்ததி ராய். 'The god of small things" என்ற நாவல் புக்கர் பரிசு பெற்றதுடன் 3 கோடி ரூபாய்க்கும் விற்பனையாகியிருக்கின்றது.

சல்மான் ருஷ்டியின் 'சாத்தினின் வேதங்கள்' நூலுக்குப் பின் தீவிர இலக்கிய உலகில் பல சர்ச்சைகளைக் கிளப்பியது அருந்ததி ராயின் இந்த நாவல். கேரளத்தைப் பூர்வீகமாகக் கொண்ட அருந்ததி வங்காளத்தில் வளர்ந்தவர். பொக்ரான் அணுகுண்டு சோதனையைக் கடுமையாகக் கண்டித்தார். இதைத் தொடர்ந்து அவர் எழுதிய 'கற்பனைக்கு முடிவு' என்ற கட்டுரை இந்தியா முழுவதும் உள்ள சமூகவியலாளர்களைக் கவர்ந்தது. தற்போது அணுகுண்டுக்கு எதிரான பெண்கள் அமைப்பிலும், நர்மதா அணைத்திட்ட விழிப்புணர்வுப் பணியிலும் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

அய்மனம் கிராமத்து சில மனிதர்களின் நினைவுகளும், வியப்பும் ஏகாந்த பயமும் விதியும், துயரமும் சுமந்து என்றென்றைக்குமாக ஓடிக் கொண்டி-ருக்கின்ற மீனச்சில் ஆற்றின் வாழ்க்கை தான் 'தி கோட் ஒப் ஸ்மோல் திங்க்ஸ்' ('The god of small things'). இந்த அய்மனம் கிராமத்தை உலக இலக்கிய வாசகர்கள் தொண்ணூறுகளின் மகொண்டா (Maconda) வாக ஏற்றுக் கொண்டதன் பின்னால் உள்ள உண்மையை அறிவதே எனது ஆவல். (புக்கர் விருது கிடைப்பதற்கு முன்னேயே கண்ட நேர்காணல் இது.)"

**உங்கள் முதல் நாவல் அற்புதமாக மூன்று கோடி ரூபாய்க்கு விற்பனையாகியிருக்கிறது அதற்குப்பின்னால் உள்ள வியாபார உத்தி என்ன?**

எனக்கு உலகளவிலான மொத்த வெளி-



யீட்டாளர் கிடைத்த பின்பும் அதை நான் யாரிடமும் சொல்லவில்லை. நான்கு மாதங்கள் அந்த ரகசியத்தோடு நடந்தேன். கடைசியில் கேரளாவிற்கு நான் வந்த போது பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ஒருவர் அதைக் கண்டு பிடித்தார். செய்தி வெளியான போது அதைக் கேட்டுப் பத்திரிகை உலகம் பிரமித்துப் போனது. சிலர் சொன்னதுண்டு. இது வேண்டுமென்றே உருவாக்கியுள்ள ஒரு விளம்பர உத்தியென்று. அப்படி ஏமாற்ற அவ்வளவு முட்டாள்களா பத்திரிகைக் காரர்கள்?"

**கதைக்கு வணிகம் முற்றிலும் உதவவில்லையென்றா சொல்கின்றீர்கள்?**

"இதைப்படி, இதைப்படி என்று வணிகம் இந்த முறை சொல்லலாம். அடுத்த வருடம் இவள் எழுதியதைப் படிக்காதே என்றும் சொல்லும். எழுத்தாளர்களின் மிகப் பெரிய துயரம் தான் இது. இப்போது பத்திரிகைகள் படிக்கச் சொல்கின்ற புத்தகம் படிக்கப்படும். அவர்கள் ஒன்றும் சொல்லவில்லையென்றால் புத்தகம் காணாமல் போகும்."

**இப்போது புக்கர் விருது பெறுவது வரையிலும் வந்த இந்நாவல் மனதில் முதலில் தோன்றியது எப்பொழுது எப்படி? (First Image)**

"ஐந்து வருடங்களுக்கு முன் எனது நினைவுகளில் இது தோன்றத் துவங்கியது. நாங்கள் குழந்தைகள். மாமாவின் ப்ளைமவுத் காரில் போகும் போது ஒரு குறுக்கு ரயில் பாதையருகே வெகுநேரம் வண்டி மாட்டிக் கொண்டது. கம்யூனிஸ்ட்டுகளின் ஒரு ஊர்-வலம் அந்த வழியில் வந்தது தான் காரணம். ஊர்வலம் கடந்து செல்லும் வரை நாங்கள் அங்கேயே கிடந்தோம். அதுவே எனது முதல் இமேஜ் ஒரு கம்யூட்டருக்கு முன்னால் நான் அமர்ந்து டைப் செய்ய ஆரம்பித்தேன். நாவல் தான் உருவாகியது என்பது கூட எனக்குத் தெரியாமல் இருந்தது. இமேஜுகள் ஊர்வ-லமாய் வந்து கொண்டிருந்தன."

**இந்தக் கதாபாத்திரங்களுக்கும் உண்மைப் பாத்திரங்களுக்கும் உள்ள தொடர்பு என்ன? உங்கள் சொந்த வாழ்க்கையை இதோடு சேர்த்து வைத்துப் படிக்கலாமா?**

"இக் கேள்வி கொஞ்சம் பிரச்சினைக்குரி-யது. ஒரு விதத்தில் வாசகர்களுக்கு ஒன்றுக்-கொன்று தொடர்புள்ளதாய்த் தோன்றலாம். ஆனால், ஒரு மரணத்திற்குப் பிறகுள்ள உலகம் தான் இந்தப் புதினம். அனைத்துப் புதினங்-களும் ஒரு விதத்தில் வாழ்க்கை வரலாறு என்ற உணர்வோடு படிக்கப்படுகிறது. அம்மு என்ற எனது கதாபாத்திரத்தில் நிறைந்து நிற்பது நான் தான். அம்மாவின் இடத்தில் நானாக இருந்தால் எப்படி படிக்கப்படும் என்பது தான். எனது எல்லா பயத்தையும் சுமக்கின்ற குழப்பம் நிறைந்த கதாபாத்திரம் தான் அது"

**அப்படியென்றால் இந்தக் கதாபாத்திரங்களில் புனைவா, வாழ்க்கையா எது கூடுதலாக உள்ளது?**

"புனைவு என்பது வாழ்க்கை தான். அதைத் தரம் பிரிக்க முடியாது. அது நினைவு-களுடையதும், கற்பனைகளுடையதுமான கவ-லை தான். எனது கதையை வாசித்தால் அதைத் தனித்தனியாய்ப் பிரித்துப் பார்க்க முடியாது. என்னால் கூட இப்போது அது முடியாது. அம்மாவும் மற்றவர்களும் சில நேரம் கேட்பார்கள். 'ராஹேலினு-டையதும், எஸ்தாவினு-டையதுமான சிறுபருவ நினைவுகளை எப்படிச் சரியாக நினைவு வைத்-திருந்தாய்?' என்று, நான் சொல்வேன். அவை நினை-வில்லை. இவையெல்லாம் நானாகப் படைத்துக் கொண்டவை தான்."

**குடும்ப விடயங்களைக் கதையாக்கிய உங்களுக்குக் குடும்பத்தினரின் அணுகுமுறை எப்படி இருந்தது?**

"எனது தாயும் (மேரி ராய்) சகோதரனும் (லலித்) தாய்மாமனும் எனது அறி-வுலக நண்பர்கள் தான். மாமா சொன்னார். 'எனக்கு இப் புதினம் பிடித்தது. கதையின் சூழலிலிருந்து என்னால் தப்ப முடியவில்லை. என்னை அது பிடித்த-மர்த்தி விட்டது' என்றார். அதிகமான விடய-ங்கள் அறியாதவர்களுக்கு இக்கதை வாழ்க்கை வரலாறு என்றே தோன்றும். நன்றாக அறிந்-தவர்களுக்கு இது வாழ்க்கை வரலாறு அல்ல என்று தோன்றும். ஆனால், உணர்ச்சியின் தளம் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது தான். மிகவும் ஆழத்தில் இருந்து நான் இதை எடுத்திருக்கிறேன். கதையில் உள்ள நிகழ்வுகள் வாழ்க்கை வரலாற்றை அடிப்-படையாகக் கொண்டதல்ல".

**முழுக் கற்பனைகளைக் கொண்ட இரண்டாம் புதினம் எழுதுவது பற்றி?**

"எனக்கு அப்படி எந்தத் திட்டமும் இல்லை. எண்ணிக்கையின் விளையாட்டில் எனக்கு நம்பிக்கையில்லை. எனது திறமையைப் பூஜ்ஜியமாகக் கணக்கிட்டால் போதும். கேர-ளத்தின் சரித்திரத்தை வளைத்து உடைத்து உலகிற்கு விற்றதாக என்னைக் குற்றப்படுத்திக் கொள்ளுங்கள். ஆனால், இந்தப் புனிதத்தைப் படைப்பதில் எனது எல்லாத் திறன்களையும் வெளியிட்டிருக்கிறேன் என்பதே உண்மை. இப்புதினம் எழுத நாலரை ஆண்டுகள் தான் செலவிடப்பட்டது என்றாலும் எனது வாழ்க்கை முழுவதுமுள்ள உழைப்புத் தான் இது. அடுத்து மூன்று புதினங்களுக்கான பதிப்புரிமைக்கு வேண்டி ஒப்பந்தங்கள் போட வெளியீட்டா-ளர்கள் வந்தார்கள். ஆனால், அதற்கு நான் ஒப்புக் கொள்ளவில்லை. எழுதுவதற்காக என்னால் எழுத முடியாது. வணிக நோக்கில் நான் புத்தகம் எழுதவில்லை"

**திரைப்படங்களுக்குத் திரைக்கதை எழுதிய அனுபவம், நாவல் எழுதுவதற்கு உதவியாக இருந்ததா? (Electric Moon, Ani gives it those one's)**

"மிக மிகப் பயன்பட்டது. ஆனால், சினிமாவில் ஏராளமானவர்களோடு சேர்ந்து வேலை பார்க்க வேண்டும். ஒத்துப் போக வேண்டிய உலகம் அது. என்னை அது திருப்திப்படுத்தாது. என்னை மட்டுமல்ல யதார்த்த எழுத்தாளர் யாரையும் அந்த வேலை திருப்திப்படுத்தாது. ஆனாலும் வசனம் எழுதக் கற்றிருக்கிறேன். அவசியத்திற்கு மட்டும் ஓசை நயத்தோடு சொற்கள் எழுதுவதற்கு, வாக்கி-யங்கள் உருவாகுவதற்கு, அதன் ஓசை நயத்தைப் பாதுகாப்பதற்கு".

**18 வயதில் குடும்பத்தையும், ஊரையும் விட்டு டில்லிக்கு நீங்கள் சென்றது தனிநபர் ஒருவரின் புரட்சிகரமான செயல். பயங்களை உதறிவிட்டு உலகைப் பார்ப்பதற்கான ஒரு உலகப்பார்வை உருவாக, தன்னுடையதான ஒரு சுதந்திர அணுகுமுறை உருவாக, டில்லி வாழ்வு பயன்பட்டதா?**

18வது வயதில் எனக்கு அதிகாரிகள் இல்லை, காப்பாளர்கள் இல்லை, தாய் தந்தை இல்லை, காப்பித் தோட்டங்கள் இல்லை - இப்படியொரு நிலையை இன்னொரு இந்தியப் பெண் சுயமாக ஏற்றுக் கொண்டதாக எனக்குத் தெரியவில்லை. இந்த நிலையில் நீங்கள் உலகத்தின் அனுபவங்களை மற்றொருவரின் வடிகட்டல் இல்லாமல் அனுபவிக்கிறீர்கள். உலகம் எந்த வேளையிலும் மோசமாக நடந்து கொள்ளவில்லை. சகிக்க முடியாததென்று எனக்கு எதுவும் நேரவில்லை. எனினும், அவற்றை அறிந்து கொண்டுள்ளேன். சுதந்திர-மான வாழ்க்கை அனுபவம் அது. மும்பை ரயில் நிலையத்தில் நான் பயணச் சீட்டுக் கிடைக்காமல் சிரமப்பட்டு நின்ற பொழுது பல ஆட்கள் முன் வந்து நாள் முழுவதும் எனக்கு உதவி செய்து பயணச் சீட்டுக்கு ஏற்பாடு செய்தார்கள். எவ்வளவு சுதந்திரமான அனுப-வம் அது. பாதுகாப்புக் கவசங்களைச் சுமக்காத எனது வாழ்வையும், அனுபவங்களையும் நான் கைவசப் படுத்தியுள்ளேன். மற்றவர்கள் வாயிலாக நான் உலகை அனுபவிப்பதில்லை."

**நீங்கள் ஒரு கலகக்காரரா?**

"உலகத்தோடு ஒத்துப்போக எனக்கு விருப்பமில்லை. எனது வாழ்க்கை முறையை வைத்து என்னைக் கலகக்காரி என்று அழைப்-பதென்றால் அப்படியே வைத்துக் கொள்ளுங்கள்"

**ஒரு சாதாரண சிரியன் கிறிஸ்த்துவப் பெண்ணிலிருந்து மாறுபட்டுப் போனீர்கள். நாவலிலும் மதநெறிக் கோட்பாடுகளுக்கு மீறிய ஒரு பெண்ணுக்கு இடையிலான போராட்டம் காணப்படுகிறது. யதார்த்தத்தில் ஒரு சிரியன் கிறிஸ்துவப் பெண் எப்படியிருக்க வேண்டும்?**

"அவள் எப்படி இருக்க வேண்டும் என்று சொல்ல எனக்குத் தெரியாது. சமூகம் அவளை 'பாவம் பெண்' என்று ஒதுக்கி வைத்தது. பெண்ணிற்குத் திருமணத்திற்குப் பிறகு தான் வாழ்க்கை துவங்குகிறது என்பது தான் அவளது நம்பிக்கை. இது மிகவும் வருந்தத்-தக்கது. எதுவாகயிருந்தாலும் அத்தகைய ஒரு



முன்மாதிரி ஆவதற்கு நான் தயாரில்லை. உலகத்தின் அனைத்துப் பெண்களையும் பற்றி தான் நான் புதினத்தில் விவாதிக்கிறேன்"

**மீண்டும் திரும்பி வந்து குடும்பத்தில் இணைந்தீர்களா?**

"எது நிகழ்ந்தாலும் எனது குடும்பத்தினர் சேர்ந்தே வருவார்கள். அம்மா மட்டுமல்ல எனது சகோதரனும்".

**மேரி ராயைப் பற்றிச் சொல்கையில் கண் கலங்குகிறதே?**

"அது நான் உணர்ச்சி வயப்பட்டதினால் அல்ல: நாங்கள் அவ்வளவு நெருக்கம் அதனால் தான்".

**இந்திய எழுத்தாளர்கள் பட்டினியையும், வறுமையையும் உள்ளடக்கிய பரிதாப விடயங்களை மட்டும் தான் கையாள வேண்டியுள்ளது' என்று ஒருமுறை கூறியுள்ளீர்கள். எந்த அர்த்தத்தில் அப்படிச் சொன்னீர்கள்?**

"வெளிநாட்டார் ஓர் ஓவியம் வரைந்தால் உலகச் சந்தை அதை மகத்தானது என்று சொல்லும். ஆனால், இந்தியனுடையது என்-றால் அதற்கு மதிப்பில்லை. மூன்றாம் உலகத்-தில் உள்ள எழுத்தாளன் தனது பார்வையில் உலகத்தை வெளிப்படுத்த வேண்டும்.

'எலக்டரிக் மூன்' திரைப்படத்தில் நான் இதைத் தான் சொல்கிறேன். கிழக்கின் இலக்கி-யத்தைக் கையாளுகின்ற சந்தைகளுக்குத் தங்களுக்கே உரிய சில கலைக்கோட்பாடுகள் உண்டு. இந்த நிலையில் நமது வாழ்வின் மாறுபட்ட விடயங்களை விற்பனை செய்வது என்பதே விடயம். ஆனாலும் எனது புத்தகத்-தைப் பற்றி எனக்குப் பிடித்த ஒரு ஆங்கில வெளியீட்டாளர் சொன்னார். 'பேபி கொச்சம்-மாவைப் போன்ற ஒரு அத்தை எனக்குமுண்டு'. அதாவது ஆழ்ந்து சென்றால் நாம் காண்பது மானிடத் தளம் என்ற உண்மைநிலை தான். எந்தக் கதாபாத்திரத்தையும் மனிதராகக் காண வேண்டும்.

**ருஷ்டிக்குப் பிறகுள்ள இந்திய ஆங்கில நாவலாசிரியர்கள் அவரையும், சுதந்திரத்திற்குப் பிறகுள்ள அரசியல் விடயங்களையும் பின்பற்றிக்கொண்டு இருந்தார்கள். நீங்கள் அறிந்தே அதிலிருந்து ஒதுக்கினீர்களா?**

"ருஷ்டி எனக்கு முந்தைய தலைமுறை-யைச் சார்ந்தவர். மொழியின் விடயத்தில் அவர் பேராற்றலை வெளியிட்டவர். மொழியைப் பயன்படுத்தி ஏமாற்று வேலைகளிலும், கரணமடித்தல் போன்ற வித்தைகளிலும் எனக்கு விருப்பமில்லை. ஆனாலும், இந்தியாவிலும் ஏதோ ஒன்று நடக்கிறது என்பதை உலகத்திற்கு எடுத்துக் காட்டியவர் ருஷ்டி தான். எனக்கு மாஜிக்கல் ரியலிசம் பிடிக்கவில்லை. எனது மொழி பசுமையும், வளமையும் நிறைந்தது என்று ஒரு வெளியீட்டாளர் சொன்ன போது நான் சொன்னேன். 'பசுமை நிறைந்தவை எனது மொழியல்ல: கதையின் சூழல் தான்' என்றேன். அது சரியானதும், ஒழுங்கானதும் கூட.

**கேரளத்தின் கதையை உலகச் சந்தைக்குக் கொண்டு சென்றதற்குப் பெருமைப்படுகிறீர்களா?**

"ஒரு புதினத்தை விரும்புவது அப்படி-யல்ல. முதலில் எனக்குக் கிடைத்தது ஓர் இந்திய வெளியீட்டாளர் பங்கஜ் மிஸ்ரா. வெளியிட்டால் போதும் முற்பணம் வேண்டாம் என்று நான் சொன்னேன். ஆனால் அவர் அதை ஏற்கவில்லை. இது உலகெங்கும் சென்று சேர வேண்டும் என்று எனது நண்பர்கள் அடம் பிடித்தனர். கேரளத்தின் கலாசாரத்தை உலகச் சந்தையில் விற்றேன் என்று நீங்கள் சொல்லிக் கொள்ளலாம். எதை எழுதினாலும் கலாசாரத்-தின் ஏதாவதொரு விதத்தில் தரம்பிரித்துப்

நன்றி - நூலகத்திட்டம்



பார்ப்பார்கள். ஆங்கிலேயர் இதையெல்லாம் கவனிக்கவில்லை. அவர்களுக்குப் புத்தகம் பிடித்தது. எல்லோரும் ஆவலோடு படிக்கக்கூடியது என்பதால் வெளியிட்டார்கள். நானே அதை அமெரிக்காவிலோ, இங்கிலாந்திலோ வெளியிட்டிருக்கலாம். ஆனால், நான் கோட்டயத்திற்கு வந்தேன். எனக்குப் பிடித்த புற அட்டையின் வடிவமைப்பிற்கான உரிமை வேண்டும் என்று கேட்டிருந்தேன். 'ராண்டம் ஹவுஸ்' ஏற்றுக் கொண்டார்கள். நமக்கு அப்படி தைரியம் வேண்டும். ஐம்பதாண்டு சுதந்திர இந்தியாவின் மீதும் அதிலுள்ள தொன்மையான கலாசாரத்தின் மீதும் ஆழந்த ஆத்ம நம்பிக்கை வேண்டும்"

**கதையில் வெளுத்தையைக் கருத்துள்ள கதாபாத்திரமாகக் காண்பித்த போதும், தலித் கிறிஸ்தவனின் தனிநபர் சிக்கல்களை உதறி விட்டீர்கள். சரித்திரத்தின் அனைத்து முகங்களையும் பார்க்க வேண்டாமா? அவருக்கு ஒரு கிறிஸ்துவப் பேர் கூட இல்லையே?**

"ஒரு தலித் கிறிஸ்துவனான போது அவனது நிலை வறுக்கின்ற சட்டியிலிருந்து கொதிக்கின்ற எண்ணெய்க்குள் வீழ்ந்த நிலை என்று நான் புதினத்தில் கூறியுள்ளேன். ஆனாலும், வெளுத்தைக்குத் துணை புரிவது ஒரு கிறிஸ்துவக் குடும்பம் தான். மார்க்சிஸ்டுகளல்ல. இந்தியாவில் அனைவரும் எந்த ஒரு சிறுபான்மை சமூகத்தையும் சாராமல் இருப்பதில்லை. அப்போதெல்லாம் பெரும்பான்மையோடு சிறுபான்மையினர் போராடத் தான் வேண்டியிருக்கும். இதன் முடிவில் மனித நேயம் உண்டு. இதைத் தான் எனது நாவலில் சொல்கிறேன்."

**இப்புதினமெழுத சரித்திரத்தில் எந்த அளவு கை நுழைத்துக் கொண்டீர்கள்?**

"சரித்திரம் ஒருவரது பார்வை தான். எனது நூலை நீங்கள் உங்கள் பார்வையோடு படிக்கலாம். நான் குற்றம் கூற மாட்டேன். உங்களுக்கென்று ஒரு பார்வையுண்டல்லவா?"

**இந்தப் புதினத்தைச் சினிமா ஆக்குவீர்களா?**

"ஹாலிவூட்டிலிருந்து ஒரு இயக்குனர் மூன்றரை கோடி டாலர் தருவதாகச் சொன்னார். ஆனால், இதெப்படி சினிமாவாகும், எனக்கு நம்பிக்கையில்லை. மொழி பெயர்ப்பது போன்று கஷ்டமானது அது. மாஜிக்கல் ரியலிசத்தை மொழியாக்கம் செய்ய முடியாது என்று சிலர் சொல்வார்கள். ஆனால், அதை விடச் சிரமமானது வார்த்தைகளுக்கு இடையேயுள்ள மௌனத்தை மொழியாக்கம் செய்வது அல்லது வேறொரு மொழியில் நான் மீண்டும் அதை எழுத வேண்டும்"

**பிரதீப் கிருஷன் சினிமாவாக்க முன் வந்தால்?**

"அவர் வரமாட்டார்"

**இவ்வளவு தொகையால் உங்கள் இலக்கியத்திலும், வாழ்க்கையிலும் ஏதாவது மாற்றம் நிகழ்ந்ததா?**

"நானோ எனது நண்பர்களோ பணத்தை மதிப்பதில்லை. பணம் கிடைப்பதற்கு முன்பும் நான் சந்தோஷமாகத் தான் இருந்தேன். உண்மையில் ஒப்பந்தத்தில் கையெழுத்திடக் கூட எனக்குத் தைரியமில்லை. டாலரிலும் மார்க்கிலும், லயரிலுமெல்லாம் கணக்குப் போட எனக்குத் தெரியாது. முதலில் எனக்கு இந்தப் பணம் சிம்ம சொப்பனமாகயிருந்தது. இப்போது மனத்தின் இறுக்கம் கொஞ்சம் குறைந்துள்ளது".

**எழுத்து அனுபவம் எப்படியிருந்தது?**

திருமணமாகாத ஒரு பெண்ணைப் போல அதிகாலையிலேயே எழுந்து காலந் தவறாமையைக் கடைபிடித்து எழுதினேன். நான் அடக்கமான எழுத்தாளர் தான்."

**அடக்கமான பெண்ணா?**

"ஆம். ஆனால், எனது அடக்க விதிமுறைகளை நானே உருவாக்குகிறேன். மற்றொருவருடைய விதிமுறைகள் என்னுடையதல்ல."

**எழுத்தாளராவது சுகமான காரியமா?**

"மிகவும் துணிச்சலான செயல். நான் நாலரை ஆண்டுகள் வேறெந்த வேலையும் செய்யாமல் எழுதி முடித்ததற்கு ஏதாவதொரு வெளியீட்டாளர்கள் ஐந்தாயிரம் ரூபாய் கொடுத்து 'அருமை' என்று சொல்லியிருந்தால் எனது நிலை என்னவாயிருக்கும்?"

*சந்திப்பு பி. முரளி*
*நன்றி அருந்ததி ராய் பன்முகப் பார்வைகள்*
*(கட்டுரைத் தொகுப்பு)*
*நிகழ் வெளியீடு*
*123; காளீஸ்வரி நகர்*
*கோயமுத்தூர் 641 009*

நன்றி : ஆறாம்திணை

## உலகின் ஜனநாயகத் தொட்டிலில்

# சிறைக் கைதிகள்

அமெரிக்க (U.S.A.) நீதித்துறை திணைக்கள அதிகாரியின் கூற்றுப்படி அடுத்த வருடம் அமெரிக்கச் சிறைகளில் 2 மில்லியன் கைதிகள் இருப்பார்கள் நீதித்துறையின் புள்ளி விபரம் (Bureau of Justice - Statistics) ஒன்றின்படி சென்ற வருடத்தின் நடுப்பகுதியில் அமெரிக்க சிறைகளில் 18லட்சத்து 60ஆயிரத்து 520 கைதிகள் இருந்துள்ளார்கள். அடுத்த வருடம் இத்தொகை இன்னும் 60,ஆயிரத்தால் கூடும் போது அமெரிக்கச் சிறைகளில் (2,000,000) இருபது இலட்சத்திற்கு அதிகமான மனிதர்கள் சிறைகளில் வாடுவார்கள். இதேவேளை சிறைகளின் எண்ணிக்கையும் 1998இல் 7.9வீதத்திலிருந்து தற்போது 9.6வீதமாக உயர்ந்துள்ளது.

கடந்த 25 வருடங்களாக ஜனநாயகத்தின் தொட்டில் எனவும், மனித உரிமைகளின் பாதுகாவலர்கள் தாங்களே என நாடகமாடும் அமெரிக்க முதலாளிகள் நாட்டில் சிறைக் கைதிகளின் எண்ணிக்கை தொடர்ச்சியாக உயர்ந்து கொண்டே செல்கின்றது. இன்னொரு புள்ளி விபரத்தின்படி அமெரிக்க சனத்தொகையில் ஒவ்வொரு 147பேர் உள்ள இடத்தில் ஒருவர் சிறைச்சாலையில் அல்லது வயது வந்தோர் சிறையில் வதிகின்றார். சென்ற வருடக் கணிப்பீட்டின்படி 1.1 மில்லியனிற்கும் (11 இலட்சம்) மேலானவர்கள் அரசின் சிறைகளிலும், 6 இலட்சத்து ஆறாயிரம் ஆண்களும், பெண்களும் உள்ளூர் சிறைகளிலும் மேலும் 118,000 பேர் பெடரல் சிறைகளிலும் பூட்டி வைக்கப்பட்டுள்ளார்கள்.

ஆனால், 1985இல் இத்தொகை வெறும் (800,000) எட்டு இலட்சமாகத் தான் இருந்துள்ளது என்பது இங்கு எமது கவனத்திற்குரியதாகும். அதேவேளை 1972இல் தான் குற்றவாளிகள் தொகை மிக மிகக் குறைவாக இருந்துள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக மேலதிகமாகப் பெறப்பட்ட இன்னும் சில விபரங்களை இங்கே தருவது அங்குள்ள நிலைமை புரிந்து கொள்ள உதவும்.

1.அமெரிக்கச் சிறைகளில் உள்ள பெண்களின் எண்ணிக்கை 1990இல் இருந்து இரட்டிப்பாக உயர்ந்துள்ளதுடன் 1999இல் அவர்களின் தொகை 87,ஆயிரத்துக்கும் அதிகமாக உள்ளது.

2.கறுப்பு இன ஆண்களில் 11வீதம் ஆன 20 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் சிறைகளில் உள்ளார்கள். ஆனால், இதே வயதெல்லைக்குள் உள்ள வெள்ளை இன ஆண்களில் 1.5வீதத்தினர் மாத்திரமே கைதிகளாக உள்ளனர்.

3.லூசியானா (Louisiana) மாநிலத்தில் தான் மிக அதிகமானவர்கள் சிறையிலுள்ளார்கள். அம்மாநிலத்தின் சனத்தொகையில் ஒரு சதவீதமானவர்கள் கைதிகளாக சிறைகளில் உள்ளனர். இதனை அடுத்து ரெக்சாசும் (Texas), ஜோர்ஜியாவும் (Georgia) வருகின்றன.

4.கலிபோர்னியா மாநிலத்தில் 2லட்சத்து 39 ஆயிரம் சிறைக் கைதிகள் உள்ளனர். வேர்மொன்ற் (Vermont) மாநிலத்தில் தான் மிகக்குறைவாக 1,200பேர் சிறையிலுள்ளனர்.

ஜனநாயகத்தின் காவலனாக தன்னை விளம்பரப்படுத்திக் கொண்டு, உலக சோசலிசக் கட்டுமானத்தையே ஆரம்பம் முதல் கருவறுத்துக் கொண்டு இன்று தன்னை மனித உரிமையாளனாகக் காட்டிக் கொண்டு உலகைச் சூறையாட உலக பொலிஸ்காரனாக வலம் வரும் அமெரிக்காவின் கோட்டை, கொத்தளங்கள் யாவும் குற்றவாளிகளால் நிரம்பி வழிவதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பதை அறிவதில் எல்லாருக்குமே ஆர்வம் மேலிடுவதை தவிர்க்க முடியாதல்லவா? ஆனால், எந்வொரு சாதாரண மனிதராலும் ஒன்றைப் புரிந்து கொள்ள முடியும். அது என்னவென்றால், இப்படி ஒரு சமூகத்தில் குற்றவாளிகள் பெருகுவதற்கான அடிப்படை பொருளாதார, கலாசார நிலைப்பாடுகளே.

எங்களுக்கு அடிப்படை விடயம் புரிந்து கொண்டாலும் கூட சரியான இடத்திலிருந்து உரிய ஆதாரங்களுடன் ஒரு பிரச்சினையை விளங்கிக் கொள்வதே சிறந்தது. அந்த வகையில் அமெரிக்க மக்கள் மத்தியிலும், ஏனைய உலக மக்களாலும் பெரிதும் மதிக்கப்படுகின்ற நேர்மையான ஒரு சிந்தனைவாதியான நோம் சோம்ஸ்கி (Noam Chomsky) யின் Class Warfare என்ற நூலிலிருந்தே அவ்வாதாரங்களை இங்கே பிரதிபண்ணவிளைகின்றேன். இவ்வாறு நோம் சோம்ஸ்கியை நாம் மதிப்பிடுவதற்குக் காரணம் அவரது பின்வரும் கூற்றொன்றே. "The responsibility of intellectuals is to speak the truth and expose lies" அதாவது "அறிவுஜீவிகளின் கடமை உண்மையைப் பேசுவதும், பொய்களை அம்பலப்படுத்துவதும்" ஆனால், இன்றைய மாபியா உலகில் புத்திஜீவிகளில் பெரும்பாலோர் உண்மைக்குப் புறம்பாக பொய்களைப் பேசுவதையும், மாபியாக்களுக்கு வக்காலத்து வாங்குவதையும் தான் நாம் நாளும் பொழுதும் காண்கின்றோம். இந்த இழிநிலைக்குத் தாழ்ந்தவர்கள் எம்மத்தியிலுள்ள அனேகமான புத்திஜீவிகள் என்றால் அது மிகையல்ல. இவர்களைப் பொறுத்தவரை மிகப் பெரிய குற்றவாளி தான் மாபெரும் தலைவன். அவரைப் பொறுத்தவரை அமெரிக்காவின் அரசு எப்போதுமே பணக்காரர் நலன்புரி அரசாகவே செயல்பட்டுள்ளது.



(Welfare stare for the rich). அடுத்து (increasing global corporate power and the weakening of democracy) Global corporate power என்று அழைக்கப்படும் (500இற்கு உட்பட்ட) அமெரிக்க பல்தேசியக் கம்பனிகளின் வளர்ச்சியும் அவர்களது இலாப வேட்கையும், ஜனநாயகத்தின் (முதலாளித்துவ ஜனநாயகத்தின்) வீழ்ச்சியும் குற்றவாளிகளின் பெருக்கத்திற்கான காரணமாகும். இனி அவர் தொடர்ந்து சொல்வதைப் பார்ப்போம். அமெரிக்கா ஏன் உலகத்தையே ஆட்டிப் படைக்கின்ற அமெரிக்க பழமைவாதிகள் (பணக்கார) மிகப் பலமான வன்முறை அரசை (Violent State) வேண்டி நிற்கின்றார்கள். ஏனெனில், மக்கள் மத்தியில் எழுந்து வரும் விரக்தி, வெறுப்பிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அவ்வாறான அமைப்பே தேவையாகவுள்ளது.

அத்துடன் 1980இல் இருந்ததைவிட சிறைச்சாலை கைதிகள் எண்ணிக்கை தற்போது மூன்று மடங்காக உயர்ந்துள்ளது. கடுமையான குற்றவியல் சட்டங்கள் கிளின்டனால் கொண்டு வரப்பட்டதும், இவ்வுயர்விற்கு ஒரு காரணம். மேலும் மக்களின் உண்மையான கூலி (Real Wage) தொடர்ந்து குறைந்து கொண்டு செல்வதுடன் பணக்காரர்களின் இலாபம் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. முதலாளிகளின் இலாபம் அதிகரிக்க அதிகரிக்க மக்களின் வாழ்க்கைத் தரம் மோசமாவதுடன் அவர்கள் படுமோசமாகச் சுரண்டப்படுவதாலும், அதற்கு எதிரான உணர்வுகளை ஒழுங்குபடுத்த உரிய அமைப்புகள் இல்லாததாலும் கோபமும், விரக்தியும் குற்றச் செயல்களைத் தூண்டுகின்றன. மேலும் அவரது கூற்றுப்படி இந்த 500இற்கு மேற்பட்ட கம்பனிகளின் நலனைப் பாதுகாப்பதே அரசின் செயல்பாடாக உள்ள நிலையில் அமெரிக்க மக்களும், மூன்றாம் உலக மக்களின் வாழ்நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

அமெரிக்க அரசு எவ்வளவு மோசமான ஒடுக்குமுறை அரசு என்பதை விளங்க வைக்க பின்வரும் விடயத்தை அறியத்தரும் போது ஒரு முறை நீங்களும் திடுக்கிடுவீர்கள்.

உலகில் உள்ள ஒரேயொரு நாடு அமெரிக்கா தான் இவ்வாறு செயல்படுகின்றது என்று சொல்ல முடியும். சிலவேளை யூ.எஸ்.ஏ., ஈராக், ஈரான் போன்றவையும் அடங்கலாம்.

அதாவது குற்றச் செயல்களுக்காக சிறுவர்கள் அரசால் கொல்லப்படுவார்கள், ஏனெனில், சிறுவர்கள் செய்யும் குற்றத்திற்கும் மரண தண்டனை வழங்கப்படும், மேலும் சொல்கின்றார் "சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தில் மிக அருமையாகத் தான் யூ.எஸ். கையெழுத்திட்டுள்ளது.

"International Convention on the rights of the Child" இல் 177வது நாடாக அமெரிக்கா கையெழுத்திட்டுள்ளது. இதிலுள்ள ஒரு பிரிவின்படி வயதுவராதவர்கள் அதாவது 19வயதிற்கு உட்பட்டவர்கள் மேல், மரண தண்டனையோ ஆயுட்காலத் தண்டனையோ, வழங்கப்பட முடியாது. அப்படி இருந்தபோதும் அதற்கு எதிராக வயது வராதவர்களுக்கு மரண தண்டனை வழங்குவதன் மூலம் அடிப்படை உரிமைகளை மீறுகின்றோம். இவ்வாறு செயல்படும் ஒரு சில நாட்டவரில் நாங்களும் (யூ.எஸ்.ஏ.) ஒருவராகும்."

உண்மையில் நாங்கள் எல்லோரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எந்தளவிற்குப் புரிந்து கொண்டோம் என்பது கேள்விக்குறியே. ஏனெனில், 2வது உலக மகா யுத்தத்தில் 6 மில்லியன் யூத மக்களைப் படுகொலை செய்த நாஜிகளுக்கு இன்னும் தண்டனை வழங்குகின்றோம். ஆனால், வியட்நாம், கம்போடியா, லாவோஸில் 4 மில்லியன் மக்களைப் படுகொலை செய்த நேபாம் குண்டுகளால் காடுகளைக் கூட அழித்த அமெரிக்க அரசு, நம்மவர் மத்தியிலும், உலகின் கண்களின் முன்னும் இன்னும் தன்னை ஜனநாயகவாதியாக காட்டிக் கொள்வதும் அதை மற்றவர்களும் ஏற்றுக் கொள்வதும் நகைப்பிற்கிடமாகவும், அதேவேளை பாசிசம் எவ்வளவு வலிமையானது என்பதையும் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது அல்லவா?

இன்னும் சில விபரங்கள் இதோ:

1.அமெரிக்காவில் 12 சிறுவர்கள் ஒவ்வொரு நாளும் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகின்றார்கள்.

2.ஒவ்வொரு நாளும் 10வயதிற்குக் குறைந்த சிறுவன் ஒருவன் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகின்றான்.

3.ஒவ்வொரு கிழமையும் 5 வயதிற்குக் குறைந்த ஒன்றிற்கு மேற்பட்ட குழந்தைகள் துப்பாக்கிச் சன்னங்களுக்கு பலியாகின்றார்கள்.

4.நகரங்களில் நாளொன்றிற்கு ஒரு கொலை என கொலைகளின் வீதம் அதிகரித்துச் செல்கின்றது.

5.கைத்துப்பாக்கிகள் வைத்திருப்பது சட்ட விரோதமானது என்ற போதிலும் ஆனால், தெருக்களில் $80 அமெரிக்க டொலருக்கு அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இது சம்பந்தமான அதிகமான விபரங்களைப் பெறுவதற்கு பின்வரும் இணைவலை உங்களிற்கு உதவலாம். www.millionmonmarch.com

சென்ற மாதம் அமெரிக்கத் தாய்மார்கள் துப்பாக்கிகளின் பாவனையைக் கட்டுப்படுத்துமாறு திரண்டெழுந்து மாபெரும் ஊர்வலம் ஒன்றையும் நடாத்தியுள்ளார்கள்.

**– தேசபக்தன்**

நன்றி - நூலகத்திட்டம்





**நிஷ்டை**
*சிறுகதைத் தொகுப்பு*
**க.கலாமோகன்**

வெளியீடு:
எக்ஸில் வெளியீடு
94, RUE de la Chapelle,
75018, Paris,
France

ஈழத்தினை பிறப்பிடமாகக் கொண்டு பிரான்ஸ் இல் புகலிடம் தேடியுள்ள கலாமோகனின் சிறுகதைத் தொகுப்பு இது. இதில் தொகுக்கப்பட்டிருக்கும் சிறுகதைகள் ஏற்கெனவே சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்தவையே. வாசகர்களுக்காக தொகுப்பிலிருந்து ஒரு கதை நன்றியுடன் மீள் பிரசுரமாகின்றது.

ஆ - ர்

# மூன்று நகரங்களின் கதை

அப்பா இறந்துவிட்டார் யாழ்ப்பாணத்தில். காலையில் தான் தந்தி வந்தது. பாஸ் எடுத்து கொழும்பில் வந்து நிற்கும் உறவினர்களுடன் நான் உடனடியாகப் பேசவேண்டும் என்பதை தெரிவிக்கும் சிறு குறிப்பு: Contact Immediately. தந்தி கிடைக்குமுன் எழுதத் தொடங்கிய சிறுகதையின் பக்கங்கள் சில மேசையின் மீது அலங்கோலமாகக் கிடக்கின்றன. சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக்கொண்டு கீழேயிறங்கி கிகரெட் விற்பனை நிலையமொன்றில் நுழைந்து சில ரெலிகாட்களை (பொது தொலைபேசி நிலையத்திலிருந்து பேசுவதற்காக உபயோகிக்கப்படும் காட்கள்) வாங்கியபின், தொலைபேசிக் கூட மொன்றிகுள் போய் கொழும்பிற்கு அடிக்கின்றேன்.

"சாப்பிடப் போய்விட்டார்கள். ஒரு மணித்தியாலம் கழிந்து எடுங்கள். அவர்கள் வந்து விடுவார்கள்" என்று சொல்லப்பட்டது.

கூடத்தைவிட்டு வெளியே வந்தபோது அப்பாவின் மணரம் ஏன் எனது விழிகளிலிருந்து கண்ணீர்களைக் கொட்டவைக்கவில்லை என ஒரு தடவை கேட்டுக்கொண்டேன். எனது கண்ணீர்க்கடல் வற்றிவிட்டதோ? ஒரு வேளை அப்படியுமிருக்கலாம். பல இரவுகள் என் முன் படமாய் வந்துபோயின. இந்த இரவுகளில் முகம் தெரியாத பலரிற்காக அழுதேன். இது அவர்கள் இறந்துவிட்டார்கள் என்பதற்கா அல்ல. அவர்களது வாழ்வுகள் அநியாயமாகப் பறிக்கப்பட்டுவிட்டன என்பதற்காகவே. எனது கடல் இவர்களுக்காக அழுததில் வற்றிப்போய்விட்டது. அப்பா இயேசுநாதது போல் புத்துயிர் பெற்றுவந்தால் என்னிடம் ஏன் தனக்காக அழவில்லை என்று கேட்டுச் சுயவிமர்சனம் செய் என என்னை நிந்திப்பாரா? அவர் அப்படிப்பட்டவரல்ல என எனக்குள் ஒரு தடவை சொல்லிக்கொள்கிறேன்.

நான் இப்போது பாரிஸில் அகதியாக பாதி உறவினர் கொழும்பிலும், மீதி யாழ்ப்பாணத்திலும், அருகே இருந்த bar ஒன்றிற்குள் புகுந்து ஒரு டெமி (பியர்) அடித்துவிட்டு மீண்டும் தொலைப்பேசிக் கூடத்திற்குள் புகுந்து கொழும்புக்கு அடிக்கிறேன்.

"ராசசுந்தரம் வந்துவிட்டாரே" இது நான்

"ஓம், ஓம் லைனிலை நில்லுங்கோ, நான் அவரை கூப்பிட்டு விடுகிறேன்."

சில கணங்கள் காத்திருப்பை வெட்டும் வகையில், மறுமுனையில் பெரியமாமாவின் குரல்.

"நீ ஏன் உடனை ரெலிபோன் எடுக்கேல்லை. நான் இங்கை வந்து ஒரு கிழமையாகுது"

"மாமா, உங்கடை தந்தி பிந்திதான் கிடைச்சுது. விஷயத்தை சொல்லுங்கோ, அப்பா என்னெண்டு செத்தவர்""அவருக்கு வருத்தமொண்டுமில்லை., சாப்பிட்டிட்டு விறாந்தைக்கு வந்தவர் திடீரெண்டு விழுந்தார். அப்படியே செத்துப் போட்டார். செத்தவீட்டாலை எங்களுக்கு கனக்கச் செலவு உடனை கொழும்புக்கு காசை அனுப்பிவை. நான் அதை அங்கை கொண்டு போய்க் கொடுக்கிறன். மாமி உன்னோடை கதைக்கப் போறாவாம். அவவிட்டைக் குடுக்கிறன கதை" ரெலிகாட் யூனிட்டுகள் முடிவுக்கு வந்ததால் அதனை இழுத்துவிட்டு இன்னொரு காட்டை நுழைக்கின்றேன். ஏற்கெனவே நான்கு காட்டுகள் தின்னப்பட்டுவிட்டன.

"மாமி"


"தங்கச்சியை எப்ப உங்கை எடுக்கப் போறீர்?"

"எடுக்கத்தான் வேணும் ஆனா..."

"ஆனாவெண்டா...."

"என்னிட்டை இப்ப காசில்லை. வேலையிலைருந்தும் நிப்பாட்டிப் போட்டாங்கள்...."

"நீர் இப்படி எவ்வளவு நாளைக்குத்தான் சொல்லிக் கொண்டிருக்கப்



போகிறீர் எப்பிடியும் அவவை உங்கை எடும். தம்பியும் (அவவின் மகன்) உங்கைதான் இருக்கிறான். அவன் உங்கை வந்து ஒரு வருஷம் தான். நாங்கள் எங்கடை கடன் எல்லாத்தையும் தீர்த்திட்டம். நாளைக்கு அவன் இங்கை 30 (முப்பது ஆயிரம் பிராங்) அனுப்பிரான். நீர் அவனிட்டைக் குடுத்தீரெண்டா அவன் தான் குடுத்தனுப்பிற கடையிலை குடுத்து அனுப்பிவைப்பான். உம்மடை தங்கச்சியின்ரை ஆளும் அங்கைதான் இருக்கு. அவரோட கதைச்சு எப்படியும் அவவை அங்கை எடுக்கிற வழியைக் கெதியாப்பாரும். மாமா உம்மோடை கதைக்கப் போறாராம். கதையும்" றிஸீவர் மாமாவின் கரங்களுக்குச் செல்லும் சத்தம், தொலைவாகவிருந்த போதும் தெளிவாகவே எனது காதில் விழுகிறது.

"காசை உடனை அனுப்பிவை"

"ஓம்"

"அவவை உடனனை அங்கை எடு"

"ஓம்"

"நாளைக்கு எனக்கு ரெலிபோன் எடு!"

"ஓம்"

தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. ஏதோ பிராங் மெத்தையில் சயனம் செய்பவனைப் போல அனைத்துக்கும் "ஓம்" போட்டுவிட்டேன். இந்த "ஓம்கள் எல்லாம் உண்மையா எனக் கேட்டபடி றூம் கதவினை அண்மித்தபோது எனக்கு முன்னே மரணம் வந்தது.

மரணம், முன்பெல்லாம் மரணங்கள் என வரும்போது சோகம் வாழப்படும். போர் பேசிய சமாதானமும், சமாதானம் பேசிய போரும் எமது உணர்வுகளுக்கு இருந்த உரிமைகளைக் கூட பறித்து எங்களையும் வேறு வாழும் பிணங்களாக்கிவிட்டதே. வாழ்விற்காக, மரணிக்காதவர்களையும் கொல்லும் வித்தையைக் கற்றுக்கொண்டிருக்கும் இன்னொரு உலகில் நாம், காசு காசு, காசு என்ற ஓலம் தான் மரண ஓலங்களையும் முந்திப் தலையை நீட்டுகிறது.

"ஓம்" போட்டவன் நான் தலைக்குமேலே வெள்ளம்போய்விட்டது. இனிச் சாண்போனால் என்ன முழம் போனால் என்ன என்ற திடகாத்திரத்தோடு

கதவைத்திறந்தால் காலை வங்கியிரிருந்து வந்து என்னால் உடைக்கப்படாதிருந்த கடிதம் தனது அச்சுறுத்தும் விழிகளைக் காட்டுகின்றது. நல்ல செய்தி இருக்காது என்ற நம்பிக்கையுடன் அதனைத்திறக்கின்றேன். எனது கணக்கிலிருந்த 300 பிராங்குகளையும் தின்று அதற்கு மேலும் தின்று விட்டேனாம். வேலையில்லாது இருக்கும் ஒருவர் இப்படி நடந்துகொள்வது வங்கிச் சட்டத்திற்கு முரணானதாம். எவ்வளவு விரைவில் நான் வங்கியின் பணிப்பாளரைச் சந்திக்க முடியுமோ அது நல்லதாம். இல்லையேல் "நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும்" என்ற மிகவும் நாகரீகமான குறிப்பு. முழமும் போனால் என்ன என்ற திடகாத்திரம் இருந்தால் கடிதத்தைக் கிழித்து ஜன்னல் வழியாக எறிகின்றேன்.

இன்றிரவு நான் தூங்கவேண்டும். ஆனால் எப்படி? அதுவும் இவ்வளவு சுமைகளையும் தாங்கியபடி. எனது றூமிற்கு அருகிலுள்ள றூமில் இருப்பவன் ஒரு போர்த்துக்கல் தொழிலாளி. அவனிற்கு பிரெஞ்சு துண்டாகவே தெரியாது. ஆனால், ஒரு பிரெஞ்சுக்காரிக்கு மூன்று பிள்ளைகளைக் கொடுத்துவிட்டான். இதற்கெல்லாம் பாஷை இடையூறாக இருக்கவில்லை. முடிவில் பிரெஞ்சுக்காரி அவனைத்துரத்தி விட்டாள். அவன் தனிக்கட்டை. தனக்குப் பிறந்த மூன்று பிள்ளைகளையும் பார்த்து நான்கு வருடங்கள். என்னைக் கொண்டுதான் பிள்ளைகளுக்குக் கடிதம் எழுதுவான். பதில்கள் வரா அவனோ, எனக்கூடாக சளைக்காமல் அவளுக்கும், பிள்ளைகளிற்கும் எழுதிக் கொண்டிருப்பான்.

காலை 4 மணிக்கு வேலைக்குப் போகுமுன் ஒரு பியர். மாலை 5 மணிக்குத் திரும்பி வந்தவுடன் வைனில் தொடங்கிவிடுவான். எனது சுமையைக் குறைக்க ஏதாவது குடிக்க வேண்டும் போலிருந்தது. அவனிடம் ஏதாவது இருக்கும் என்ற நம்பிக்கையுடன் போய்க் கதவைத்தட்டுகின்றேன். திறந்தவனின் கையில் போத்தல். அதனைக் கண்டவுடன் எனது சுமையில் அரைவாசி உடனடியாகவே இறங்கியது.

"உது புதுசா வந்த வைன். திறம், குடி" கேட்காமலேயே, குறிப்புணர்ந்து உபசரித்தான். நான் மறுக்கவில்லை. உபசரிப்பைத் தேடித்தானே நான் அங்கு போயிருந்தேன்.

"வடி வாக் குடி. இன்னும் மூன்று போத்தல் இருக்கு"

இருவரும் எமது சுமைகளை இறக்கி இன்னோர் உலகை வாழ வெளிக்கிட்டோம். ஏற்கெனவே பொரித்து ஆறிப்போன சார்டின் மீன்களைச் சூடாக்கி என் முன் டேஸ்ட்டுக்காக வைத்தான்.

அப்பா மீண்டும் என் நினைவின் முன் வந்தார். தந்தியோடு வந்த கடிதங்கள் பொகற்றுக்குள் இருந்ததால் தைரியமாக அவைகளை எடுத்து உடைத்தேன். "நீ ஒண்டுக்கும் யோசிக்காதை. நாங்கள் இப்படியொண்டு நடக்குமெண்டு கனவிலைக்கூட நினைக்கேல்லை மனதை திடமாக வைத்திரு" இந்தச் செய்திகள் எனக்கு ஒத்தடத்தைத் தந்த வேளையில் கடிதங்களில் வாழும் யதார்த்தமும், தொலைபேசிக்கூடாக வாழப்படும் யதார்த்தங்களும் ஒன்றா என ஒரு தடவை கேட்டுக்கொள்கின்றேன்.

இரண்டு பக்கங்களிலும் போலித்தனம் இல்லை. ஒரு வேளை அது என்னிடம் தான் உள்ளதோ? எது போலி?, எது எதார்த்தம்? நான் வாழும் விதம் கூட யதார்த்தம் தான் என்னிடம் காசு இல்லை. காசு இருப்பது சிலரின் யதார்த்தமாக இருக்கும்போது என்னுடையதோ அதற்காகத் தவிண்டையடிப்பது. இன்று ஒருமையில் பேசும் பலர் நாளை என் நிலைக்குத் தள்ளப்படும்போது "பாரும், எம்மடை பாடு இப்படியிருக்கு" என்று பன்மையில் பேசுவார்கள். எது ஒருமை, எது பன்மை என்பதை விளக்கிக்கொண்டதுதான் எனது இருதலைக்கொள்ள எறும்பு நிலைக்குக் காணரம் என நான் ஒரு போதுமே சொல்லமாட்டேன். எனது ஒருமை பன்மைகளிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்துகொண்டிருக்கும் ஒன்று. ஒருமைகள் பன்மைகளாகி, பன்மைகள் பன்மைகளாகாமல் இன்னொரு ஒருமையை வாழும் உலகில் நான்.

நான் மூன்று நகரங்களின் புத்திரன். எனது முதலாவது நகரம் யாழ்ப்பாணம். போர்த்துக்கல் நண்பனின் றூமைவிட்டு எனது றூமிற்கு வந்து கட்டிலில் களைப்புடன் விழும்பேது இந்த முதலாவது

நன்றி - நூலகத்திட்டம்



நகரை நோக்கி எனது கால்கள் ஒரு தடவை ஓடுகின்றன.

தாழங்காய் பொறுக்கிய நாள்கள். ஊமைக்கடல் அடிக்கடி வற்றும். அதன் மீது கால் விரல்களால் கீறப்படும் ஓவியங்களைச் சூரியன் வந்து முத்தமிட்டுச் செல்வான். வளர்ந்தேன். வேலை கிடைத்து. கொழும்பிற்கு. பாஸ் எடுக்காமல் போனேன்.. கொழும்பு இது எனது இரண்டாவது நகரம். மூன்று வருடங்களின் பின் அகதியாகி, முதலாவது நகரிற்கு, இரண்டு சூட்கேஸ் நிறையப் புத்தகங்களைச் சுமந்தபடி வந்தேன். வழியிலே என்னை மறித்த இளம் சிங்களச் சிப்பாய்கள் சூட்கேஸிற்குள் கிடந்த தமிழ்ப் புத்தகங்களைக் கண்டு "ஏன் நீ மஹாவம்சத்தை அவமதித்தாய்?" என விசாரணை ஏதும் செய்யவில்லை. முதலாவது நகரிற்கு வந்தபோது அங்கே நான் அகதிமுகாமிலிருந்த விஷயம் தெரியாமல் செத்தவீடு வேறு கொண்டாடப்பட்டிருந்தது. நான் இறந்து உயிர்த்தேன். ஒரு வேளை, இயேசுவைப் போல் நானும் மீள உயிர்த்தவனோ? "பரமண்டலத்திலிருக்கும் பிதாவே, எனது பாவங்களை அர்ச்சி" ஊரிலுள்ள அனைத்துக் கோவில்களிலும் என் பேரால் அர்ச்சனைகள், பூஜைகள் என்பன செய்யப்பட்டன. நான் மறுஜென்மம் பெற்றுவிட்டேன் என்பதற்காகத்தான்.

"நீ எங்களுக்கு உழைச்சுத்தர வேணாம். ஆனா கொழும்புக்கு மட்டும் திரும்பிப் போகாதை"

வீடு, இப்படி என்னிடம் கெஞ்சிக் கூத்தாடியபோது கொழும்பு வீதிகளில் வாள்களோடு நின்று குங்குமப் பொட்டிட்டவர்களையும் காதில் துவாரங்களைக் கொண்டிருந்தவர்களையும் தேடிய அப்பாவிச் சிங்களக்காடையர்கள் மத்தியிலிருந்து எனது உடலைப் பௌத்திரமாகக் காத்த குணசேனாவின் நினைவு வந்தது. அவனும் ஒரு அப்பாவிதான். அப்பாவிகள் வாள்களை தூக்க தூண்டுதலாக இருந்தது எது என்பதை என்னைப் போலவே புரிந்து கொண்டவன். யாழ்ப்பாணம் இங்கு எவ்வளவு நாள்கள் தான் வாழ்வது! இது மட்டுமென்ன நரகங்களே இல்லாத நகரா?

வீட்டின் மன்றாட்டம், முடிவில் "வெளிநாடு போ!" என்று என்னைத் துரத்துவதில் வந்து நின்றபோது வியப்படைந்தேன். வெளிநாடு போவதா? எப்படி? நிறையக் காசு வேண்டுமே!

"போறதெண்டது சின்ன விஷயமே காசுக்கு எங்கை போறது?" இது நான் பதில் உடனடியாகக் கிடைக்கவில்லை. ஆனால், என்னை வெளிநாட்டிற்கு அனுப்பிவைத்துவிட்டார்கள். நான் தப்பிவிட்டேன்.

உடல், எனது உடல், காசினால் காக்கப்பட்ட உடல். எனது உடல். கடல் கடந்து அகதியாகிவிட்ட உடல். மூன்றாவது நகரில் நான் இப்போது அகதி. முதலாவது நகரிலோ அகதிப் பெருமை கிட்டாமல் எத்தனையோ உடல்கள் மண்ணிடை மண்ணாய்ப் புதைந்த வண்ணம். தப்புதல், கருத்துடனோ கட்சியுடனோ கடவுளுடனோ சம்பந்தப்பட்ட விஷயமல்ல. காசுடன் சம்பந்தப்பட்டது என்பதை மூன்றாவது நகரில் காலடி எடுத்து வைத்த முதல் நாளிலேயே புரிந்து கொண்டேன். எனது மூன்றாவது நகரம் பாரீஸ்.

நான் மூன்று நகரங்களிற்கிடையே சிக்கிக்கிடக்கும் ஒரு புத்திரன். யாழ்ப்பாண போஸ்ட் ஒபிஸ் முத்திரை குத்தப்பெற்று கடிதங்கள் வருவது நின்றுவிட்டது. கடிதங்கள் சுற்றி வளைந்து வரும். அதுவும் கொழும்பு முத்திரரை குத்தப்பட்டு வரும் கடிதங்களில் இப்படியொரு குறிப்பு இருக்கும். "உடனடியாக இந்த நம்பருக்கு எடு" என்னிடமோ ரெலிகாட் வாங்கக்கூட காசில்லை. இப்படியெனில் எப்படித் தொலைபேசிலாவது வாழ முடியும்?

போனவாரம் எனது பிரேஞ்சுச் சிநேகிதியைச் சந்தித்போது, தனது பிறந்த தினத்திற்கு ஒரு புத்தகத்தில் சில கவிதை வரிகளை எழுதியாவது அன்பளிப்புச் செய்திருக்கலாமே என முகத்தைச் சுழித்தாள். நான் அனைத்து நாடுகளுக்கும் அனைத்து மனிதர்கட்கும் அந்நியமான என்னிலிருந்து என்னைப் பிரித்தெடுக்கத் தெரியாத ஒரு மனிதனாக, என்னைத் தமது வீடுகளிற்கு வாவென நண்பர்கள் எனப்படுவோர் அழைக்கும்போது "ஓம் வருகின்றேன்." என வாக்குறுதி கொடுத்துவிட்டுப் போகாது விடுகின்றேன். போனால் கூட எனது பொருளாதார நிலையை விளங்கிக்கொள்ளாமல்" அப்ப உம்முடைய றூமுக்கு எப்ப வாறது...." எனக் கேட்டுவிடுவார்களோ என் அச்சத்தினால் தான். எனக்கு வீடு இல்லை. நான் தூங்குமிடங்கள் எனது வீடுகளுமில்லை. வீடு என்பது அவசியமா என்ற விசாரணைக்குள் நான் சிலவேளைகளில் இந்த மூன்று நகரங்களையும் தாண்டி வீடுகளும் மனிதர்களும் இல்லாத நான்காவது நகரம் ஒன்று இருக்குமாயின் அங்கே போனால் என்ன என்று என்னிடம் கேட்டுக்கொள்வதுண்டு.

பெரியமாமா கேட்டுக்கொண்டபடி, மறுநாள் நான் போன் பண்ணவில்லை. தூங்கிவிழித்து, மீண்டும் சில தினங்கள் தூங்கி, விழித்து ஒரு காலையில் எழுந்து பாரிஸிலிருக்கும் எனது ஒன்றவிட்ட தம்பிக்கு போன் பண்ணுகின்றேன்.

"உங்கடை மாமா கொழும்பில வந்து நிற்கிறார். உங்களோடை பேசவேணுமாம். உடனடியாக எடுங்கோ!"

"எந்த மாமா?

"வேலுமாமா"

இவர் பெரிய மாமாவோ, சிறியமாமாவோ அல்ல. இன்னொருமாமா. ஒன்றவிட்ட தம்பி தந்த இலக்கத்தை எழுதிவிட்டு சொற்பயூனிட்டுகளுடன் எஞ்சிக்கிடந்த ரெலிக்காட்டின் துணையுடன் கொழும்பிற்கு அடிக்கிறேன். வேலுமாமா பேசுகின்றார்.

"மருமோன் உம்மடை பெரியமாமா கொழும்பிலையிருந்து யாழ்ப்பாணத்திற்குப் போயிட்டார். நீர் திரும்பவும் போன் எடுக்கிறதெண்டு சொல்லீட்டு எடுக்காம விட்டிட்டீர்" எண்டு குறையாயச் சொன்னவர்.

"ஓம் மாமா. நீங்கள் சொல்லிறது சரி. என்னிட்டைக்காசு வசதியில்லை. அதாலைதான் கொழும்புக்கு திரும்பவும் அடிக்கேல்லை. இலங்கையிருந்து கொழும்புக்கு அடிக்கிறதெண்டா சரியான செலவு.

"ஓம் மருமோன். எனக்கு விளங்குது. எங்களுக்கு இங்கை கஸ்டம் இருக்கிறதைப் போல் உமக்கும் அங்கை கஷ்டம் இருக்கும் தானே. எதுக்கும் கொஞ்சக் காசெண்டாலும் அனுப்பிவையும். நான் யாழ்ப்பாணத்திற்குப் போய் விஷயத்தை வடிவா விளங்கப்படுத்திறன்"

"நீங்கள் எப்ப அங்கை திரும்புவியள்"

"5000 ரூபா குடுத்துப் பாஸ் எடுத்தானான். அடிக்கடி பாஸ் எடுத்துக் கொண்டு கொழும்புக்கு வர என்னிட்டை வசதியில்லை. இங்கை கொஞ்ச அலுவல்கள் இருக்கு. அதுகளை முடிச்சிட்டுப் போக இன்னும் ஏழெட்டு நாளாகும்.

மாமாவுடன் தொடர்ந்து பேச வேண்டும் போல எனக்கு ஆசையாக இருக்கின்றது. அதற்குள் ரெலிக்காட்டினுள் இருந்த கடைசி யூனிட் ஒரு கிக்கீபோட்டுவிட்டுத் தனது இறுதி மூச்சை விடுகின்றது. சோகத்துன் றூம் திரும்புகின்றேன்.

# நிஷ்டையைக் கலைத்தாயா...?

கலாமோகனின் நிஷ்டையைக் கலைத்தாயா சீ வாசித்தாயா? உனக்கு அந்தப் புத்தகம் எப்போதோ கிடைத்திருக்கும் வாசித்திருப்பாய். நான் இரண்டு கிழமைக்கு முன்னர் தான் அதை வாசித்தேன். வாசித்ததை வைத்து உன்னோடு அறுக்க வேண்டுமென்பதற்கான ஆவலை இன்று நிறைவேற்றுகிறேன். தயை கூர்ந்து உன் கழுத்தை நீட்டுவாயாக! (என்ன கலாமோகனைக் கொப்பி-யடிக்கிற மாதிரி இருக்கா?)

புகலிடத்தில் மூத்த எழுத்தாளராக அறியப்பட்டவர் கலாமோகன். 1983ல் தஞ்சம் புகுந்தவர். முன்னர் இலங்கையில் பத்திரிகையாளராகக் கடமையாற்றியவர். எழுத்தும் இவரோடு புலம்பெயர்ந்து இன்று வரை அவரோடு ஒட்டி உறவாடிக் கொண்டிருப்பது விஷேசம்.

நிஷ்டை பன்னிரண்டு கதைகள் அடங்கிய தொகுப்பு. 1990ல் எழுதப்பட்ட மழை என்ற கதையுடன் ஆரம்பித்து 1997ல் எழுதப்பட்ட கனி என்ற கதையுடன் நிறைவுறுகிறது. 1993ம் ஆண்டில் இவர் உத்வேகத்துடன் எழுதியிருப்பதைக் காண முடிகிறது. ஏழு கதைகள் 1993ல் எழுதப்பட்டவை. சில வேளைகளில் 1993ல், 1983ன் பத்தாண்டு நிறைவுக்காக பல இதழ்களுக்கு எழுத வேண்டி-யிருந்திருக்கலாம். அல்லது அவர் எழுதியவற்றில் தொகுப்புக்குரிய கதைகள் 1993ல் இருந்திருக்கலாம். அதை விடேன். முதல் கதை மழை. அதைப் பற்றிப் பாடாத கவிஞர்களோ, பாடலாசிரியர்களோ இல்லையெனலாம். இளம் பராயத்து மழைக் கால நிகழ்வுகள், நினைவுகளாக இங்கு கலாமோகனில் கருக்கொள்கிறது. ஒரு கவிதையாக மழை கலாமோகனைச் சுற்றிப் பெய்கிறது. கலாமோகனின் மழைப் பதிவு வித்தியாசமானது. அப்பாக்களின் ஆதிக்கத்திற்கும், அம்மாக்களின் தலையாட்டல்களுக்கும் வெருளாது தன் இளமையின் சுயத்தை, சுகத்தைத் தேடிய சைக்கிள் பயணமும், பதிவுகளும் ஒவ்வொருவரையும் அவரவர் இளமைக்கு அழைத்துச் செல்ல வல்லன கலாமோகனின் மழை.

இதுபோலத் தான் "மூன்று நகரங்களின் கதை". இது எல்லோருக்குமான கதையாக விரிந்து மனதில் இருப்புக் கொள்கிறது. உண்மையிலேயே அது நகரங்கள் பற்றிய கதையல்ல. மனிதர்கள் பற்றிய கதை. பொதுவாக இலங்கையின் வடக்குக் கிழக்கிலிருந்து எங்காவது புலம் பெயர்ந்தவர்கள் அனைவரும் மூன்று நகரங்களின் புத்திரர்களாய்த் தான் இருக்கிறார்கள். அது அரசியல் தஞ்சம் புகுந்தாலென்ன அல்லது என்னைப் போல் பொருளாதாரப் பஞ்சம் பிடித்த தஞ்சமென்றாலென்ன எல்லோரும் மூன்று நகரங்களைச் சுற்றி அலைகிறோம். இந்தக் கதையிலும் கூட எல்லோருக்கும் நெருக்கமான ஓர் உலகைக் காண்கிறோம். இது போலவே ஓரளவுக்கு "உருக்கம்", "எனது தேசம்" போன்ற கதைகளையும் சொல்லலாம்.

இங்கு நான் குறிப்பிட்ட மழை தவிர்ந்த மற்றக் கதைகளில் மிக இயல்பான, அந்நியத் தன்மையற்ற, மிகச் சாதாரண மொழி எந்தப் பிரவாகமும் இன்றி ஓடிக்கொண்டிருப்பதைக் காணலாம். மழை கதையிலும் தொகுப்பிலுள்ள ஏனைய கதைகளிலும் நின்று நிதானித்து புரிந்து கொள்ள வேண்டிய சில விடயங்களும் மொழிப் பிரயோகங்களும் - மொழி மிகச் சாதாரணமாக இருந்தாலும் கூட - பரவலாகக் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இவ்வகையான மொழியும் கதை கூறல் பண்பும் கலாமோகனை உயரத்தில் கொண்டு இருத்தியிருப்பதையும் தேர்ந்த வாசக எழுத்தாளர்கள், விமர்சகர்கள் அவர் கதைகள் பற்றிக் கூறியிருப்பதிலிருந்து அறிய முடிகிறது. (உதாரணத்திற்கு சாருநிவேதிதா எக்ஸிலில் வந்த வெளிச்சம் கதையை வாசித்ததன் பின்னர் அந்த எழுத்துக்களை மிகச் சிலாகித்து கூறியிருப்பதுடன், அவ்வாறான எழுத்துக்களை ஆங்கிலத்தில் தான் வாசித்த சில படைப்பாளிகளின் எழுத்துக்களுடன் புகழ்ந்து ஆசீர்வதித்துள்ளார்.) நான் குறிப்பிட்டதற்கு ஓர் உதாரணமாய் மழை கதையில் வரும் கிழவன் - கிழவி பாத்திரங்களைக் கூறலாம். இன்னொரு வகையில் பார்த்தால் அந்தக் கதையின் உயிர்ப்பே அந்தப் பாத்திரங்களிலும், கிழவி கிழவனைப் பார்த்து "ஏன்டா, உந்த மழையுக்க நிண்டு நனைஞ்சு கொண்டிருக்கிறாய்? உள்ளுக்கை வந்து முதல்லை தலையைத்துடை" என்று சொல்வதிலும் வெளிப்படுகிறதாய்ப் படுகிறது எனக்கு.

கலாமோகனின் கதைகள் பாலியல் சார்ந்த குற்றங்களுக்கு இலக்காவதுண்டு. அவரின் பெரும்பாலான கதைகள் ஆண், பெண் உறவு நிலைகளை எந்தச் சட்டகங்களுக்குள்ளும் நில்லாமல் வெளிப்படையாக இயல்பாகவே பேசிவிடுகிறது. இத்தொகுப்பிலுள்ள கதைகளிலும் கூட பல்வேறு விதமான பெண்கள் பல்வேறு விதமான உறவு நிலைகளிலே வந்து போகிறார்கள். இவர் பேசும் பாலியல் அம்சங்கள் பொதுவாகவும், புலம்பெயர் வாழ்வில் குறிப்பாகவும் மிகச் சாதாரணமான விடயமாக இருக்கலாம். ஆனால், இவை கலாமோகனுக்கு ஒரு படைப்புக்குரிய அம்சமாக ஏன் மாறுகிறதெனில், அவை ஒவ்வொன்றின் பின்னாலும் இழையோடுகிற படைப்பாளியை, கலைஞனை தன்னுள் இழுத்துக் கொள்கிற மெலிதான மானுட உணர்வுகளாய் இருப்பதை மிக நுணுக்கமாக அவதானிக்கலாம். இருந்தும் நாம் எதிர்பார்க்கிற அல்லது சொல்ல வருகிறதாக நாம் கருதுகிற இவ்வுணர்வுகள் வெறும் பால் ரீதியான சொல்லாடல்களுக்குள் அகப்பட்டுப் போவதையும் காணமுடிகிறது.

உதாரணத்திற்கு "இரா" என்ற கதையில் ஒரு "கள்ள" உறவு (கனியிலும் தான்) சித்திரிக்கப்படுகிறது. உண்மையில் அதை நாம் ஒரு பெண்ணின் கணவனுடனான பாலியல் அதிருப்தியின் வெளிப்பாடாக கருத இடமுண்டு. ஏன் கருதலாம். ஆனால், அக்கதையில் மிகையாகச் சொல்லப்படும் வர்ணணைகளும், பாலியல் பேச்சுக்களும் அப்படியொரு பார்வையை வாசகனிலிருந்து தடுத்து விடுகின்றன. பிறகு அது செக்ஸ் என்று சொல்லக்கூடிய மேலோட்டப் பார்வைக்கு வாசகனை இட்டுப் போய் விடுகிறது. சிலவேளை கலாமோகன் சமூகத்துள் மறைந்து கிடக்கிற, நிகழ்கிற கள்ள உறவுகளை எந்தப் பூச்சுக்களுமின்றி சொல்ல வந்திருக்கிறார் என்று கருதவும் இடமுண்டு. எல்லாம் பிரதி மீதான வாசிப்பில் தான் உள்ளது.

இப்படியான கதைகள் வாசகர் தளத்தில் அவரவர் இருப்புக்கேற்ப அபிப்பிராயங்களையும் பெறக்கூடும். "கற்பொழுக்கம்" நிறைந்த வாசகர்களுக்கு இவரின் கதைகள் ஆபாசமாகப்படுகிற அதேநேரம். அப்படியல்லாத வாசகர்களுக்கு "அட இது நம்ம கதை" என்ற நெருக்கத்தையும் கொடுக்கலாம். அவ்வாறே பெண்ணியர்களுக்கு, பெண்களை வெறும் பாலியல் பண்டங்களாகவே காட்டுகிற ஒரு வகை ஆணாதிக்கப் போக்குக் கொண்ட கதைகளாகப் படலாம். (அப்படியெல்லாம் யாருக்கும் படவில்லையென்பது ஆச்சரியமான உண்மை. கதைகளில் ஆங்காங்கே விரவிக் கிடக்கும் பெண்கள் மீதான அனுதாபம் அவர்களைத் தடுத்து விட்டிருக்கலாம். அத்துடன் இன்னொன்று "வேலி பாய்கிற" விடயங்களில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமத்துவம், சுதந்திரம், உரிமை எல்லாம் கொடுத்திருக்கிறார்!) கனி போன்ற கதை தமக்கேற்ப வியாக்கியானப்படுத்தப்பட்டு புண்படுத்தக் கூடிய கதைகளாக கிறிஸ்தவர்களுக்குப் படலாம்.

ஜி.நாகராஜன் எப்படி பாலியல் தொழிலாளப் பெண்களின் கதைகளை அனுபவத்தோடு வெளிக் கொணர்ந்தாரோ அது மாதிரி கலாமோகனும் சில கதைகளில் அவர்களை அக்கறையோடு வெளிக்கொணர்கிறார். அம்பிகா, ராணித் தியேட்டர்க்காரி, கண்ணாடிக் கூண்டுக்கிளிகள் என இவர்கள் வெவ்வேறு கதைகளில் அனுதாபத்திற்குள்ளான பாத்திரங்களாக வந்து போகிறார்கள்.

ஈரம் கதை கலாமோகன் எதிர்கொள்கிற விமர்சனங்களையிட்டான ஒரு சுய பார்வை போல் தெரிகிறது தானே? அந்தக் கதையில் அவர் இப்படிச் சொல்கிறார் - "இந்தக் கதை சில பாலியல் பிரச்சினைகளை உள்ளடக்கிய கதை தான். இது போன்ற கதைகளைப் பிரசுரிப்பதில் பத்திரிகைகள் தயக்கம் காட்டுவதையும் நானறிவேன். இந்தக் கதை உண்மையிலேயே உங்களுக்குப் பிரச்சினையாகப்படின் பிரசுரிக்க வேண்டாம்". இதில் அவர் குறிப்பிடுகிற பாலியல் பிரச்சினைகள் பிரச்சினைகளாகக் காட்டப்படாமல், அதை ஒதுக்கியவாறு அல்லது மிகைத்தவாறு வேறு வடிவம் கொள்வது அவதானிக்கத்தக்கது. இதுதான் விமர்சகனங்கள் அவரை நோக்கி வரக் காரணமாகவும் இருக்கக்கூடும். என்னுடைய அபிப்பிராயப்படி, அவர் பிரச்சினைகளாகச் சொல்வதை பிரச்சினைகளாக அணுகவில்லை. மற்றப்படிக்கு அந்தக் கதை ஒரு சுய விமர்சனப் பார்வையாக, வாசகர் பற்றிய விமர்சனமாக, வெளியீட்டாளர் பற்றிய விமர்சனமாக என பல்வேறு கோணங்களில் விரிவு கொள்கிறது. அந்தக் கதை தொகுப்பின் கடைசியில் இருந்திருந்தால் சிலருக்கு அவர் கதைகளில் ஏற்படும் வெறுப்பை, கோபத்தைத் தணிக்கச் செய்திருக்கும்.

போ கெதியாய் போய் உன் கழுத்திலிருந்து வடிகிற இரத்தத்தைத் துடை...

நன்றி - நூலகத்திட்டம்



# வேர்களை இனங்கண்டு கிளைவிடும் தமிழரங்கு

## கிழக்குப் பல்கலைக்கழக உலக நாடகதின விழாவூடு ஓர் பார்வை

(இறுதிப்பகுதி)

விழாவிற்கு ஓர் புதிய அறிமுகமாக இம்முறை ஓர் சிங்கள நாடகமும் மேடையேறியது. விழாவில் சிங்கள நாடகங்கள் தொடர்பான ஓர் புகைப்படக் கண்காட்சியை நிகழ்த்த வந்திருந்த சிங்கள நாடக நண்பர்கள் ஒருநாள் முயற்சியில் திடீரென ஓர் நாடகத்தைத் தயாரித்து மேடையேற்றினார். கணவன், மனைவி இடையேயான உறவின் விரிசல் தொடர்பான ஓர் எளிய கரு அழகாக நாடகமாக்கப்பட்டிருந்தது. ஒரு நாள் ஒத்திகையில் உருவாக்கப்பட்டிருந்த போதும், உரையாடல், நடிப்பு, மேடையசைவுகள், யாவும் வெகுநேர்த்தியாக இருந்தது. முக்கியமாக, பெண்பாத்திரமேற்ற சமீலாவின் நடிப்பு அனைவரையும் ஈர்த்தது.

அரங்க ஆற்றுகைகள் ஒரு புறம் நிகழ்ந்துகொண்டிருக்க, ஐந்து நாட்களும் பார்க்கக்கூடியதாக அரங்கக் கண்காட்சியும் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. நுண்கலைத் துறையினரால் ஒழுங்கமைக்கப்பட்ட இக் கண்காட்சியில், அரங்க வரலாற்றின் ஒவ்வோர் காலகட்டத்தினதும் அரங்கக் கட்டட அமைப்புக்களும், அவ்வவ்காலகட்ட அரங்கு தொடர்பான தகவல்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. விரிவுரையாளர் பாலசுகுமார், மாணவர்களைக் கொண்டு இதனை அழகாக ஒழுங்கமைத்திருந்தார்.

மற்றோர் பகுதியில், சிங்கள நாடகங்கள் தொடர்பான புகைப்படக் கண்காட்சி இடம்பெற்றது. உதாணி அல்விஸ் என்ற சிங்கள நாடக, புகைப்படக்கலைஞரால் அவை படம்பிடிக்கப்பட்டிருந்தன. புகைப்படங்கள், பல சிங்கள நாடகங்களையும் அறிமுகப்படுத்திய அதேவேளை, நாடகங்கள் எவ்வாறு படம்பிடிக்கப்படவேண்டும் என்பதையும் விளக்குவனவாக இருந்தன. உதாணி ஓர் நாடகக் கலைஞராகவுமிருப்பதால், Dramatre Sense உடன் அவரால் அவற்றை நிழற்படுத்த முடிந்திருக்கிறது.

சாதனையாளர்களை அவர்கள் வாழும்காலத்திலேயே கௌரவிக்க வேண்டியது மிக அவசியமானது. இவ்வகையில் ஐந்தாம்நாள் விழாவில் இடம்பெற்ற 'தலைக்கோல்' பட்டமளிப்பு வைபவமும், தமிழரங்குக்கு அவசியமான ஓர் மீள்கண்டுபிடிப்பாகிறது. சங்கமருவியகாலத்து 'தலைக்கோல்" மரபு அதன் அதிகார முக்கியத்துவத்துக்காகவன்றி, அரங்க ரீதியில் இன்றும் பொருத்தமான ஒன்று.

பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இருவருள், பிரான்சிஸ் ஜெனம் அவர்கள் ஈழத்தின் தலைசிறந்த ஓர் நடிகர். ஈழத்தமிழரங்க வரலாற்றில் கலையரசு சொர்ணலிங்கம் முதல்; குழந்தை ம. சண்முகலிங்கம், சி. மௌனகுரு, க. சிதம்பரநாதன் வரை பல அரங்கியலாளருடனும் பணியாற்றிய அனுபவமும், சிறுவயதுமுதலே கூத்துப்பயில்விலீடுபட்ட அனுபவமும் கொண்ட ஓர் 'சங்கமம்' இவர்.

மற்றையவர் நாகமணிப்போடி அண்ணாவியார். பாரம்பரியக் கூத்து மரபின் விற்பன்னர். மத்தியதரவர்க்கத்தினரிடையே கூத்துமரபின் மீள்பயில்வு முயற்சியிலும் பெரும்பங்காற்றியவர். இவர்களுக்கு உரிய கௌரவத்தை அளித்ததன் மூலம் பல்கலைக்கழகம் தனக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறது.

விழாவின் ஆறாம் நாள் - இறுதி நிகழ்வாக '21ம் நூற்றாண்டில் ஈழத்துத் தமிழரங்கு எதிர்கொள்ளும் சவால்கள்' எனும் தலைப்பிலான கருத்தரங்கு மட்டு. பிரதேச செயலக BIRPP மண்டபத்தில் நடைபெற்றது. மரபுவழி அரங்கு, யதார்த்த அரங்கு, பெண்ணிய அரங்கு என பல அரங்க வடிவங்களும் எதிர்நோக்கும் சவால்கள் பற்றி ஒவ்வொருவர் உரை நிகழ்த்தினர்.

## அரங்க வடிவங்களும் எதிர்நோக்கும் சவால்களும்



மரபுவழி அரங்கு எதிர்நோக்கும் சவால்கள் பற்றிப் பேசிய விரிவுரையாளர் பாலசுகுமார், கூத்துச் சிதைந்து போயுள்ளது. அதன் ஆடல், பாடல், ஒப்பனை அழகு என்பன சீர்கெட்டுவிட்டன. இவற்றைச் சீர்ப்படுத்தி உண்மையான கூத்தைக் கண்டு பிடிக்க வேண்டும் என்றார். இச்சீர்ப்படுத்தல், பாரம்பரிய அரங்கூடு புதிய உள்ளடக்கங்கள் வெளிப்படுத்தப்படல், நவீன நாடகங்களுள் மரபுவழி அரங்க முறைமைகளைப் பயன்படுத்தல் போன்ற பல வழிகளை கூத்தின் தொடர்ச்சியான பயில்வுக்கு எடுத்துரைத்த பாலசுகுமார், ஈற்றில் தமிழ் நாட்டின் கூத்துப்பட்டறை போன்ற நிறுவனமயப்பட்ட வளர்ச்சி இதற்கு அவசியம் என்பதை வலியுறுத்தினார்.

உண்மை தான், பேராசிரியர் வித்தியானந்தன் காலம் முதல் இத்தகைய ஆலோசனைகள் கூத்தரங்கு தொடர்பில் முன்வைக்கப்பட்டு வருகின்றன. பேராசிரியர் வித்தியானந்தன் வரலாற்றில் முக்கியமான ஓர் பணியைச் செய்து பாதை காட்டிச் சென்றுள்ளார். அதன் தொடர்ச்சியாக பேராசிரியர் மௌனகுரு, தாசீஸியஸ் போன்றோர் நிறையவே செய்தனர். ஆயினும், பேராசிரியர் மௌனகுருவின் சங்காரத்துக்குப் பின்னர் ஓர் நீண்ட இடைவெளி இன்று மீண்டும் 60களில் பேசப்பட்ட விடயங்கள் மீளவும் ஒப்புவிக்கப்படும் நிலை. இது எதனைச் சுட்டுகிறது? தேவை தொடர்ச்சியான பயில்வே. சி. ஜெயசங்கரின் "நவீன பஸ்மாசுரன்" நல்ல ஆரம்பம். பேராசிரியர் மௌனகுருவுக்கு ஏற்பட்ட சுகவீனம் காரணமாக இடையில் தடைப்பட்டுள்ள அவரது இராவணேசன் விரைவில் அரங்கேறவேண்டும். கூத்தரங்கு தொடர்பில் தமிழ்ச் சமூகம் அவரிடம் நிறைய எதிர்பார்க்கிறது.

யதார்த்த அரங்கு பற்றிய விரிவுரையாளர் சி. ஜெயசங்கரின் பேச்சு இன்றும் அரங்கில் அதன் இருப்பு, தேவையை விளக்கியது. எதிர்ப்புக்களை உள்வாங்கி அது Modified Realism ஆக வளர்ந்ததையும் Forum Theatre, Invisible Theatre என்பவற்றுள்ளும் அதன் நீட்சி இருப்பதையும் அவர் விளக்கினார்.

ஒரு காலத்தில் தோன்றிய எதுவும் அப்படியே தொடர்ந்து வாழ்வதில்லை. புதிய காலம், அதன் தேவைகளுக்கு முகம் கொடுத்து, அது தன்னைப் புதிதுபுதிதாய் வடிவமைத்துக் கொள்ளும், அது தோன்றிய காலத்து, (உண்மையில் 'தோன்றிய' என்பதைவிட, 'பிரக்ஞைபூர்வமாக அறியப்பட்ட' என்பதே பொருத்தமானது.) வடிவத்தை என்றென்றைக்கும் எதிர்பார்ப்பது வரலாற்று வளர்ச்சியைப் புரிந்துகொள்ளாததாகிவிடும். (மரபு வழி அரங்கு பற்றிய சிந்தனைகளுக்கும் இது பொருந்தும்.) இந்த அடிப்படையிலேயே, யதார்த்த அரங்கு ஆரம்பத்தில் செயற்பட்ட படச்சட்ட அரங்கு, இன்று மாற்றியமைக்கப்பட வேண்டியது, அதன் தொடர்ச்சியான இருப்புக்கும், ' செயல்பாட்டுக்கும் அவசியமாகிறது என்ற ஜெயசங்கரின் கருத்தும் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.



யதார்த்த அரங்கின் போதாமையால் யதார்த்த எதிர் அரங்கு தோன்றியது எனும் கருத்தை யாழ், பல்கலைக்கழக, வவுனியா வளாக விரிவுரையாளர். க. ஸ்ரீ கணேசன் முன்வைத்தார். யதார்த்தவாத அரங்கு மத்திய வர்க்க மக்களது பிரச்சினையைப் பேச, யதார்த்த எதிர் அரங்கு ஒடுக்கப்பட்ட, விளிம்புநிலை மக்களின் பிரச்சினையைப் பேச எழுந்தது. இவை எதிர்ப்புக் குணாம்சங் கொண்டவை (Resistance Theatre) என்றார் அவர்.

யதார்த்தவாதம், எதிர் யதார்த்தவாதம் எனும் கோட்பாடுகள் ஒவ்வோர் காலகட்டத்தின் சமூகத் தேவைகளால், அவ்வக்காலகட்டத்திலே முதன்மை பெற்றிருந்தன. இன்று இவற்றிடையே திட்டவட்டமான பிரிப்புகளை இனங்காணமுடியாது. அரங்கின் தேவையைப் பொருத்து இவ்விருஇயல்புகளுமே வேறுபட்ட விகிதாசாரத்தில் இடம்பெற்றுவருகின்றன. சில வடிவவேறுபாடுகளும், சமூகப்பெறுமானங்களுமே அரங்கை வகை பிரித்தினங் காட்டுகின்றனவே தவிர, சாராம்சத்தில் அரங்க அனுபவம் என்பது ஒன்றே.

பெண்ணிய அரங்கு பற்றிப் பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு உரை நிகழ்த்தினார். பெண்ணிய அரங்கு விடயம் சார்ந்தது மட்டுமா? அதன் அரசியல் நோக்கம். காரணமாகப் புதிய முறைமைகளை அது கண்டு பிடிக்க வேண்டும் என்ற கருத்துக்களை முன்வைத்துப் பேசிய அவர், 21ம் நூற்றாண்டின் சவால்களைப் பற்றிப் பேசும் நாம் 20ம் நூற்றாண்டில் நாமெதிர்கொண்ட சவால்களை வெற்றி கொண்டு விட்டோமா? என்ற கேள்வியை எழுப்பினார்.

ஆம், 21ம் நூற்றாண்டு என்பது என்ன? கவிஞர் கூறியது போல 'நாளை மற்றுமொரு நாளே' திகதிகள் புதிய பிரச்சினைகள் எதனையும் முன்வைப்பதில்லை. அவை நடைமுறைச் செயற்பாடுகளின் போது எழுபவை. செயல்ரீதியாக எதிர்கொள்ளப்படவும் வேண்டியவை.



மறைந்து நிற்கும் அரங்க முயற்சியொன்றில் ஈடுபட்ட போது தான் பெற்ற அனுபவங்களூடு, அவ்வரங்கு பற்றிப் பேசினார் வாசுகி ஜெயசங்கர். ஏதோவோர் வகையில் சமூகத்தால் வஞ்சிக்கப்பட்டு, இன்று அபலைகளாக மட்டுநகர் வீதிகளில் அலையும் பெண்களின் பிரச்சினையை இவர் மறைந்துநிற்கும் அரங்கூடு வெளிப்படுத்தியதாகக் கூறினார். இவர் இணைந்து செயற்படும் சூரியா கலாசாரக்குழு களச் செயற்பாடுகளில் ஈடுபடும் ஒன்றாதால் மறைந்து நிற்கும் அரங்கைக் கையாளும் பொறுப்புணர்வும் தகுதியும் அவர்களுக்குண்டு. ஏனெனில், இங்கு பிரச்சினைகளை எறிந்து விட்டு நழுவிட முடியாது. தொடர்ந்த செயற்பாடு அவசியமானது.

மறைந்து நிற்கும் அரங்க ஆற்றுகை முடிய, நிகழ்ந்தது நாடகம் எனக் கூறப்பட வேண்டுமா? வெளிப்படுத்தினால் அதே குழுவினர் மீண்டும் அத்தகைய ஆற்றுகைகளில் ஈடுபடுவதிலுள்ள சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது என்ற கேள்விகளை அவர் முன்வைத்தார். மக்களைத் தேடிச் சென்று செயற்படக்கூடிய வீதிநாடக அரங்குபற்றி வெ. தவராஜா உரை நிகழ்த்தினார். அரங்கு தொடர்பான ஆர்வம், பிரக்ஞை இல்லாதவர்களை அரங்க அனுபவத்துள் கொண்டு வருவதிலும் பரந்துபட்ட பார்வையாளர் மத்தியில் செய்திகளைப் பரப்புவதில் இதற்குள்ள ஆற்றல் பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

புரொசீனிய அரங்கு தொடர்பான இரா. அன்புமணியின் உரையில், மட்டக்களப்புப் புரொசீனிய அரங்க செயற்பாடுகளும், பொருளாதார ரீதியிலான காரணங்களால் அது இன்று எதிர்நோக்கும் சிக்கல்களும் விளக்கப்பட்டது. அரங்கு தொழில்முறைசார்ந்த ஒன்றானாலே அதன் பன்முகப்பட்ட வளர்ச்சி சாத்தியமாகும். ஆயின், அன்புமணி குறிப்பிட்டது போல காசுகொடுத்து நாடகம் பார்க்கத் தயாரில்லாத பார்வையாளரின் மனநிலை இதற்குப் பெரும் முட்டுக்கட்டையே. இதை எவ்வாறு எதிர் கொள்ளப் போகிறோம் என்பதிலேயே தமிழரங்கின் எதிர்காலம் தங்கியுள்ளது.

தொகுத்த நோக்கில் அரங்க ஆற்றுகைகள், கண்காட்சி, கருத்தரங்கு எனப் பல்பரிமாணங்களில் நிகழ்த்தப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உலக நாடகதினவிழா, ஈழத்துத் தமிழரங்க வளர்ச்சிக்கு வலுச்சேர்க்கும் ஒன்று. பாரம்பாரிய முறையிலான அலங்காரங்கள், பண்பாட்டு இசையணி, மட்டக்களப்புக்கு வெளியேயுள்ள சில அரங்க ஆற்றுகைகள், புதிய கூத்து முயற்சிகள் என இவ்விழா சென்ற தடவையைவிட தன்னளவிலும் வளர்ச்சி பெற்றுள்ளது. அடுத்தடுத்த நாடக விழாக்களில் நாம் இன்னும் நிறையவே எதிர்பார்க்கலாம்.

விழாவைத் திட்டமிட்டு, ஒழுங்கமைத்து நடாத்திவரும் நுண்கலைத்துறைத் தலைவர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் யாவரினதும் கூட்டுழைப்பு வெகுவாகப் பாராட்டப்பட வேண்டியது.

ருஷாங்கன்

நன்றி - நூலகத்திட்டம்



# சமாதான ஒப்பந்தம் அல்ல சா ஒப்பந்தம்

> “ சிந்தனையாளர்கள், கலைஞர்கள், கல்விமான்களின் சமூகப்பங்கு என்ன? என்ற கேள்வியை அடிக்கடி எழுப்புவதுடன் 'பிழை காணில் பொறாத உள்ளம்' உடையவராகவும், 'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்று நின்று பிடிக்கிற மனத்திடம் வாய்த்தவராகவும் எழுத்தாளர்களும் சிந்தனையாளர்களும் இருக்க வேண்டும்' என்று பல இடங்களில் ஸையிட் வலியுறுத்துகிறார். ”

இலக்கிய விமர்சகரும், பலஸ்தீனியரும், பலஸ்தீன மக்களின் விடுதலைக்காக நீண்ட காலமாகப் போராடி வந்தவருமான எட்வேட் ஸையிட்டினுடைய புதிய நூலொன்று வெளிவந்துள்ளது. இஸ்ரேலுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே நோர்வேயின் நடுவத்துக் கூடாகக் கையெழுத்திடப்பட்ட 'சமாதான ஒப்பந்தம்' பற்றியதே நூல். THE END OF THE PEACE PROCESS: OSLO AND AFTER என்பது நூலின் தலைப்பு.

1993ம் ஆண்டு இஸ்ரேலிய, பலஸ்தீன அரசியல்வாதிகளும் அலுவலர்களும் நோர்வேயில் ரகசியமாகச் சந்தித்திருந்திருந்தனர். அந்தச் சந்திப்பின் ஒரு இறுதி விளைவாக உருவானது தான் இஸ்ரேலிய - பலஸ்தீன 'காணித்துண்டு' பகிர்ந்து கொள்ளல் தொடர்பான ஒப்பந்தம். இந்த ஒப்பந்த காலத்தில் திடீரென்று நோர்வேஜிய அரசு கவிழ்ந்து விட்டது. எனினும், பின்னர் வந்த புதிய அரசு ஒப்பந்தத்தை நிறைவேற்றவும் 'முன்' கொண்டு செல்லவும் பங்காற்றியிருந்தது.

ஆரம்பத்திலிருந்தே எட்வேட் ஸையிட் இந்த ஒப்பந்தத்தை தீவிரமாக விமர்சித்து வந்திருக்கிறார். அவருடைய விமர்சனத்துக்கு முக்கியமான காரணங்களில் ஒன்று, பலஸ்தீனியர்களுக்கும், இஸ்ரேலியர்களுக்கும் இடையிலான சமத்துவ அடிப்படையிலான ஒப்பந்தம் அல்ல இது என்பதே. ஆனால், அமெரிக்காவினதும், இஸ்ரேலினதும் ஆதிக்கத்திற்கும் அவர்களுடைய அபிலாசைகளை நிறைவேற்றுவதற்குமாகவே இந்த ஒப்பந்தம் வழி செய்கிறது என்பதும், அரஃபாத் தலைமையிலான பலஸ்தீன விடுதலை இயக்கம் ஆற்றாமையாலும் களைத்துப் போயுமே இவ்வொப்பந்தத்துக்கு உடன்பட்டிருக்கிறது என்பதும், எனவே இது பலஸ்தீன மக்களுக்குச் சம உரிமை வழங்காதென்பதும் ஸையிட்டினது வாதம்.

ஒப்பந்தத்தின் பிற்பாடும் இஸ்ரேல், பலஸ்தீன மக்களை விரட்டியடிப்பதை நிறுத்தி விடவில்லை. ஆக்கிரமித்திருக்கும் நிலங்களில் புதிய யூதக் குடியேற்றங்களை நிறுவுவதையும் நிறுத்தவில்லை. உண்மையில் இப்போதைய இஸ்ரேலிய அதிபர் எஹுட் பறக் அவருக்கு முன்பாகத் தீவிர வலதுசாரி ஸியோனிஸ்ட் என்று அழைக்கப்பட்ட பெஞ்சமின் நத்தன்யாகூ, மூன்று வருடங்களில் கட்டியெழுப்ப முற்பட்ட குடியேற்றங்களை ஒரு மாதத்தில் முடித்து விட்டிருக்கிறார்.

இஸ்ரேலும் பலஸ்தீனமும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகிற போது அது அசமத்துவ நிலையிலேயே நிகழ்கிறது என்று ஸையிட் கூறுவது சரியானது தான். இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் பலமான நிலையில் இருக்கிறது இஸ்ரேல். எனவே தான் 1995ம் ஆண்டு ஷிமோன் பெரஸ், (முன்னாள் இஸ்ரேலிய அதிபர்) பின்வருமாறு குறிப்பிட்டார்.

"உண்மையான பேச்சுவார்த்தைகள் என்பன இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் நடைபெறுவன அல்ல. மாறாக, காணித் துண்டில் எந்த அளவை, எந்தத் துண்டை, எப்போது, எப்படிக் கொடுப்பது என்பது பற்றி இஸ்ரேலியர் தமக்குள் பேசுவது தான் பேச்சுவார்த்தை."

தோற்றுப் போய்ப் பலவீனமாக இருக்கிற பலஸ்தீனியர்களுக்கு எதுவுமே செய்ய முடியாத நிலை. இந்த நிலைக்கு அரஃபாத்தும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் கணிசமான அளவுக்குப் பொறுப்பு என்பதை ஸையிட் ஆதாரங்களுடன் விளக்குகிறார்.

பலஸ்தீனியர்களுக்குத் திருப்பியளிக்கப்பட்டு வரும் நிலங்களும் மிகச் சிறு அளவில் தான் எனவும், பெருமளவுக்கு வனாந்தரத் துண்டுகள் தான் எனவும் ஸையிட் நிறுவுகிறார். இந்த அம்சத்தை மைய நீரோட்ட அமெரிக்க, ஐரோப்பிய தொடர்பு ஊடகங்கள் மறைத்து விட்டு இஸ்ரேல் உடன்படிக்கையை நிறைவேற்றி வருவதாக எழுதுகின்றன. மூன்று வீத நிலம், நான்கு வீத நிலம் என்று புள்ளி விவரங்களைத் தருகிற போது இன்னும் எழுபது வீதத்துக்கும் அதிகமான நிலம் இஸ்ரேலின் கரங்களில் இருப்பதைப் பற்றி அவை எழுதுவதில்லை என்று ஸையிட் விளக்குகிறார்.

"அநாதரவான அகதி நிலை ஒன்றை உருவாக்கி விட்டு அதனைச் சமாதானம்" என்று இவர்கள் அழைக்கிறார்கள் என்று குமுகிறார் ஸையிட். இன்றைய அமெரிக்க இஸ்ரேலிய கூட்டுக் கொள்கையைப் பற்றி எழுதுகிற போது, "எங்களுடைய வரலாற்றையும் நினைவுகளையும் அழித்து விடுவது தான் அவர்களது முதல் இலக்கு. இதன் பிற்பாடு எங்களுக்கு இரண்டு தெரிவுகள் தான் இருக்க முடியும். ஒன்று அவர்களிடம் பணிவது, சரணடைவது. மற்றது எல்லாவற்றையும் இழந்து போரிடுவது. அப்போது எங்களுக்கு மிஞ்சப்போவது அவர்கள் எங்களுக்கு சூட்டப் போகிற 'பயங்கரவாத - அடிப்படைவாத' அடையாளம் மட்டும் தான்".

இந்த நூலில் இடம் பெற்றிருக்கிற கட்டுரைகள் ஏற்கெனவே சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் இடம்பெற்றவை தான். எனினும் ஒன்று சேர்த்து வாசிக்கிற போது இவை ஸைட்டின் பலமான எழுத்துக்கும் தீவிரமான கடப்பாட்டு உணர்வுக்கும் சலியாத உழைப்புக்கும் விட்டுக் கொடுக்காத தார்மீக நிலைப்பாட்டுக்கும் மேலும் வளம் சேர்க்கின்றன. Jean Paul Sartre தனது கட்டுரைகளில் குறிப்பிடுகின்ற homme engage கடப்பாடுடைய மானிடன் - என்பதற்கு ஸையிட் அரசியல், இலக்கிய, கலைத்தளங்களில் ஒரு சிறப்பான உதாரணம். "சிந்தனையாளர்கள், கலைஞர்கள், கல்விமான்களின் சமூகப் பங்கு என்ன? என்ற கேள்வியை அடிக்கடி எழுப்புவதுடன் 'பிழை காணில் பொறாத உள்ளம்' உடையவராகவும், 'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்று நின்று பிடிக்கிற மனத்திடம் வாய்த்தவராகவும் எழுத்தாளர்களும் சிந்தனையாளர்களும் இருக்க வேண்டும்" என்று பல இடங்களில் ஸையிட் வலியுறுத்துகிறார்.

இன்றைய அமெரிக்க இஸ்ரேலியச் சூழலில் Noam Chomsky போன்ற ஓரிருவரைத் தவிர்த்தால் பெரும் வெற்றிடம் தான் என்பது ஸைட்டினுடைய அங்கலாய்ப்பு.

எனினும் ஸையிட்டினுடைய தார்மீகக் கோபத்துக்கு, இந்த நூலில் பிரதானமாக ஆளாகியிருப்பவர்கள்:

* ஊழல் பெருச்சாளியாகவும் ஜனநாயக வழிமுறைகளை மதிக்காதவரும் குட்டிச் சர்வாதிகாரியாக மாறிப்போன யஸீர் அரஃபாத்.

* விட்டுக்கொடாத முரட்டுப் பிடிவாதமும் அகங்காரமும் ஆக்கிரமிப்பு மனோநிலையும் கொண்ட இஸ்ரேலிய அரசியல் கட்சிகள், லிக்குட் கட்சி, தொழிற் கட்சி.

* கபடமும் சூதும் நிறைந்த அமெரிக்க அரசினர்: அலுவலர்.

* உண்மையும் யதார்த்தமும் அறியாத அல்லது அறிந்தும் அதை எழுத / படம் பிடிக்க மறுக்கிற / முடியாத பத்திரிகையாளர்கள்.

வனாந்தரத்தில் திசை கெட்டு அலைகிற பலஸ்தீனியர்களுக்கு ஸையிட் வழங்குகிற தீர்வு தான் என்ன? யூதர்களும் பலஸ்தீனியர்களும் தமது 'தேசிய' கனவுகளை விட்டுவிட வேண்டும் என்கிறார்.

இப்படி விட்டுவிடுவதன் மூலம் மட்டுமே அவர்களிருவரும் ஒரே நிலத்தில், ஆனால், சமத்துவமான ஒரு இரு தேசிய நாட்டில் (bi-national country) வாழ முடியும் என்று ஸையிட் கருதுகிறார். இப்போதுள்ள இஸ்ரேலும் பலஸ்தீனியர்களுடைய பலஸ்தீனமும் இத்தகையதொரு இரு தேசிய நாடாக மாற்றப்பட வேண்டும் என்பது அவருடைய கருத்து. உண்மையான சமத்துவம் இத்தகையதொரு தீர்வுக்கூடாகவே வரமுடியும் என்பதும் இத்தீர்வு தவிர்ந்த ஏனையவை அழிவிலும், அநியாயத்தின் தொடர்ச்சியிலும் தான் முடியும் என்று ஸையிட் எழுதுகிறார்.

இது ஒரு கனவு என்று தான் தோன்றுகிறது. எனினும் நல்ல கனவு. நடைமுறை யதார்த்தங்கள் எப்படியிருப்பினும் தனது சிந்தனையை - அது utopia வாக இருந்தாலும் - முன்வைப்பதும் அதற்காகப் பாடுபடுவதும் தான் homme engage ஒருவரின் கடமை. அந்த வகையில் வேறு பல அரபு, யூதப் புத்திமான்கள், கல்விமான்களுக்கு இல்லாத பலம் ஸையிட்டுக்கு உண்டு.

OUT OF PLACE என்னும் தன்னுடைய நினைவுக் குறிப்பு நூலில் இவர் எழுதிய ஒரு விஷயம் மறக்க முடியாதது. பயங்கரமான அழிவுகளாலும் இனப்படுகொலையாலும் பாதிக்கப்பட்ட யூத மக்களின் அரசான இஸ்ரேல் தான் என்னையும் அகதியாக்கிற்று!


பாதிக்கப்பட்டவர்களால் பாதிக்கப்படுவதைவிட வேறென்ன துன்பம் அதிகமான உள, உடல், தார்மீக வலியைத் தரமுடியும்?

-காமன்-வசந்தன்-குளிர்நாடன்-

நன்றி: உயிர்நிழல்

# அலியும் அப்புவும்

## விசிலடிச்சான் குஞ்சுகளும்!




இந்தியப்படை யாழ்ப்பாணத்திலிருந்த காலம். இந்தியப்படை ட்ரக்குகளின் டீசல் புகையும், நெய்யும் நாசியைத் துளைக்கும். கொண்டையை உயர்த்தி உச்சியில் கட்டிய ஜாம்பவான்கள். 'Yes LTTE Yes Problum, No LTTE No Problum' என்று தெருவில் சைக்கிளை மறித்து மிரட்டும் ஜாம்பவான்கள். துப்பாக்கிகளைக் காவியபடி எமது வாழைத் தோட்டங்களுக்குள்ளாலும், வீட்டின் கோடிக்குள்ளாலும் கிடுகுவேலிகளைப் பிரித்து அத்துமீறி வலம்வரும் ஜாம்பவான்கள்.

அப்படி வலம் வந்த ஜாம்பவான்கள் ஒரு நாள் கிறிஸ்ரினைக் கதறக் கதறத் தூக்கிக் கொண்டு போனார்கள்.

கிற்ஸ்ரினைப் பற்றியும் கொஞ்சம் சொல்ல வேண்டும். நீளக் காற்சட்டையும், சேட்டும், தலையில் நீளமாக வளர்ந்த முடியுமாக ஒரு பழைய ரலி சைக்கிளில் திரிவான். பெண்களைப் போல நீளமாக நகங்கள் வளர்த்து நகப்பூச்சுப் பூசியிருப்பான். உதட்டுக்குச் சாயமும் பூசுவான். இரண்டு காதுகளிலும் தோடு. கைகளில் றப்பர்க் காப்புகள் கலர் கலராகவிருக்கும். அலங்காரம் பெருமளவில் பெண்களைப் போலவே இருக்கும். பேசுவதும் பாவனையும் கூட பெண்களைப் போலத்தான். அவனிடம் ஒரு வித பெண்மை இருந்தது என்றும் சொல்லலாம்.

கிறிஸ்ரின் எங்கள் கிராமத்தின் பொது விசயங்கள் எல்லாவற்றிலும் முன்னுக்கு நிற்பான். விமானங்கள் குண்டு மழை பொழிந்து சிசிலமான சடலங்களை ஒன்று சேர்த்து அடக்கம் செய்வதிலாகட்டும், மிகுதியான காயம் பட்டவர்களை ஆஸ்பத்திரிக்கு ஏற்றி அனுப்பி வைப்பதிலாகட்டும் அதில் கொல்லப்பட்டவர்களின் இழவு வீடாகட்டும், இவை எல்லாவற்றிலும் கிற்ஸ்ரினின் பங்கு முக்கியமானது. சுடுகாட்டில் வாய்க்கரிசி போடுவதுவரை அவன் நின்று எல்லா வேலைகளையும் செய்வான். எந்தப் பிரதியுபகாரங்களும் இன்றி.

ஆனால், எவ்வளவு தான் இருந்தும் கிறிஸ்ரினை நல்ல விசயங்களில் முன்னுக்கு விட மாட்டார்கள் கிராமத்தவர்கள். ஏன் அவனின் வீட்டாரும் தான் - அலி என்று சொல்லி.

இந்தக் கிறிஸ்ரின் பாடசாலைப் பையன்களால் பெட்டைக் கிறிஸ்ரின் என்றே கிண்டலடிக்கப்பட்டு வந்தான். சமயங்களில் பாடசாலை மாணவர்களிடம் கல்லடிபடுவதும் உண்டு. ஒரு நாள் இவ்வாறு கிறிஸ்டினுக்கு கல்லடித்த மாணவர்கள் எல்லாம் புலிப் பொறுப்பாளரினால் அழைக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டார்கள். பெட்டைக் கிறிஸ்டின் எனக் கிண்டலடிக்கக் கூடாது என்றும் மேரி என்று தான் இனி மேல் அவளை அழைக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார் பொறுப்பாளர். அடிமை குடிமைகளுக்கு என்ன மதிப்பு வேண்டிக் கிடக்கிறது என்று நினைத்தவர்களைத் தவிர அனைவரும் மேரி என்றே அழைத்தனர்.

மேரி இதற்குப் பிறகு மாணவர்களின் எந்த தொந்தரவுமில்லாமல் ஞாயிற்றுக்கிழமைகளில் வெள்ளைச் சாரியுடன் தலைக்கு துப்பட்டியும் அணிந்து சேர்ச்சுக்குப் போய் வருவதை நான் கண்டிருக்கிறேன். நாட்செல்லச் செல்ல பெண்ணாகவே அவன் ஆகி வந்தான். பெண்களின் ஆடைகளையே விரும்பி அணியத் தொடங்கினான்./ள். உடலிலும் பெண்ணுக்குரிய மாற்றங்கள். மார்புகளும் பெண்களுக்கானதைப் போல பருத்து வந்த ஒரு நாளிலே தான் அமைதி காக்க வந்த இந்தியப் படையினர் அனை/ளை தூக்கிக் கொண்டு போயினர்.

இரவு எட்டு மணியாகியும் வீட்டுக்கு வராத மேரியை வீட்டார் தேடியலைந்தனர். இறுதியாக வாழைத் தோட்டத்துள் காயங்களுடன் மேரி கிடக்கக் காணப்பட்டாள். முகத்திலும் மார்பிலும் தொடையிலும் இரத்த வடுக்கள். இந்தியப்படை 'அமைதி' காத்ததில் பட்ட காயங்கள் அவை. அதன் பிறகு மேரி வீட்டை விட்டு வெளியே வருவதேயில்லை.

யுத்தம் எங்களைக் கிராமத்தை விட்டுத் துரத்திற்று. எங்கள் கிராமத்திலிருந்தவர்கள் திக்குத் திக்காக சிதறிப் போனார்கள். அதற்குப் பிறகு இந்த மேரி என்னவானாள் எனத் தெரியவில்லை.

கடந்த வாரம் 'துரதிர்ஷ்டவசமாக' அப்பு படத்தைப் பார்க்க நேர்ந்தது. அப்புவில் ஒரு அலி பாத்திரம். ப்ரகாஷ்ராஜ் அதனை ஏற்று நடித்திருந்தார். திரைப்படத்தில் அந்த அலிக்குத் தொழில் பெண்களை வைத்து விபசார விடுதி நடாத்துவது. அரசியல்வாதிகளுக்கு பெண்களை 'சப்ளை' பண்ணுவது. கிராமப்புறங்களிலிருந்து கடத்தப்பட்டோ அல்லது ஏமாற்றப்பட்டோ அழைத்து வரப்படும் பெண்களை ஏலம் போட்டுப் பணம் சேர்ப்பது. எல்லாவற்றுக்கும் மேலாகத் தனது தொழிலுக்கு இடையூறு ஏற்படுத்தும் எவரையும் தீர்த்துக் கட்டி விடுவது.

எங்களூரில் ரத்தமும் சதையுமாக வாழ்ந்த அலி படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டவள். சமூகத்தால் ஒதுக்கப்பட்டவள். நல்ல காரியங்களுக்கு முன்னுக்கு வரத் தடுக்கப்பட்டவள். அவ்வாறிருந்தும் தனது ஊரவருக்கு இன்னல் வந்த போது முன்னுக்கு நின்று உதவியவள். பாடசாலை மாணவர்கள் அவளைக் கல்லால் அடிக்கும் போது தனியாகப் போயிருந்து கேவிக்கேவி அழுபவள். ஒரு அப்பாவி.

அப்புவில் வரும் செலூலொயிட்டினால் கட்டமைக்கப்படும் அலி விபசாரம் செய்பவள், பெண்களை பலாத்காரப்படுத்தி விபசாரம் செய்விப்பவள். சமயம் வந்தால் கொலையும் செய்பவள்.

இப்போது சொல்லுங்கள். இதில் எந்த அலி நிஜம்?

விடுதலைக்காகப் போரிடும் தேசத்திலிருக்கும் எம்மால் எப்படி அப்புவை ரசிக்க முடிகிறது?

எப்படி எமது எப்.எம். வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளர்களால் விசிலடிச்சான் குஞ்சுகள் போல அப்பு திரைப்படத்துக்கு 'ஓசி' விளம்பரம் பண்ண முடிகின்றது?

ஒடுக்கப்படுவோருக்காக, பெண்களுக்காகக் குரல் கொடுக்கும் அமைப்புக்கள் மௌனமாக இருப்பது ஏன்?

சற்றுச் சிந்தித்தால் என்ன?

-பஞ்சமன்

நன்றி - நூலகத்திட்டம்



# பார்வைகள்

கவர்ந்திழுக்கும் முதல் நாவல் ரோஹினியின்

# அழகுற ஏதாவது செய்ய வேண்டும்

நூல் விமர்சனம்

- ஏ.ஜே.கனகரத்தினா

பரிதாபத்துக்குரிய விஷயம் என்னவென்றால், ரோஹினி ஹென்ஸ்மனின் மனதை ஈர்க்கும் முதலாவது நாவல் இங்கு எந்த பிரபலத்தையும் பெறாததே. இது ஷியாம் செல்லத்துரையின் ஃபனிபோய் நாவலுக்குக் கிடைத்த மிகுந்த வரவேற்புக்கு முற்றிலும் மாறுபட்டது. இலக்கிய ரீதியாக ஃபனிபோய் நாவல் கணிசமான தகுதியைக் கொண்டிருந்தாலும், அது வரவேற்கப்பட்டதென்பது ஒரு விதத்தில், மரத்துப்போன இலக்கிய சுவை உணர்வில் அது புகுத்திய ஒரு பால் சேர்க்கை திகில்மையாகும்.

ரோஹினியின் நாவலை மீளவாசித்த பின்னர் பின்னட்டையில் பின்வருமாறு அது பற்றிக் கூறப்படுவதில் எனக்கும் உடன்பாடே: "பம்பாயின் சுற்றிச்சுழலும் தெருக்களை அண்டிய சேரிப்புற நகரின் பின்னணியில் உருவாக்கப்பட்டுள்ள ரோஹினியின் முதலாவது நாவல், "அழகுற ஏதாவது செய்துவிட வேண்டும்" என்று வெவ்வேறு வழிகளில் முயலும் பெண்களை மையமாகக் கொண்டுள்ளது. பலர்மிகுந்த தொல்லைகளின் மத்தியில் இதில் வெற்றியுற, ஏனையோர் தம் முயற்சியின் போது அழிக்கப்படுகின்றனர். ஒவ்வொருவருக்கொருவர் காட்டும் ஆதரவு தீர்க்கமானது. இது இல்லாவிடில் ஒவ்வொருவரும் தனது தனிமைப்படலால் தோற்கடிக்கப்படப்பட்டிருப்பர். இதில் வரும் கவிதா, மரியம், நிர்மலா மங்கள், கீதா ஆகிய சில பெண்கள், வேலைத்தளத்தில் போராட்டம், வீட்டில் வன்முறை, பாலியல் துன்புறுத்தல்கள், காதல், வெறுப்பு, வறுமை ஆகியவற்றுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர். "அழகுற ஏதாவது செய்யவேண்டும்" என்னும் இந்நாவல் மாற்றத்தையும், எதிர்ப்பையும் உடன்பாட்டையும் வலியுறுத்தும் தேர்ச்சி பெற்ற நாவலாகும். இது நம்பிக்கையோடு மிளிரும் புத்தகமாகும்"

நான் இந்நாவலை முதலில் எடுத்து முகவுரையைப்படித்தபோது சமூகவியல் ஆய்வை நாவல் உருவத்தில் தரமுயலும் அலுப்பை ஏற்படுத்தும் ஒன்றாக இருக்கலாம் என்றோ அல்லது அதன் சூழலைக் கணக்கிலெடுத்த போது, ஸோலா ரக நோய்க்கூறு பரிகார நாவலாய் இருக்கலாம் என்றோதான் நினைத்தேன்.

ஆனால், நான் நாவலை வாசிக்கத் தொடங்கிய போது, வீட்டின் முன்மாடியில், நின்றிருந்த ரேணு பற்றிய நெருங்கிய காட்சி விவரணையும், பின்னர் அடுத்து முன் மாடியில் நின்றிருந்த உயரமான ஆனால், மெலிந்த பெண்பற்றிய இடை நிலைக்காட்சி விவரணையும் எனக்கோர் மகிழ்வுடனான ஆச்சரியத்தைத்தந்தது. இரண்டாவது அத்தியாயத்தில் எமக்கு அறிமுகப்படுத்தப்படும் இந்த மெலிந்த பெண் கவிதா, பின்னர் ரேணுவின் வாழ்க்கையில் முக்கிய பங்கெடுப்பவளாக வருகிறாள்.

ஐம்பது பாத்திரங்களுக்குப் பட்டியல் போடப்படும் இந்நாவலில் நாவலாசிரியர் அவற்றுள் ஒரு டசின் பாத்திரங்களையே குவிமையப்படுத்துகிறார். திட்டமிட்ட முறையில் தொழிலாளர்களை ஏமாற்றும் ஆதர்ஸ் கார்மண்ட்ஸ் உரிமையாளர் வேர்மாவிலிருந்து அவரது நேரடிப் பிரதிபிம்பமாக தெரியும் தொழில் சங்க நடவடிக்கையையே தொழிலாளாகக் கொண்டிருக்கும் தொழிற்சங்கத் தலைவர் கெல்கார் வரை, வேர்மாவின் சுரண்டலுக்கு எதிராக எதிப்பை ஒன்று திரட்டும் ஆனாந்தும் ஷகீட் ஆகிய சக தொழிலாளர்களிலிருந்து (பின்னவர் குண்டர்களால் கத்தியால் குத்தப்பட்டுக் கொல்லப்படுகிறார்) தனது மனைவியான லக்ஷ்மியை தனது கூட்டத்தின் சகாக்களோடு பாலியல் உறவு கொள்ளும்படி நிர்ப்பந்திக்கும் உள்ளூர் கோட்ஃபாதர் ஆன ஷெட்டிவரை என்று பாத்திரங்கள் விரிகின்றன.

நாவல் நிலைகொள்ளும் பின்னணியைக் கொண்டு பார்க்கும்போது, பாலியல் விவகார உணர்வுகளின் வெளிக்காட்டல்களாகவோ அல்லது பம்பாய் நகரின் கீழ்த்தரமான அசிங்கமான சேரிவாழ்க்கையின் படப்பிடிப்பாகவோ அது நலிவுற்றுக் கீழிறங்கியிருக்கலாம். ஆனால், அது அவ்வாறு இல்லாமலே இருப்பதற்குக் காரணமாய் ஆசிரியரின் மனிதாய அர்ப்பணிப்பைக் காட்டலாம். பாலியல் வன்புணர்வும், கொலையும் நாவலில் நிகழ்கின்றன. அவ்வாறே வன்முறைகளும், குறிப்பாக பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் எதிராக நிகழ்கின்றன. ஆனால், இவை இச்சம்பவங்களுக்காவே பயன்படுத்தப்பட்டவை அல்ல.

பாத்திரங்கள் தட்டையாக இல்லாது முழுமையானவையாக இருப்பதோடு அவற்றின் குணாம்சங்கள் அவற்றின் ஆழத்தையும் சிக்கலையும் வெளிக் கொணர்பவையாக உள்ளன. நம் மனதில் ஊசலாடிக் கொண்டிருக்கும் பாத்திரங்களாக மரியம், காதபாய், சாதா (ஷகீட்டின் மனைவி) லக்ஷ்மி (ஷெட்டியின் மனைவி) ரேணு (இவர்களை நாம் நாவலின் முதல் அத்தியாயத்தில் சந்திக்கிறோம்) ரஞ்ஜன் (பல்லைக்கழக விரிவுரையாளர், அரசில் செயற்பாட்டாளர்) அவரது மனைவி கவிதா ஆகியோர் வருகின்றனர்.

நாவலின் நடை பாத்திரங்களின் அக உலகங்களை வெளிப்படுத்துகிற, எந்தவித போலி அலங்காரங்களை நெளிவுகளற்ற, மேல்பூச்சற்ற விறுவிறுப்பான எளிமையான மொழிக்கையாள்கை உடையது.

நாவல் சமூகவுணர்வுடைய நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த சிலரின் உதவியுடன் தமக்கொரு நல்ல மனித வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்காக அநீதிக்கும் சுரண்டலுக்கும் எதிராகப் போராடும் கல்வியறிவு குறைந்த சாதாரண மக்களின் செயற்பாட்டை குவியமைப்படுத்துகிறது. அதில் அவர்கள் வெற்றிபெறுகிறார்கள். ஆனால், இது உற்பத்திச் சமூக உறவுகளை புரட்சிகரப்படுத்தியதன் மூலமன்று, (அத்தகைய பெருங்கதையாடல் உடனடியாக இடம்பெறுவற்கான சாத்தியம் தெரியவில்லை) மாறாக, தங்களுடைய நடைமுறை வாழ்க்கையை குறிப்பாக ஒழுங்கமைக்கப்படாத சிறு பகுதியில் சிறியளவில் இலகுபடுத்தி இயல்பு நிலைக்கு கொண்டுவருவதன் மூலம்.

இவ்விஷயம் பற்றி ஆசிரியரே இந்நூலின் இந்தியப் பதிப்பின் முன்னுரையில் தொடுகிறார்.

அது ஒரு நிகழ்வத்திட்மொன்றின் பிரகடனமாக இருப்பதால் அதை நான் இங்கு முழுமையாக தருகிறேன், "இந்நூலில் லட்சியவாதம் (utopian) பற்றிய குணக்கூறு உண்டு. காரணம் இவ் அம்சத்தை நான் அழுத்தியுள்ளேன். ஆனால், அதற்காக இதற்கெதிரான நிலைப்பாடுகள் பற்றி அறியாமலில்லை. இன, மத, ரீதியான பிரிவினைவாத அமைப்புகளும், அவற்றின் கொள்கைகளும், எதிர்காலத்தில் எல்லாராலும் பங்கிடப்படும் இவ் உலகை நல்லதாய் இருக்கவிடப்போவதில்லை. மாறாக, பெரும்பான்மையினத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் யதேச்சராதிகார அமைப்புகள், சிறுபான்மையினரை சித்திரவதைப்படுத்தி வெளியேற்றி அழித்தொழிப்பு நடத்துவதாகவே இருக்கும். இத்தகைய நிலைப்பாடே பம்பாய் நகரின் வரலாற்றில் மிக வெட்கக்கேடாய் அமைந்த முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்ந்த ஜனவரி இன சாங்காரத்திற்கு காரணமாய் இருந்தது. 1987ல் நான் எனது நாவலின் முதல்வரைவை எழுதிய காலத்திலிருந்து அவை வலுப்பெற்று பம்பாயை மட்டுமன்றி முழுநாட்டையுமே தமது வன்முறைக்காலாசாரம், விரோதம் என்னும் கோரப்பிக்குள் விழுத்துவதாய் பயமுறுத்திற்று. இது இந்தியாவிற்கு மட்டும் தன்னை அடக்கிக் கொள்ளவில்லை. ஏனைய ஆசியாவின் பகுதிகளுக்கும் எஞ்சிய உலகின் பகுதிக்கும் வியாபித்தது. இத்தகைய மேலாதிக்க அமைப்புகள் செய்ய விரும்புவதெல்லாம் ஏனைய இனங்களை களையெடுத்து இன சுத்திகரிப்பு செய்து தன் இனத்தையே யதேச்சதிகார அடக்குமுறைக்குள் உள்ளாக்குவது. குறிப்பாக அதன் பெண்களை. காட்டுமிராண்டி ரீதியில், அவர்களின் இருப்புக்கான சுதந்திரத்தை மறுத்தல், அல்லது தாம் அனுமதிப்பதை தவிர வேறெதையும் செய்யவிடாது வைத்திருத்தல். ஆகிய இவற்றின் போக்குகள், ஒவ்வொரு முன்னெடுப்பின் போதும், தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இல்லாவிடின், முழு சமூகத்தையுமே காட்டுமிராண்டி நிலைக்குள் தள்ளிவிடும். ஆரம்பத்தில் இருந்த சமூகத்தின் பல்வகை வேற்றுமையென்பது போதாமைக்குள்ளும், பல்வகை நிறம் கொண்டு இழைக்கப்பட்ட வளம் மிக்க அழகிய வடிவமாக இருந்தது. இந்த வடிவத்தில், ஓர் நிற இழையை மட்டும் தவிர்த்து ஏனைய இழைகளையெல்லாம் குலைத்தெறிந்து சிதைப்பதென்பது, சமூக சர்கையையே சீர்குலைத்து ஈற்றில், அசிங்கமான கந்தல் துணியொன்றை விட்டுசெல்வதாகவே முடியும். இத்தகைய பயங்கர பயமுறுத்தலுக்கு முகம்கொடுக்க வைத்திருக்கும் நிலையில், நீதியான எல்லா மக்களையும், ஆதரிக்கின்ற உலகு பற்றிய கனவு உருவாக்கப்பட வேண்டும். காரணம் நல்ல தீர்க்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பட்சத்தில் கனவுகளிடம் உண்மையில் வார்ப்பாகும் சக்தி உண்டு. இத்தகைய இயக்கங்களுக்கான உள்ளோடிய சக்தி தொழிலாளர்களிடமே உண்டு. விசேடமாக எமது நாட்டின் பகுதிகளில் வாழும் பெண்களிடம் - இந்த நிலையில் எனது நாவலின் கதாபாத்திரங்களில் அவர்களிடையே தனிநபர் - கூட்டுநோக்கு ஆகியவற்றிடையே மன அழுத்தங்கள் இருந்தபோதும் முரண்பாடுகள் இல்லை. தனிநபர் ரீதியாக மேலோங்குவதற்குரிய சுதந்திரத்தைப் பெறுவதற்கான சாத்தியப்பாட்டிற்கும், இக்கொள்கையில் பங்கெடுக்கும் எல்லாவித பின்னணி கொண்ட மக்களின் உறவுகளை உறுதிப்படுத்துகின்ற சமத்துவ நிறுவனத்துக்குமிடையே ஒத்திணக்கப்பாடு உண்டு"

நாவல், நீதியானதும், எல்லாரையும், ஆதரிக்கின்ற உலகை சிருஷ்டிக்கின்ற கனவை நிஜப்படுத்துவதை நோக்காக் கொண்டுள்ளது. இந்நோக்கானது எந்தவித 'கருப்பொருளை' கையாள்வதன் மூலமும் ஆசிரியரால் மேற்கொள்ளப்படவில்லை (அப்படியொரு கருப்பொருளே நாவலில் இல்லை. மாறாக, அப்படி பல உண்டு) நாவலின் கதையோட்டம் அதன் நம்பகத்தன்மையினால், நடைபெறுகிறது. கதாபாத்திரங்கள், நிகழ்வுகள், உறவுகள், யாவையும் உண்மையினதும், நம்பகத்தன்மையினதும், ஒளிர்வைக் கொண்டவை.

*தமிழாக்கம்: மு.பொ.*

# புதிய சகத்திரப் புலர்வின் முன் ஈழத்துச் சிறுகதைகள்

இரத்தினவேலோனின் சிறுகதை விமர்சனம்

திறனாய்வு அடிப்படையில் எழுதப்பட்ட 25 பத்திக் கட்டுரைகள் அடங்கியதொரு தொகுப்பு இது. "தொண்ணூறுகளின் இறுதிகளில் சிறு கதைகள்" தொடர்பான ஒரு பொது நோக்கும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. இதனை எழுதியவர், மிகவும் முக்கியமான சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவராவார். கவிதைகளையும் எழுதியுள்ளார். இப்பொழுது தகைமை சான்ற திறனாய்வாளராக முகிழ்ந்து வருபவர். படைக்கும் ஆற்றலுடன், படைப்பு நுட்பங்களையும் அவர் அறிந்து வைத்திருக்கிறார். அதனாலேயே, திறனாய்வு சார்ந்த பத்தி எழுத்துக்கள் அவர் கைவண்ணத்தில், மெருகும், ஆழமும், எழுத்து நேர்த்தியும் கொண்டு காணப்படுகின்றன.

1990களில் வெளிவந்த பல சிறு கதைத் தொகுப்புகள் தொடர்பாக வேறு யாரும் எழுதாத அளவிற்கு அவர் எழுதியிருக்கிறார். மரபு வழித்திறனாய்வு அணுகுமுறைகளை ஆழமாகவும், எளிதில் யாவரும் புரிந்து கொள்ளும் விதமாகவும் பிரயோகித்து அவர் எழுதுகிறார்.

தெளிவத்தை ஜோசப், கலைவாதி கலீல், அந்தனி ஜீவா, கே.எஸ்.சிவகுமாரன் போன்றோர் எழுதிவரும் பத்தி எழுத்துக்களைப் புறக்கணித்துத் தமது "கட்டவிழ்ப்புகளை" மேற்கொள்ளும் சில புதிய "ஆழமான விமர்சகர்கள்' எனத் தம்மைத் தாமே நினைத்துக் கொள்பவர்கள், பல இடங்களில் தமது வரலாற்றறிவின்மையையும், நுணுகி ஆராயாதுவிடும் தன்மையையும் காட்டித் தமது போதாமையை வெளிப்படுத்தியுள்ளனர், சோமகாந்தன், திருச்செல்வம், பாமா ராஜகோபால் போன்ற பலர் அந்நாட்களில் எழுதிய பத்திகளின் பங்களிப்புகளையும் இவர்கள் அறியார்.

இந்த நூலிலே, சிறந்த சிறுகதை எழுத்தாளரும், பத்தி எழுத்தாளருமான ரஞ்சகுமார் தெரிவிக்கும் தகவல் முக்கியமானது:

"ஈழத்தில் வெளியாகும் நூல்கள் பற்றிய விபரங்கள் பலவற்றையும், ஈழத்தின் படைப்பாளிகள் பற்றிய விபரங்கள் பலவற்றையும், ஈழ இலக்கியத்தின் வரலாற்றின் முக்கியமான விடயங்கள் பற்றிய சில விபரங்களையும் இந்நூல் கொண்டிருக்கிறது".

நூலாசிரியர் தரும் தகவல்கள் சிலவும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்:

"1875இல் 'உதய தாரகை' என்ற ஈழத்தின் முதலாவது தமிழ்ப் பத்திரிகையில் சதாசிவம் பிள்ளை எழுதிய கதையினையே ஈழத்தின் முதலாவது சிறுகதையெனக் கொள்ள வேண்டியுள்ளது.

முஸ்லிம் சிறுகதை முயற்சிகள் 1898ல் ஐதரூஸ் லெப்பை மரைக்காயர் எழுதிய 'ஹைதர்ஷா சரித்திரம்" என்ற தொகுதிகளுடனும், மலையகச் சிறுகதை முயற்சிகள் 1931ல் கோ. நடேசையர் எழுதிய 'திரு, ராமசாமி சேர்வையின் சரிதம் என்ற கதையுடனும் ஆரம்பமாகின்றன. இதன் பின்னர் 30களின் இறுதிக்கூறில் சுயா, பாணன், ஆனந்தன் போன்றோர் இம்முயற்சியில் ஈடுபட்டாலும், ஈழத்துச் சிறுகதை இலக்கியத்திற்கு வளம் சேர்த்த முன்னோடிகளாக அல்லது பிதாமர்களாக சம்பந்தன், சி.வைத்திலிங்கம், இலங்கையர்கோன் மூவரையுமே வரலாறு கூறுகிறது" என்கிறார் இரத்தினவேலோன்.

நூலாசிரியர் ஆ.இரத்தினவேலோன் தமது பத்திக் கட்டுரைகளில், நூலாசிரியர் பற்றிய விபரங்கள், நூல் பற்றிய விபரங்கள், இலக்கிய, பார்வை பற்றிய விபரங்கள், எடுத்துக் கொண்ட பொருள் பற்றிய பிறரின் கூற்றுக்கள் எடுத்துக் கொண்ட தொகுப்புக் கதைகள் பற்றிய கூட்டு மொத்தமான மதிப்பீடு, எழுத்தாளரின் நிலை நின்று கதைகளைப் பார்த்தல் போன்ற அம்சங்களை உள்ளடக்குகிறார்.

"தினக்குரல்" நாளிதழினில் வாரப் பதிப்பில், "அண்மைக்கால அறுவடைகள்" என்ற பத்தியை ஆ.இரத்தினவேலோன் எழுதிவருவதை, தேர்ந்தெடுத்துப் படிக்கும் வாசகர்கள் அறிந்திருப்பீர்கள். இப்பத்தியில் இடம்பெற்ற எழுத்துக்களே இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் இப்பத்திகள் இடம்பெற்ற திகதிகளையும் நூலில் குறிப்பிட்டிருக்கலாம். இவை எழுதப்பட்ட காலத்தில், நூலாசிரியரின் பார்வை எப்படியிருந்தது என நாம் அறிய இது உதவியிருக்கும்.

அதேவேளை இரத்தினவேலோனின் பத்திகளில், இலக்கிய வரலாறு சம்பந்தமான தகவல்கள் நிறைய இடம்பெறும்.




**புதிய சகத்திரப் புலர்வின் முன் ஈழத்துச் சிறு கதைகள்**
**- ஆ. இரத்தினவேலோன்**

**வெளியீடு:**
**மீரா பதிப்பகம்**
**இல: 191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு - 06**
**விலை:- 125/-**

முன்னணிப் பத்தி எழுத்தாளரான ஆ.இரத்தினவேலோனுக்கும், பழைய பத்தி எழுத்தாளனாகிய (1962முதல்) எனக்கும் உள்ள வித்தியாசங்களில் ஒன்று, நான் ஒவ்வொரு கதையையும் பகுத்தாய்வுக்கு எடுத்துக் கொள்வதாகும்.

செம்பியன் செல்வன், தெளிவத்தை ஜோசப் ஆகியோர் எழுத்துக்களையும் (சிறுகதைகள் தொடர்பாக) சேர்த்துப் பார்க்கும் பொழுது, முழுமை இன்னும் துலக்கமாகும்.

அழகான தமிழில் எழுதும் புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் மிக நுண்ணிதான கூருணர்வு கொண்டவர். ஆக்கத் திறனும், திறனாய்வுத் திறனும், வரலாற்றறிவும், சுயதேடல் முயற்சியும் கொண்ட, அடக்கமான ஓர் எழுத்தாளர். அவருடைய பங்களிப்புக்களைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் கவனத்தில் எடுத்துத் தமது இலக்கிய வரலாற்றில் பதிய வேண்டிய காலம் வந்துவிட்டது.

கோகிலா மகேந்திரனுடன் இணைந்து வெளியிட்ட "அறிமுக விழா", "புதிய பயணம்", "விடியட்டும் பார்ப்போம்", "புதிய சகத்திரப் புலர்வின் முன் ஈழத்துச் சிறுகதைகள்" ஆகியன இவர் இற்றைவரை எழுதிய நூல்கள்.

புலோலியூர் ஆ.இரத்தினவேலோன், புனை கதை, கவிதை, நாடகம், திறனாய்வு தொடர்பாகவும் நூல்களைத் தந்து எமது எழுத்தாளர்களின் பங்களிப்புகளைத் திறனாய்வு நோக்கில் தரவேண்டும். அவர் முயற்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டியவை.

*கே.எஸ்.எஸ்*


நன்றி - நூலகத்திட்டம்



# வடமேல் மாகாணத்தில் ஒரு ஹிட்லர்

வடமேல் மாகாணத்தில் மத்திய பகுதியில் அமைந்து உள்ள தேர்தல் தொகுதி ஆனமடுவ முன்னர் யானைமடுவ எனப் பெயர் பெற்றிருந்த இந்த இடம் காலப்போக்கில் ஆனைமடுவாகி பின்னர் ஆனமடுவ எனத் திரிபடைந்தமை யாவரும் அறிந்த விடயம்.

வன்னிப் பகுதியான இங்கு வறுமைக்கோட்டின் கீழேயே மக்கள் வாழ்ந்து வருகின்றனர். 17 வருடங்கள் யானைகள் இந் நாட்டை ஆட்சி செய்த பின்னர் இப்பொழுது உடும்பொன்றும் (தலகொயா) அதைச் சார்ந்த உடும்புகளும் செய்யும் அட்டகாசத்தால் இன்று ஆனைமடு அந்தரப்பட்டுக் கொண்டிருக்கின்றது.



அண்மைக்காலமாக இதன் பாராளுமன்ற உறுப்பினர் டி.எம்.தஸநாயக்கவும், அவரின் குண்டர்களும் செய்யும் அட்டகாசத்தால் ஆடிப்போய் உள்ளது இந்த ஆனமடு டி.எம்.தஸநாயக்கவே ஆனமடுவே தலகொயா (ஆனைமடுவின் உடும்பு) என்றே அனைவரும் குறிப்பிடுவது வழக்கம்.

அமைதியாக இருந்த இந்தப் பகுதி ஆயுதமேந்திக் கொண்டு அட்டகாசம் புரியும் தஸநாயக்கவின் குண்டர்களால் மக்கள் படும் துன்பங்கள் அளவில்லை. இந்தக் குண்டர்கள் அனைவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆனால், பீதி காரணமாக மக்கள் வாய்திறப்பது இல்லை.

சூலன் முனசிங்க, அனுர பியன்ஜித் முனசிங்க, சந்திரசேன, ஜனித இராணுவத்திலிருந்து தப்பி வந்த மூவர் இதுதான். த.மு.தஸநாயக்கவின் அட்டகாசம் புரியும் வன்முறையாளர் கூட்டம். இந்தக் கூட்டத்திற்கு பொலிசாரும் பயந்து செயற்படும் நிலை காணப்படுவதும் கவலைக்குரியது.

அத்துடன் கொலைகளைப் புரிவதற்கு வேறு மூவர். ஒருவர் "பபா" ஏனைய இருவரும் முஸ்லிம்கள். இருவர்கள் மூவருக்கும் கொலை செய்வது என்பது கைவந்த கலை. பபா என்னும் பெயரை உடையவருக்கு உண்மையான பெயர் என்னவென்பதை எவரும் அறிந்திருக்கவில்லை. ஆனமடுவ பகுதியில் இந்தக் கூட்டம் செய்யும் லீலைகள்தான் என்ன?

பாடசாலை சிறுமிகள் தொடக்கம் பார்வைக்கு அழகான பெண்கள் எவரையும் இவர்கள் விட்டு வைப்பதில்லை. பெற்றோர்கள் முன்னிலையில் பெண்களை பாலியல் வல்லுறவு புரியும் கழுகுக் கூட்டத்தினரே இவர்கள். பெற்றோர்கள் எவராவது எதிர்ப்பு தெரிவித்தால் பபாவின் படை வரும். பின்னர் நடப்பதை எழுதித் தெரிய வேண்டியதில்லை. "சதக், சதக்" கதை முடிந்தது.

கைகளில் கிரரேனட்டை கிரிக்கெட் பந்துபோல் கொண்டு திரியும் இந்தக் கூட்டம் கசிப்பு விற்பனையிலும் கொடிகட்டிப் பறக்கின்றது. அனுமதி பெற்ற மது விற்பனைச் சாலைகளில் தங்கள் சரக்கை விற்க வேண்டும் என்பது இவர்கள் சட்டம். எங்காவது விழாக்கள் நடைபெற்றால் இந்தக் கூட்டம் சாராயம் விற்க முன்னிற்கும், இதன் காரணமாக செம்புக்குழி விகாரையின் வருடாந்த விழாவை நடத்துவதில்லையென்ற முடிவுக்கு நிர்வாக சபையினர் வந்துள்ளதாகவும், அறியக்கிடைத்துள்ளது. விகாரை வளவில் தேனீர் விற்பது போன்று பலவந்தமாக கசிப்பு விற்பனையை இக்குழு செய்வதை பௌத்த துறவியாலும் தடுக்க முடியாதுள்ளதாம்.

வனபரிபாலனத் திணைக்களத்தினர் பார்த்துக் கொண்டிருக்கையில் சட்டவிரோத மரம் வெட்டும் தொழிலையும், இவர்கள் செய்து வருகின்றனர். வனப் பாதுகாவலர்களின் துப்பாக்கிகளை, இவர்கள் பலவந்தமாகப் பறித்துள்ளனர். வனப் பாதுகாவலர்கள் தங்கள் கடமைகளைச் செய்ய விடாமல் தடுக்கும் இந்தக் கூட்டத்தின் முன் சட்டநடவடிக்கை எடுக்க முடியாமல் திண்டாடும் நிலை தோன்றியுள்ளது. மஹகும்புக்கடவல பகுதியில் இன்று மரங்களே இல்லை.

வீடுகளை உடைத்து கொள்ளை நடத்துவது, விவசாயிகளிடமும், வியாபாரிகளிடமும், கப்பம் பெறுவது, பண்ணை விலங்குகளை களவாக எடுத்துச் செல்வது இந்தக் குழுவினர் புரியும் ஏனைய லீலைகள். இதனால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இந்த மக்கள் தொடர்ந்து ஏழைகளாகவே இருக்க வேண்டிய நிலை.

இன்று ஆனமடுவவில் ஏனைய கட்சிகளுக்காக இயங்கிய பலர் அங்கில்லை. இந்த வன்முறையாளர் கூட்டம் அவர்களில் பலரைத் துரத்திவிட்டது. எனவே நடைபெறும் தவறுகளை எவரும் சுட்டிக் காட்ட முடியாதுள்ளது. பத்திரிகையாளர்களும் முடியாத நிலையில் உள்ளனர். தவறுதலாக செய்திகள் வெளிவந்தால் பத்திரிகை நிருபர் மீதும் இக்குழுவின் கைவரிசையைக் காட்டிவிடுவர்.

சிறுபான்மை மக்கள் மீதும் தங்கள் அடாவடித்தனத்தை இவர்கள் காட்டி வருகின்றனர். அண்மையில் இங்கு மதவாக்குளம் பகுதியில் சிறுபான்மை முஸ்லிம்களைத் தாக்கி வீடுகளை எரித்து, உடமைகளை சேதமாக்கியது இக்குழுவினரே என முஸ்லிம்கள் தெரிவித்துள்ளனர்.

இங்கு குடாகம என்ற இடத்தில் குறவர் கூட்டமொன்று தற்காலிகமாக குடியேறியிருந்தது. அங்கு சென்ற இக்குழுவினர் குறப்பெண்கள் மூவரை பாலியல் வல்லுறவு புரிந்துள்ளனர். தடுக்க வந்த ஆண்கள் கடுமையாக தாக்கப்பட்டனர். அன்றாடம் உழைத்து சீவிக்கும் மக்களையும் இவர்கள் விட்டுவைக்கவில்லை.

ஆனமடுவில் இயங்கும் அரச திணைக்களங்கள் பலவற்றிலும் இவர்களின் ஆட்சிதான். தங்கள் உத்தரவை மீறுபவர்களுக்கு அந்த இடத்திலேயே தண்டனை வழங்குவதில் கெட்டிக்காரர்கள் இவர்கள்.

பொதுமக்களின் தேவைக்காக ஆனமடுவ நகரில் ஒதுக்கப்பட்டிருந்த நிலம் 28 ஏக்கர் இக்கும்பலால் துண்டாடப்பட்டு விற்கப்பட்டுவிட்டது. இனி ஆனமடுவ பகுதியில் பிரிப்பதற்கு காணிகள் இல்லை. இனிக்காணிகள் தேவையென்றால் வளம்மிக்க வனாந்தரங்களையே அழிக்க வேண்டிவருமென பாடசாலை அதிபரொருவர் மிகக் கவலையுடன் குறிப்பிட்டார்.

அண்மையில் இக்கும்பல் செய்த இன்னொரு திருவிளையாடல் அம்பலத்துக்கு வந்துள்ளது. ஆண்டிகம தொடக்கம் கொடுக்கச்சி வரை மின்சாரம் வழங்கவென இருமருங்கிலும் இருந்த பெறுமதியான மரங்களை வெட்டி விற்றுத் தீர்த்துவிட்டது இக்குழு. இறுதியில் மின்சாரமும் இல்லை. ஒன்றுமில்லை.

தொடர்ந்து சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டுவரும் இவர்களை கட்டுப்படுத்த ஏன் முடியாது என பலரும் வினா எழுப்புகின்றனர். இலங்கை முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டங்கள் இருக்கையில் ஆனமடுவ பகுதிக்கு மட்டும் தனி சர்வாதிகாரச் சட்டமா?

த.மு.தஸநாயக்கவிற்கும் பல வழக்குகள் உள்ளது. அனைத்தும் வன்முறை வழக்குகள். பல பாடசாலை அதிபர்களும் இவரால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

எனவே வடமேல் மாகாணத்தில் ஹிட்லராக திகழும் இவரை கட்டுப்படுத்தி, சட்டத்தின் முன் நிறுத்த வேண்டிய பொறுப்புகள் உயரதிகாரிகளினதும், சார்ந்துள்ள கட்சியினதும் கடமையாகும்.

**தமிழ்த்துறையன்**

## புதிய சிங்கள தேசிய..........

இந்த ஒப்பந்தத்தை எதிர்த்தனர். ஜே.ஆர். ஜெயவர்த்தனவும், ராஜீவ் காந்தியும் ஒப்பந்தத்தில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஜனாதிபதி மாளிகையில் கைச்சாத்திடும் வைபவத்தை நடத்திக் கொண்டிருக்கும் போது பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த லட்சக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் நகரத்துக்கு வெளியே முகாமிட்டிருந்தார்கள். எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் உச்சக்கட்டமாக, அணிவகுப்பைப் பார்வையிட்ட இந்தியப் பிரதமருக்கு துப்பாக்கியின் பிடியினால் தாக்கும் சம்பவம் நடைபெற்றது. ராஜீவ் காந்தி மயிரிழையில் உயிர் தப்பினார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக 1971ல் முதலாவது மாக்ஸியக் கிளர்ச்சியை இலங்கையில் நடாத்திய ஜே.வி.பி. தாய் நாட்டைக் காப்போம் என்ற பதாகையுடன் ஒரு ஆயுதமேந்திய எதிர்ப்பினை நடாத்தியது. அவர்கள் இந்தியப் படைத் திரும்பிப்போக வேண்டும் என்றும், மாகாண சபைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் கோரினார்கள். அவர்களது எழுச்சி ஆரம்பத்தில் முழுப் பௌத்த பிக்குகளாலும் ஆதரிக்கப்பட்டு பின்னர் ஒரு சிவில் யுத்தமாக மாறியதுடன் அது இரண்டாண்டு காலம் நீடித்து. ஐம்பதாயிரம் உயிர்களைக் காவு கொண்டது. 1994இல் ஜே.வி.பி. திரும்பவும் பாராளுமன்ற அரசியலுக்கு வந்து தமது தீவிர தேசியவாதத்தை வெளிப்படுத்தியது. அவர்கள் யுத்தத்துக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தனர். ஆக, 1994ல் எந்த ஒரு அரசியல் கட்சியும், யுத்தத்தை ஆதரிக்கவில்லை. தெற்கில் இந்த மாற்றங்கள் நடந்துகொண்டிருக்கையில் வடக்கில், புலிகள் தமிழ்த் தேசியவாதத்தை பலப்படுத்தி தமிழீழத்துக்கான தமது யுத்தத்தை தொடர்ந்த வண்ணம் இருந்தனர். இதுதான் சிங்களத் தேசியவாதத்தின் புதிய போக்குகள் உருவாக காரணமாக இருந்த அரசியல் சூழ்நிலையாகும்.

1995இல் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான சமரசப் பேச்சுவார்த்தை முறிவடைந்ததுடன், ஒரு முழு அளவிலான, முன்னொரு போதும் இலங்கையில் நடந்திராத அளவு கடுமையான யுத்தம் வெடித்தது. சமாதான முயற்சிகளை யுத்தப் பிரச்சாரம் விழுங்கிக் கொண்டது. புலிகளது சிவிலியன்கள் மீதான தாக்குதல்கள் கொழும்பின் மையப்பகுதியிலும் நடைபெற்றன. அரசாங்கத்தின் சக்தி வாய்ந்த தொடர்புசாதனம், சிங்களத் தேசியவாத சுலோகங்களையும் வாதங்களையும் யுத்த உணர்வை ஊட்டுவதற்காக பொறுப்பெடுத்துக் கொண்டன.

## பத்திரிகைப் பேரவையின்..................

அதனை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ எந்தவொரு யோசனையும் அவர்களிடம் விடுக்கப்படவில்லை.

இவை பற்றியெல்லாம் விவாதிக்க கருத்துத் தெரிவிக்க ஒரு பத்திரிகைக்கு உள்ள உரிமையை நாம் ஏற்றுக்கொள்கிறோம். நாம் பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்துவதை எதிர்க்கின்றோம் என்ற விடயத்தை மட்டுமே இங்கு சுட்டிக்காட்டினோம். இப் பெண் தன்னினச்சேர்க்கையாளர்கள் மாநாட்டிற்கு நாமும் ஒரு அமைப்பு என்ற வகையிலேயே ஆதரவு தெரிவித்தோம். எனினும் திட்டமிட்ட வகையில் மாநாடு நடைபெறவில்லை. 99 டிசம்பர் தேர்தலும் இதற்கு காரணம். குறிப்பிட்ட அந்த வாசகரின் கடிதத்தினால் எமக்கு பல சிக்கல்கள் ஏற்பட்டன. பத்திரிகை பேரவையின் இத் தீர்ப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள், மொழி என்பன ஆச்சரியத்திற்குரியதும், வெட்கத்திற்குரியதுமாகும்.

பத்திரிகை பேரவை உறுப்பினர்கள் என்னை (ஆண் என்றபடியால்) பாலியல் வல்லுறவு செய்ய முடியாதென வாதிடுகின்றார்கள். நாம் சிறுபான்மையினரின் பாலியல் உரிமைக்காக முன்நின்ற போதிலும், தன்னினச் சேர்க்கைக்கு தூண்டவோ, அதனை வளர்த்தெடுக்கவோ முயல்வதில்லை. ஆனால், என் மீது இவ்வாறான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இதன்படி நான் இந்த முறைப்பாட்டை செய்யும் அளவுக்கு பரிசுத்தமானவன் அல்ல என்பது அவர்களது கருத்து. குறிப்பாக இத்தீர்ப்பானது தன்னினச் சேர்க்கைக்கு முற்றிலும் எதிர்ப்பு தெரிவிப்பதாகவே உள்ளது" என்றார்.

பெண் தன்னினச்சேர்க்கையாளர்கள் குறித்து தவறான கண்ணோட்டத்தைத் தரும் பத்திரிகைப் பேரவையின் தீர்ப்பு குறித்து ரோஸ் அவர்கள் உயர் நீதிமன்றத்திற்கு முறைப்பாடு செய்ய தயாராக உள்ளார் என அவரது சட்டத்தரணியின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இத்தீர்ப்பு குறித்து ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தனது விசனத்தை தெளிவுறுத்தியுள்ளது. மேலும், பெண் தன்னினச்சேர்க்கையாளர்களை அவமானப்படுத்தும் தன்மையை வன்மையாக எதிர்த்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள இந்த ஆணைக்குழு, இவ்வாறான பிற்போக்குத் தனமான தீர்ப்பை வழங்கியவர்களை பதவிகளிலிருந்து நீக்கி விடவும், இத்தீர்ப்பு பற்றி விசாரணை செய்யவும் ஜனாதிபதிக்கும் பத்திரிகை பேரவையின் தலைவருக்கும் அழுத்தம் கொடுக்குமாறும் நலன்விரும்பிகளிடம் கேட்டுள்ளது.

ஒரு பிரஜையினால் செய்யப்பட்ட முறைப்பாடு குறித்து தீர்ப்பு வழங்குவதை விடுத்து தன்னினச்சேர்க்கை குறித்து வக்கிரமான சரி பிழைகளை ஆராயவும் அவை குறித்து மோசமான மொழியில் கருத்து தெரிவிக்கவும் பத்திரிகை பேரவைக்கு உள்ள உரிமை பற்றி இங்கு கேள்வியெழுப்பப்பட வேண்டியுள்ளது. பத்திரிகை பேரவை முறைப்பாட்டை விசாரித்து தீர்ப்பை வழங்குவதற்கு அப்பால் இவ்வாறு தன்னினச்சேர்க்கை குறித்து மோசமாக நியாயம் கற்பிக்க முனைந்தமையானது முறைப்பாட்டை விசாரித்தவர்களின் தீர்ப்பு வழங்கியவர்களின் வக்கிரத்தனத்தை வெளிக்காட்டுகின்றது என்றே கூறவேண்டியுள்ளது.

எவ்வாறெனினும் இந்த அருந்தலான தீர்ப்பு குறித்து தொடர்பூடகங்கள் பெரிதும் அக்கறை காட்டாதபோதும் இவ்விடயம் பலர் மத்தியில் பெரிதும் சர்ச்சைகளை கிளப்பிக் கொண்டுதானிருக்கின்றது.

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a Newspaper in Sri Lanka


# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.
மின்னஞ்சல்: sarini@sltnet.lk


## நல்லதும் அல்லதும்!

றெடிமேட் ரசம், றெடிமேட் சூப் வகைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

இந்தியாவில் றெடிமேற் அறுகம்புல் ஒளடதம் முதல் கோழிச் சூப் வரை தாராளமாகக் கிடைக்கின்றன. றெடிமேட் பதார்த்தங்களுக்கு பேர் போன நாடு இந்தியா. அவசர உலகில் எல்லாவற்றையும் தயார் செய்து கொண்டிருக்க முடியாத, தொழில் புரிவோர் உணவுக்காக இவற்றை வாங்குவது தவிர்க்க முடியாமல் ஆகிவிட்டது. இலங்கையில் ஏற்கெனவே இந்திய றெடிமேட் நுகர்பொருட்கள் விற்பனையில் சக்கை போடு போட்டுக் கொண்டிருக்கின்றன.

அவற்றைத் தயார் செய்யும் தொழில்நுட்பமும் சமையல்கலை ஞானமும் சந்தைப்படுத்தும் திறமையும் அங்குள்ளவர்களுக்குக் கைவந்த கலை.

ஆனால், றெடிமேட் தீர்வுப் பொதியையும் அவர்களால் தயாரிக்க முடியும் என்று யாரும் கொஞ்சம் கூட எதிர்பார்த்திருக்க முடியாது.

ஆனால், அது இந்தியாவில் தயாராக இருப்பது மட்டுமல்ல சமயம் வரும்போது சந்தைப்படுத்தலுக்காக விடப்படும் என்றும் அறிவித்திருக்கிறார் இணை வெளியுறவு அமைச்சர் அஜித் பாஞ்சா.

கடந்த திங்களன்று தென்னிந்திய நகரான பெங்களூரில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் வைத்து இந்தத் தகவலை அறிவித்திருக்கிறார் அவர்.

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்கேற்க இந்தியா தயாராக இருப்பதாகவும் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள்ளே ஒரு தீர்வு காணப்படுவதையே அது விரும்புவதாகவும் கூறிய அமைச்சர் தம்மிடம் உள்ள தீர்வுப் பொதியை தருணம் பார்த்து வெளியிடுவதாக அறிவித்திருக்கிறார்.

இந்திய அரசாங்கம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு சுமூகமான தீர்வு காணப்படுவதில் அக்கறை காட்டுவதும், அதற்குத் தன்னாலான பங்களிப்பை வழங்குவதும் ஒன்றும் கிண்டல் செய்வதற்குரிய விடயம் அல்ல. இலங்கை பிளவுறும் ஒரு நிலை வந்தால், அது இந்தியாவின் ஸ்திரத்தன்மைக்கு சவாலாக இருக்கக்கூடும். அங்குள்ள மாநிலங்களிடையே இப்போது அமுங்கியிருக்கும் சுதந்திரக் கோரிக்கை தீவிரமடையக் கூடும் என்று இந்திய அரசாங்கம் அஞ்சுவதை எவராலும் விளங்கிக் கொள்ள முடியும்.

ஆனால், அரைநூற்றாண்டுகட்கு மேலாக இழுபறியில் இருக்கும் ஒரு பிரச்சினைக்கு ஒரு சில நாளில் ஒரு தீர்வுத் திட்டத்தை தயாரித்துவிட முடியும் என்று கூறும் துணிச்சலை ஒருபோதும் விளங்கிக் கொள்ள முடியாது.

அப்படி இந்தியா உண்மையிலேயே ஒரு தீர்வைத் தயாரித்திருந்தால் அது 1987ல் ராஜீவ் காந்தி தயாரித்தது போல ஒரு அவசர அவசரமாக செய்யப்பட்ட - நடைமுறையில் வெற்றிபெற முடியாத - இந்திய நலன்களை மட்டும் கணக்கிலெடுத்து தயாரிக்கப்பட்ட ஒன்றாகவே இருக்க முடியும் என்பதை ஊகிக்க அதிகம் அரசியல் ஞானம் அவசியமில்லை. இலங்கை அரசாங்கம் கடந்த ஆறு வருடங்களாக முக்கி முக்கி முயன்றும் இன்றுவரை ஒரு அறிக்கையைத் தயாரிக்க முடியவில்லை என்றால் அதற்குக் காரணம் வெறுமனே இலங்கை அரசாங்கத்தின் அக்கறையின்மை மட்டுமல்ல. பிரச்சினையின் சிக்கல் தன்மையும் தான். ஒரு வகையில் இந்தச் சிக்கல் தன்மை தான் அரசாங்கத்தின் அக்கறையின்மைக்கு கூட - அதன் தனிப்பட்ட அரசியல் லாபங்களுக்காக - காரணமாக இருந்து வருகிறது.

இந்தியா இவ்வளவு இலகுவில் ஒரு தீர்வுத் திட்டத்தைத் தயாரித்திருக்கும் என்றால் அது பிரச்சினையின் முழுமை பற்றி ஆராயாமல் மேலோட்டமாக தமது நலனின் அடிப்படையில் இருந்து ஒரு தீர்வை வரைந்திருக்க வேண்டும். அல்லது இந்தப் பிரச்சினையில் தாம் தலையிடுவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக ஒரு தீர்வை அது வெறும் சாக்குக்காகத் தயாரித்திருக்க வேண்டும்.

எவ்வாறாயினும் அப்படியான ஒரு தீர்வு நிச்சயம் எந்தப் பலனையும் அளிக்கப் போவதில்லை.

ஆனால், இந்திய அரசாங்கம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தனது பிரேரணையை சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் அறிவித்து ஒரு பேச்சுவார்த்தைக்கான சூழலை உருவாக்குமானால் அது மிகவும் பயனுள்ள ஒன்றாக அமையும்.

முன்பு போல தாம் தீர்மானித்த ஒரு தீர்வுக்கு இரு தரப்பினரையும் நிர்ப்பந்திக்கிற ஒரு நிலைப்பாட்டிற்கு இந்தியா போகுமானால் அது இன்னொரு கசப்பான காலகட்டத்திற்கு இட்டுச் சென்று விடும்.

இந்தியா இந்த விவகாரத்தில் நிதானமாவும் பொறுப்புணர்வுடனும் வடக்குக் கிழக்கு வாழ் மக்களின் அபிலாசைகள் பற்றிய அக்கறையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

அதுவும் இரு தரப்பாரும் திரும்பவும் இந்தியப் பங்களிப்பை எதிர்பார்க்கிற ஒரு சூழலில் அது மிகவும் வாய்ப்பாகவும் அமையும்.

அதை விட்டு விட்டு றெடிமேட் விவகாரத்தில் இறங்குவதும் பிறகு அதை சந்தைப்படுத்த முயன்று "ஆக்கிரமிப்பாளர்" பட்டத்தைப் பெற்றுக் கொள்வதும் நல்லதல்ல.

நல்லதல்லது செயல் நல்லதல்லவே!

## மன்னாரில் கழக மணிகளின் அடாவடித்தனங்கள்!

மன்னார் மக்களைப் பொறுத்த-வரையில் நிலப்பிரதேச அடிப்படை-யிலும் பல்வேறுபட்ட அபிவிருத்தி-களிலும் வேறுபிரிக்கப்பட்டு தங்கள் உரிமைகளுக்காக குரல் கொடுக்கக் கூடத் திராணியற்ற ஒரு கோழைத்-தனமான "குட்டக் குட்டக் குனிகின்ற" ஒரு நிலையிலேயே காணப்-படுகின்றனர்.

இவ்வாறான ஒரு நிலைமை-யிலேயே கழகமணிகள் ஆட்கடத்தி கப்பம் பெறுதல், கட்டாய வரி வசூலிப்புகள் போன்ற ஈனத்தனமான மனித நேயமற்ற செயற்பாடுகளை மங்களகரமாக மன்னார் மாவட்ட கழக பொறுப்பாளர் 'ராம்' என்பவரின் நேரிய வழிநடத்தலின் கீழ் ஆரம்பித்-துள்ளனர்.

கழகத்தினரால் மாதந்தோறும் கடைகள் ஒவ்வொன்றுக்கும் சாதார-ணமாக ரூபா 2000 தொடக்கம் ரூபா 3000 வரையிலும் ஆட்டோ ஒன்றுக்கு நாளாந்தம் 25 ரூபாவும், அறவிடப்-படுகின்றன.

இது இவ்வாறிருக்க கடந்த சில நாட்களாக வலுக்கட்டாயமாக ஆட்களை கடத்தி கப்பப்பணமாக குறிப்பிட்ட தொகை வசூலித்து (பறித்து) வருகின்றனர். அந்த வகையில் 'ஸ்ரீ பேக்கரி', றஜீவ் வீடியோ என்பவற்றின் உரிமையாளரான ஸ்ரீரங்க நாதன் (சிறி) என்பவர் கடத்தப்பட்டு ரூபா 25,000 செலுத்திய பின் விடுவிக்கப்பட்டுள்ளார். இவர் வலுக்கட்டாயமாக வெற்றுப்பத்திரம் ஒன்றில் கையெழுத்திட்ட பின்னரே விடுவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அடுத்து ஜுபிட்டர் மல்ரிகுட் சென்ரர் 'ஜெனுசன் பிராண்டா தொலைத் தொடர்பகம் என்பவற்றின் உரிமையாளரான க. மிராண்டா (42) என்பவரும் 'சிப்னால்', 'றோயல் விடுதி' என்பவற்றில் உரிமையாளரும் கடத்தப்பட்டு தலா ரூபா 40,000 செலுத்தியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க மன்னாரைப் பொறுத்த வரையில் புளொட் இயக்கத்தினரால் எவ்வித அபிவிருத்தி திட்டங்களோ, மக்கள் நலன்புரி சேவைகளோ மேற்கொள்ளப்பட-வில்லை. கழகத் தலைவரும் வன்னி மாவட்ட பா.உ. ஆன த.சித்தார்த்தன் மன்னார் பக்கம் தலை காட்டுவதே குறைவு. இவ்வாறான நிலையில் அடுத்த தேர்தலில் மக்களை எந்த முகத்தோடு சந்திக்கப் போகிறார்?

கழக மாணிக்கம் உயிரோடு இருந்த வரையில் கழகத்தால் மேற்-கொள்ளப்பட்டு மனித உரிமை மீறல்-களின் பழியை மாணிக்கத்தார் மீது சுமத்திய கழகத் தலைமை தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அப்பட்ட-மானதும், ஈனத்தனமானதுமான நடவடிக்கைகளின் பழியை யார் மீது சுமத்தப் போகிறாரோ தெரியவில்லை.

**அலையோவியன்**

*இதழ் 198இல் தணிக்கை அதிகாரியால் தணிக்கை செய்யப்பட்ட செய்தி இது.*

## களுத்துறையிலிருந்து விடுதலை பம்பலப்பிட்டியில் சிறை!

பம்பலப்பட்டியில் வைத்து தனபாலசிங்கம் லால் இதயலால், குணசிங்கம் ரஜனிகாந்த் ஆகிய இரண்டு இளைஞர்களும் ஈ.பி.டி.பியினரால் கைது செய்யப்-பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவ்விரு இளைஞர்களும் தங்கியிருந்த கின்றொஸ் அவனியூ-விலுள்ள கின்றொஸ் இன் என்ற லொட்ஜிக்கு மே 16ம் திகதி இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த ஈ.பி.டி.பி உறுப்பினர்களும், புலனாய்வுப் பிரிவினருமே இவர்களைக் கைது செய்து கொண்டு சென்றதாகவும் தற்போது இவர்கள் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்-பட்டுள்ளதாகவும் தெரிவருகிறது.

களுத்துறைச் சிறைச்சாலையில் இரண்டு வருடங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவ்விரு இளைஞர்களும் அண்மையிலேயே விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இவ்விரு இளைஞர்களுக்கும் புலிகளுக்கு தகவல் தெரிவிப்பவர்கள் என்று ஈ.பி.டி.பியினர் தெரிவித்-தாலேயே தாம் தடுத்து வைத்து விசாரணை செய்து வருவதாக பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

*இச்செய்தியும் தணிக்கை அதிகாரியால் தணிக்கை செய்யப்பட்டிருந்தது. இவ்விரு இளைஞர்களும் இப்போது பம்பலப்பிட்டி பொலிஸாரினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.*


## பாலியல் வல்லுறவு முயற்சி

கடந்த ஜுன் 10ம் திகதி அன்று ஊர்காவற்றுறை பருத்தியடைப்பில் யுவதி ஒருவர் பாலியல் துன்புறுத்-தலுக்கு இலக்காகியுள்ளார்.

சம்பவதினம் காலை யுவதியின் வீட்டுக்காரர்களனைவரும் கோயிலுக்குச் சென்று விட யுவதி மட்டும் வீட்டில் தனியாக இருந்-துள்ளார்.(மாதவிலக்கு காரணமாக). அச்சமயம் மஞ்சள் ரீ சேர்ட்டும் கறுப்புக் காற்சட்டையும் அணிந்த இளைஞர் ஒருவர் வந்து சிங்க-ளத்திலும், தமிழிலும் பேசி தீப்பெட்டி கேட்டாராம். யுவதி வீட்டிற்குள் சென்றபோது யுவதியைத் தொடர்ந்து சென்ற இளைஞர் யுவதியின் வாயைப் பொத்திக் கொண்டு யுவதி மீது பாலியல் வல்லுறவு புரிய முயற்சித்துள்ளார்.

அச்சமயம் யுவதியின் உள்ளாடையில் இரத்தம் காணப்-படவே இரத்தத்தைக் கண்டு பயந்த இளைஞர் தனது எண்ணத்தைக் கைவிட்டுச் ஒடி விட்டார்.

மேற்படி இளைஞர் தமிழ்க் கட்சி ஒன்றின் உறுப்பினரென நம்பப்படுகிறது.




ஆசிரியர்: பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர்: எஸ்.கே.விக்னேஸ்வரன், 19/4, 1/1, நாவல றோட், நுகேகொட. அச்சுப்பதிவு: நவமக, 66/4, தர்மராம றோட், இரத்மலானை. 05.06.2000